பொழிவு - 18
குவிப்பு - 03
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
மார்ச் 2015
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

# விசாரணை செய்யுங்கள்! அறிக்கையை தடுக்காதீர்!

## பிற்போடப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகும்.

### குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபரும் நீதவானும் ஒருவராக இருக்கமுடியாது.

### யாழ் பேரணியில் மன்னார் ஆயர்






சர்வதேசத்தை நம்பியே நாம் விசாரணையைக் கேட்டோம். மைத்திரி அரசு தேவையெனில் உண்மையைக் கண்டறியட்டும். அதன் பின்னர் நீதியைச் செலுத்தலாம். ஆனால் ஐ.நா. விசாரணை அறிக்கை தாக்கல்செய்யப்படுவதை எதற்காகத் தடுக்க வேண்டும்? நம்பிக்கை இல்லை என்பதுதானே அதன் அர்த்தம்? இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என வலியுறுத்தினார் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை.

இலங்கை அரசினால் தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கை திட்டமிட்டபடி மார்ச் 2015இல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி அன்று யாழ் பல்கலைக்கழக சமூகமும் பொதுசன அமைப்புகளும் இணைந்து நடாத்திய பேரணியில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் ஆயர் மற்றும் இறைமக்களுக்கு திருத்தந்தையின் நன்றிக் கடிதம்

அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு,

மடு அன்னையின் திருத்தலத்திற்கான எனது விஜயத்தின்போது நீங்கள் எனக்கு வழங்கிய பெருந்தன்மையான வரவேற்புக்காக உங்களுக்கும், குருக்கள், துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உங்களது விருந்தோம்பலுக்காகவும், எனது வருகைக்கான ஒழுங்குகளை மேற்கொள்ள நீங்கள் எடுத்த பெரும் முயற்சிகளுக்காகவும் நான் உங்களுக்கு நன்றிகூறுகின்றேன்.

மரியன்னையிடம் நாம் ஏறெடுத்த செபங்கள் மறைமாவட்ட இறைமக்களுக்கும், இலங்கை நாட்டின் அனைத்து மக்களுக்கும் அமைதி மற்றும் வலிமை ஆகியவற்றின் பரிசை அறுவடை செய்வதாக அமையும் என நம்புகிறேன்.

எனது செபங்களை உங்களுக்கு வாக்களிப்பதுடன், உங்களுக்கும் உங்களது மேய்ப்புப்பணிக் காவலில் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் எனது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதங்களை வழங்குகிறேன்.

வத்திக்கான் - 21.02.2015 பிரான்சிஸ் - (ஒப்பம்)

## தவக்காலம்!

அருளின் காலம்! ஆன்மீகப் புதுப்பித்தலின் காலம்!



தவக்காலச் சிறப்புக் கட்டுரைகளை 6ஆம் 12ஆம் பக்கங்களில் காணலாம்.

## மடு அன்னையின் ஆதி இருப்பிடமான மாந்தை லூர்து மாதா திருவிழா



மடு அன்னையின் ஆதி இருப்பிடம் எனக் கருதப்படுகின்ற மாந்தைப் பதியில் எழுந்தருளி இருக்கும் மாந்தை லூர்து மாதாவின் வருடாந்தத் திருவிழா கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி காலை 7.00 மணிக்கு சிறப்பாக இடம்பெற்றது.

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழாவையொட்டி முதல் மூன்று நாட்கள் ஆயத்த வழிபாடுகள் இடம்பெற்றன. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# மன்னார் மண்ணில் மலரும் புதிய குருமலர்கள்

### கிளரீசியன் சபைக்கு இருவர்


ம. லியோன் றொகான் பீரிஸ், பேசாலை


ச. யேசுதாசன் (டின்சன்) வஞ்சியன்குளம்

### வாழ்த்துகின்றோம்! வரவேற்கின்றோம்! இறையாசீர் வேண்டுகிறோம்!

மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த பத்து அருட்சகோதரர்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 08ம் திகதி காலை 9.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பேரும், அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த இரண்டு பேரும், கிளரீசியன் சபையைச் சேர்ந்த இரண்டு பேருமே குருக்களாகத் திருநிலைப்படுத்தபடவுள்ளனர். இவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களை, முதல் திருப்பலி பற்றிய விபரங்களை 11ஆம் பக்கத்தில் காணலாம்.

### அமதிகள் சபைக்கு இருவர்


ம. பற்றிக் பிரசாந், பறப்பாங்கண்டல்


சீ. அல்ஸ்ரன் றோச், விடத்தல்தீவு

## Congratulations! மன்னார் மறைமாவட்டத்திற்கு அறுவர்


யே. அமலராஜன் குரூஸ் (டாலி), தலைமன்னார்


பா. றொசான், இத்திக்கண்டல் (அடம்பன்)


இ. நிக்கிலஸ் (நிசாந்தன்), உயிர்த்தராசன்குளம்


நி. மோ. மெயூலன் குரூஸ் (லொயிஸ்ரன்), வங்காலை


பே. சார்லஸ் தயாளன் கூஞ்ஞ, வங்காலை


ப. யோண் ஸ்ரனின் சோசை (சாந்தன்), வங்காலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## சிலுவை பற்றிய சிந்தனைகள்

*மக்களின் மனதில் மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய ஒன்றாக சிலுவை இன்று மதிக்கப்படுகின்றது. சிலுவைப்பாதை, திருச்சிலுவை ஆராதனை உள்ளிட்ட பல பக்திமுயற்சிகளின் மையமாக சிலுவை விளங்குகின்றது. சிலுவையின் வரலாற்றுப் பின்னணியையும், சிலுவை இன்று நமக்குத்தரும் சிந்தனைகளையும் இங்கு நோக்குவோம். இது நமது பக்திக்குப் பலமூட்டும், புத்திக்குப் பொலிவூட்டும்.*

*இன்று நம்மால் பெரிதும் மதிக்கப்படும் சிலுவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பலருக்கு தீரா அவமானத்தின் சின்னமாகவும், கோரமரணத்தின் நுழைவாயிலாகவும் இருந்துள்ளது.*

*குற்றவாளிகளின் குற்றங்களுக்கான தண்டனைகள் நாட்டிற்கு நாடு, காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன. அதிகபட்சத் தண்டனையாக கைதிகளுக்கு விதிக்கப்படுவது மரண தண்டனையே! ஆனால் கொல்லப்படும் முறை நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது. கிரேக்க ஞானி சோக்ரட்டீசை விஷம் கொடுத்து சாகடித்தனர். வீரபாண்டிய கட்டப்பொம்மனை தூக்கிலிட்டுக் கொன்றனர். பலநாடுகளில் சிரச்சேதம் செய்வதே பரவலான வழக்கமாக இருந்துவந்துள்ளது.*

*எந்த ஒரு அரசும் தன் குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனைகளில் இரு நோக்கங்களை உள்ளடக்கி இருக்கும். ஒன்று கொடுமையான தண்டனை மூலம் குற்றத்திற்குத் தக்க தண்டனை தருவது (Punitive), மற்றொன்று குற்றவாளியின் தண்டனையைப் பார்க்கும் பிற மக்களின் மனதில் தண்டனை பற்றிய பயஉணர்வை உருவாக்கி குற்றம் நிகழாது தடுப்பது (Preventive).*

*இக்கருத்து சிலுவைமரச் சாவில் மிகத்தெளிவாய் புலப்படுகிறது. கொடூரமும் அவமானமும் நிறைந்த சிலுவை மரணம் எவராலும் விரும்பப்படாத ஒன்று.*

*மரணதண்டனைக் கைதிகளைச் சிலுவையில் அறைந்து கொல்லும் வழக்கத்தை முதன் முதலில் பெர்சியர்களே (Persians) கண்டுபிடித்தனர். நாளடைவில் இந்த வழக்கம் உரோமையர்களாலும் பின்பற்றப்பட்டது. இவ்வகைச் சாவில் குற்றவாளிகள் மிகக்கொடுமையாகக் கசையால் அடிக்கப்பட்டு, பொது இடங்களில் மக்கள்முன் சிலுவை மரத்தில் அறைந்து கொல்லப்பட்டனர்.*

*தண்டனையின் கொடுமை, அவமானம் இவைகளைக் கருத்தில்கொண்டு உரோமையரசு இவ்வகைத் தண்டனையை தம் உரோமைக் குடிமக்களுக்கு விதிக்கத் தடைவிதித்திருந்தது. இத்தண்டயையின்போது மிகவும் கொடூரமான வேதனையை அனுபவித்து அக்குற்றவாளிகள் இறப்பார்கள் இரத்தம் வெளியேறிய நிலையில் அவர்கள் உயிர் பிரியும். பறவைகள், கழுகுகள் வந்து தலையைக் கொத்தித் தின்னும். இப்படியான குற்றவாளிகள் சபிக்கப்பட்டவர்களாகவே கருதப்படுவர்.*

*அக்காலத்தில் சிலுவையில் அறையப்படுவதில் இரு வழக்கங்கள் இருந்தன. 1. "சிலுவையில் அறையப்படும் இவன் குற்றவாளியாக இருந்தாலும் இவனும் எங்கள் சமூகத்தவனே" என்று ஏற்றுக்கொள்வதன் அடையாளமாக நகரத்திற்கு உள்ளேயே சிலுவையில் அறைவார்கள். 2. "இந்த மனிதனுக்கும் எங்கள் சமூகத்திற்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை" என்பதைக் குறிக்க நகரத்திற்கு வெளியே சிலுவையில் அறைவார்கள். இயேசு நகருக்கு வெளியேதான் சிலுவையில் அறையப்பட்டார்.*

*இன்று நாம் சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்க்கின்றோம். அழகான சாந்தமான இயேசு! ஒரு முள்முடி! சில சொட்டு இரத்தம்! பார்ப்பதற்கு அழகாக அம்சமாக இருக்கிறது! ஆனால் இது அல்ல இயேசுவின் உண்மையான தோற்றம்.*

*இயேசுவின் பாடுகள் எப்படியானது என்பதை 'துன்புறும் ஊழியன்' என்ற பகுதியில் எசாயா இறைவாக்கினர் இப்படி விளக்குகின்றார், "நாம் பார்ப்பதற்கேற்ற அமைப்போ அவருக்கில்லை; நாம் விரும்பத்தக்க தோற்றமும் அவருக்கில்லை. அவர் இகழப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார்: நோயுற்று நலிந்தார்; காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார்." (எசாயா 53: 2ஆ - 3)*

*சிலுவை இன்று நமக்குத் தரும் செய்திகள் பல. கிறிஸ்தவரல்லாத - ஆழ்ந்த இந்து சமயப் பக்தரான - கவிஞர் வாலியின் கவி வரிகள் நமது சிந்தனைக்கு விருந்தாகின்றது.*

*"மரங்கள் தமக்குள் முனகிக்கொண்டன.*
*இந்த மனிதர்கள் நம்மைக்கொண்டு*
*பல சிலுவைகளைச் செய்துவிடுகின்றார்கள்.*
*ஆனால் தம்மைக்கொண்டு அவர்களால் இன்னமும்*
*ஓர் இயேசுவைக்கூடத் தயாரிக்க முடியவில்லையே!"*
*(வாலி, பொய்க்கால் குதிரைகள், 1982)*

*நாம் எவ்வகையில், யாருக்கு சிலுவைகளாக இருக்கின்றோம்? சிலுவைச்சாவின் உண்மையான தாற்பரியத்தை உணர்வோமா? உள்ளம் உருகி உளமாற்றம் அடைவோமா?*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,***
***அன்புடன் அருட்திரு. தமிழ் நேசன்,***
***மன்னா பதிப்பாசிரியர்***

## தவக்கால கல்வாரிப் பாதயாத்திரை கோமரசன்குளம்

**பாதயாத்திரைக் குழு சார்பாக அருட்பணி. எம். ஜெயபாலன் அடிகளார் விளக்கம் தருகின்றார் :**

வருடாந்தம் நடைபெறும் கோமரசன்குளம் கல்வாரியை நோக்கிய தவக்காலப் பாதயாத்திரை இம்முறையும் இடம்பெறும். இது தொடர்பில் பாதயாத்திரைக்குப் பொறுப்பான குழு சார்பாக அருட்பணி. எம். ஜெயபாலன் அடிகளார் மன்னார் மறைமாவட்டப் பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

•இவ்வருட கோமரசன்குளம் கல்வாரிப் பாதயாத்திரை பங்குனி மாதம் 11ம் திகதி புதன்கிழமை அதிகாலை தூய செபஸ்தியார் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆரம்பமாகும்.

பாதயாத்திரிகர்கள் முதல்நாள் இரவு பெரியகட்டிலும், இரண்டாம்நாள் இரவு வவுனியாவிலும் தங்கவைக்கப்படுவர். மூன்றாம்நாள் கல்வாரியில் ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும் கூட்டுத்திருப்பலியோடு இப்பாதயாத்திரை நிறைவடையும். ஆகவே,

1. இப்பாதயாத்திரைபற்றி இறைமக்களுக்கு அறிவுறுத்தி ஆயத்தம் செய்யும்படியாக அன்போடு வேண்டிக்கொள்கின்றோம்.
2. ஒவ்வொரு பங்கும் இரண்டு பொறுப்பான தொண்டர்களைத் தெரிவுசெய்து அவர்களின் பெயர்களை எமக்குத் தரவேண்டும்.
3. பாடசாலை மாணவர்கள் இதில் பங்கெடுப்பது வரவேற்கப்படவில்லை.
4. ஒவ்வொரு நபரும் தலா ரூபா. 300.00 கட்டவேண்டும். (உணவிற்கு மட்டும்)
5. பங்கெடுப்பவர்களின் பெயர்ப்பட்டியல் பணத்தோடு வாழ்வுதயத்திற்கு பங்குனி மாதம் 09ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

## வியாகுல பிரசங்கம் இறுவட்டு விற்பனைக்குண்டு

அருட்பணி. அன்புராசா (அமதி) வின் நெறியாள்கையில் உருவான "வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும்' என்ற பெயரிலான இறுவட்டு விற்பனைக்குண்டு. கலையருவியில் பெற்றுக்கொள்ளலாம்.

## குருக்களுக்கான வருடாந்த தியானம்

மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை மடு தியான இல்லத்தில் இடம்பெற்றது. நற்கருணை நாதர் சபையின் (The Congregation of the Blessed Sacrament) இலங்கை மாகாண முதல்வர் அருட்திரு. டிலான் பெனாண்டோ தியான உரைகளை வழங்கினார்.

## மன்னார் மறைமாவட்டம்
### திருவழிபாட்டு நாட்காட்டி - 2015
#### பங்குனி


11 - கோமரசன்குளம் கல்வாரித் திருத்தல யாத்திரை மன்னார் பேராலயத்திலிருந்து ஆரம்பம்.
13 - கோமரசன்குளம் கல்வாரித் திருத்தல பாதயாத்திரை நிறைவும், திருப்பலியும்.
19 - மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் பெயர்கொண்ட திருவிழா.
- புனித சூசையப்பர் திருவிழா - தாழ்வுபாடு, காத்தான்குளம், இலுப்பைக்கடவை.
20 - ஓலைத்தொடுவாய் - கத்தர் ஆலய பாதயாத்திரையும், திருப்பலியும்.
27 - பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலய பாதயாத்திரையும், திருப்பலியும்.
- கோமரசன்குளம் கல்வாரித் திருத்தல விழா
29 - குருத்தோலை ஞாயிறு - புனித வாரம் ஆரம்பம்.
30 - திருத்தைல மந்திரிப்பு கூட்டுத்திருப்பலி - புனித செபஸ்தியார் பேராலயம் - மாலை 5.00 மணி.

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம். தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## "அவர் என்னைத் தொட்டார். உள்ளத்தில் குணமடைந்தேன்!"
### மடுவில் திருத்தந்தையால் தொடப்பட்டவரின் சாட்சியம்




திருத்தந்தையின் மடு வருகையின்போது அவரது முகத்தைப் பார்த்ததும் மக்கள் குரலொலி எழுப்பி தங்கள் அன்பையும், அளவில்லாத மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர். ஏனெனில் பல வருடங்களாக பல வடுக்களைத் தங்கள் உடலிலும், உள்ளத்திலும் அனுபவித்துக்கொண்டிருந்த அவர்களின் வாழ்வில் ஒளியை கண்டதைப்போல் உணர்ந்தனர்.

திருத்தந்தை அங்கு கூடியிருந்த அனைவரையும் ஆசீர்வதித்தார். விசேடமாக நோயாளிகள், அங்கவீனர்கள், வயதுமுதிர்ந்தவர்கள் என எல்லோரையும் அருகில் சென்று தொட்டு ஆசீர்வதித்தார். அவரின் தொடுதலைப் பெற்றவர்களில் ஒருவரான குணரட்ணம் சபாரட்ணம் என்பவர் தான் குணமடைந்ததை ஊடகத்திடம் கூறியுள்ளார்.

"நான் மருதமடு திருத்தலத்தில் பரிசுத்த திருத்தந்தையின் கரங்களைப் பிடித்துக் குலுக்கியபோது, இறைவனைச் சந்தித்தது போன்ற உணர்வைப் பெற்றேன். திருத்தந்தையின் தொடுதலானது பல ஆண்டுகளாக நான் அனுபவித்த வேதனைகளை அகற்றிவிட்டது. நான் உள்ளத்தால் குணமடைந்துவிட்டேன்" என அவர் கூறியுள்ளார்.

"2006ம் ஆண்டில் எனது தம்பியைப் பார்ப்பதற்காக நான் வன்னிப் பகுதிக்குச் சென்றபோது, போர்ப்பகுதியில் சிக்கிக்கொண்டேன். அப்போது போரிலே எனது கால்கள் குண்டுவீச்சினால் கடுமையாகத் தாக்கப்பட்டது. அத்தோடு எனது குடும்பத்தினரின் தொடர்பையும் இழந்துவிட்டேன். இப்போது நான் வன்னியில் கிளறீசியன் சபையினர் நடாத்தும் மறுவாழ்வு மையத்தில் இருக்கின்றேன்" என்றார்.

## அநுராதபுரத்தில் இடம்பெற்ற உலக சர்வமத ஒற்றுமை வார நிகழ்வு
### மன்னார் பிரதிநிதிகளும் பங்கேற்பு

கடந்த பெப்ரவரி மாதம் 1 - 7ஆம் திகதி வரையிலான ஒரு வாரம் 'உலக சர்வமத ஒற்றுமை வாரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இவ்வாரத்தை நினைவுகூருமுகமாக கடந்த பெப்ரவரி 7ஆம் திகதி அநுராதபுரத்தில் சீபாங் ரெஸ்ற் என்ற விடுதியில் மதத்தலைவர்களுக்கான சிறப்பு மாநாடு இடம்பெற்றது. 'நெய்வர்' என்று அழைக்கப்படுகின்ற நல்லிணக்கத்திற்கான வடக்கு கிழக்கு சர்வமத ஒன்றியம் (NEIFR – North East Interfaith Forum for Reconciliation) இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த, கிறிஸ்தவ, இந்து. இஸ்லாமிய சமயத்தலைவர்கள் கலந்துகொண்டனர்.

'இன்ரநெசனல் அலேட்' என்ற அமைப்பின் அநுசரணையுடன் நெய்வர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின் நோக்கம் மதங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டை உறுதிசெய்வதும், சமயத் தலைவர்கள் என்ற அடிப்படையில் தமது கடந்தகாலச் செயற்பாடுகளைப் புதுப்பித்துக் கொள்வதுமாகும்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, அநுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களிலிருந்து மதத்தலைவர்களும் சர்வமத அமைப்புக்களில் பணியாற்றும் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் மன்னாரிலிருந்தும் சர்வமதப்பிரதிநிதிகள் குழு பங்கெடுத்திருந்தது. இந்த மாநாட்டில் நெய்வர் அமைப்பின் செயலாளரும், மன்னார் சர்வமதப் பேரவையின் இணைத்தலைவருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் சிறப்புரை ஆற்றினார். மாநாட்டின் நிறைவில் சர்வமதத் தலைவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## பிழை திருத்தம்

■ கடந்த பெப்ரவரி மாத மன்னாவில் 9ஆம் பக்கத்தில் "ஆயர் ஒஸ்வோல்ட் ரொமேரோ வேதசாட்சி என அறிவிப்பு" என வெளிவந்த செய்தியில் 'ஒஸ்கார் ரொமேரோ' என்று வந்திருக்க வேண்டும்.


■ அதே பத்திரிகையின் 1ஆம் பக்கத்தில் "திருத்தந்தையின் பிரதிநிதிக்கு மன்னாரில் வரவேற்பு" என்ற செய்தியில் பெப்ரவரி 30ஆம் திகதி என்று தவறுதலாக இடம்பெற்றுள்ளது. அது ஜனவரி 30ஆம் திகதி என வந்திருக்க வேண்டும். தவறுகளுக்கு வருந்துகிறோம்.

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுப்போரின் விளைவுகளை இலங்கை நாடு இன்னும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது!

## தனது ஆசிய விஜயம் குறித்து திருத்தந்தையின் மனப்பதிவுகள்



நீண்டகாலமாகத் தொடர்ந்த உள்நாட்டுப்போரின் விளைவுகளை இலங்கை நாடு இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது என்று திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார். திருத்தந்தை ஆசியாவில் தன் திருப்பயணத்தை முடித்துக்கொண்டு உரோமாபுரி திரும்பியபின் ஆசியாவில் தான் பயணம்செய்த இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகள் குறித்த தனது இனிமையான எண்ண ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டார்.

"இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் நான் மேற்கொண்ட திருப்பயணம், அங்குள்ள கத்தோலிக்க சமூகங்களுடனான மகிழ்வுடன்கூடிய சந்திப்பை உள்ளடக்கியதாக இருந்தது. இலங்கையில் நான் மிகப்பெரும் மறைப்பணியாளர் ஜோசப்வாஸை புனிராக அறிவித்தேன். அந்த நாட்டில் ஏழைகளுக்கான பணியிலும், பிறமத விசுவாசிகளுடன் கொண்டிருக்கும் மதிப்புடன்கூடிய உறவுகளிலும் புனித ஜோசப்வாஸின் பிறரன்புப்பணி எடுத்துக்காட்டுக்கள் இன்னும் தூண்டுதலை வழங்குவதாக உள்ளன.

நீண்டகாலமாகத் தொடர்ந்த உள்நாட்டுப்போரின் விளைவுகளை இலங்கை நாடு இன்னும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது. குணப்படுத்தல், அமைதி மற்றும் ஒப்பரவின் கருவிகளாக அனைத்து மதத்தலைவர்களும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்ற அழைப்பை இலங்கையில் நான் மதத்தலைவர்களுடன் நடத்திய சந்திப்பின்போது விடுத்தேன்.

பிலிப்பைன்ஸ் நாட்டிற்கான எனது திருப்பயணம், அந்நாட்டில் யொலண்டா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுடனான எனது ஒருமைப்பாட்டின் அடையாளமாக இருந்தது. நம்மை ஒருபோதும் ஏமாற்றாத இறைக்கருணையின்மீதான நம்பிக்கையினை தக்லோபான் தீவில் கொண்டாடிச் சிறப்பித்தோம். இறைத்திட்டத்திலும் சமூகத்திலும் குடும்பங்கள் வகிக்கும் முக்கிய அடிப்படையான இடத்தைப் பாதுகாத்து அதனை வாழ்ந்திட வேண்டும் என குடும்பங்களை நோக்கி மனிலாவில் அழைப்பு விடுத்தேன். கூறுபடா நிலையையும், ஏழைகள்மீதான இரக்கத்தையும் கொண்ட ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புமாறு இளைஞர்களுடனான சந்திப்பின்போது அவர்களிடம் விண்ணப்பித்தேன்.

என் திருப்பயணத்தின் இறுதியில் பிலிப்பீனோ மக்களை, அவர்களுக்கு ஆதரவு அளிப்பவரும், பாதுகாவலருமான குழந்தை இயேசுவிடம் ஒப்படைத்தேன். மேலும், பிலிப்பீனோ மக்கள், இந்த மிக உயர்ந்த ஆசியாக் கண்டத்தில் நற்செய்தியின் மதிப்புமிக்க சாட்சிகளாக உறுதியுடன் தொடர்ந்து செயல்படுமாறு வலியுறுத்தினேன்" என்றார்.

## செபங்களைக் காணிக்கையாக்கி துயர் பகிர்கின்றோம்!

- மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. எஸ். கிறிஸ்ரியன் வாஸ் அடிகளாரின் மூத்த சகோதரர் திரு. சந்தியா சவிரியான் வாஸ் அவர்கள் (பறப்பாங்கண்டல்) கடந்த பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி இறைபதமடைந்தார்.
- தச்சனாமருதமடு பங்குத்தந்தையாக இருந்து அண்மையில் மாற்றலாகிச் சென்ற அருட்பணி. பீற்றர் இராஜநாயகம் (அமதி) அடிகளாரின் அன்புத் தந்தை திரு. லியோ செபமாலைநாதன் அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி பிரான்ஸ் நாட்டில் இறைபதமடைந்தார்.
- திருக்குடும்ப சபை அருட்சகோதரியும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலையின் அதிபருமான அருட்சகோதரி திரேசம்மா சில்வா அவர்களின் அன்புத் தாயார் திருமதி. கிறிஸ்தோகு ஞானம்மா டபரேரா அவர்கள் (கொவ்வங்குளம், நானாட்டான்) கடந்த ஜனவரி மாதம் 3ஆம் திகதி இறைபதமடைந்தார்.
- திருக்குடும்ப சபைச் சகோதரியும், தற்போது இங்கிலாந்தில் பணியாற்றுபவருமான அருட்சகோதரி லுசிலா பாலானந்தம் அவர்களின் அன்புத் தந்தையார் திரு. பெ. பாலானந்தம் (நானாட்டான்) அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் திகதி இறைபதமடைந்தார்.

**தமது அன்புக்குரிய உறவுகளை இழந்துநிற்கும் அனைத்துக் குருக்கள் மற்றும் துறவியருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பான ஆழ்ந்த இரங்கலை மன்னா தெரிவித்துக்கொள்கிறது. இறந்த ஆன்மாக்கள் இறைவனின் அமைதியில் இளைப்பாறச் செபிப்போம்.**

### இலங்கையின் முதல் கத்தோலிக்க தொலைக்காட்சி சேவை!

## வேர்பும் தொலைக்காட்சி ஆரம்பிப்பு

இலங்கையின் முதல் கத்தோலிக்க தொலைக்காட்சி சேவையான வேர்பும் தொலைக்காட்சி சேவை (VERBUM T.V. Channel) கடந்த ஜனவரி மாதம் 30ந் திகதி கொழும்பு பேராயர் இல்ல கேட்போர்கூடத்தில் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுவரை பியோ ரி.வி. (PEO TV 93) மற்றும் டயலொக் ரி.வி. (DIOLOG TV 83) ஊடாக ஒளிபரப்பப்பட்டுவந்த கத்தோலிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இனிமேல் இந்தத் தொலைக்காட்சி சேவை ஊடாக இடம்பெறும்.

அன்றைய தினம் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் ஆசீர்வழங்கி இந்தத் தொலைக்காட்சிச் சேவையை ஆரம்பித்துவைத்தார்.

## கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் 6,000 க்கும் மேற்பட்ட மக்கள்

### இந்தியாவிலிருந்து பெருமளவானோர் வருகை

கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் இந்த ஆண்டுக்கான திருவிழா சிறப்பாக நடைபெற்றதுடன் இதில் 6,000க்கும் மேற்பட்ட இலங்கை இந்திய மக்கள் பங்குபற்றியிருந்தனர்.

நாட்டின் இரு தசாப்தங்களுக்கும் மேலான அசாதாரண சூழ்நிலை காரணமாக கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெறாதிருந்த நிலையில் மீண்டும் 2010ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது.

போருக்குப் பின்னரான 6ஆவது திருவிழா கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி அன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இதையடுத்து சனிக்கிழமை மாலை சிலுவைப்பாதை நடைபெற்ற நிலையில் கடந்த 01.03.2015 அன்று ஞாயிற்றுக் கிழமை காலை திருவிழா நடைபெற்றது. இதில் 6,000க்கும் மேற்பட்ட இரு நாட்டையும் சேர்ந்த பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

திருவிழாத் திருப்பலியை யாழ் குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசமும், தமிழ்நாடு பாளையங்கோட்டையைச் சேர்ந்த அருட்தந்தை ஜோமிஸ், மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை எஸ்.கே. தேவராஜா மற்றும் நெடுந்தீவு பங்குத்தந்தை நேசன் ஆகியோர் ஒப்புக்கொடுத்தனர். இதையடுத்து விழா சிறப்பாக நடைபெற்றமைக்கு நன்றிதெரிவிக்கப்பட்டு கொடி இறக்கப்பட்டது.



திருவிழாவுக்கான ஏற்பாடுகள் நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்களால் மேற்கொள்ளப்பட்ட அதேசமயம் தமிழ்நாட்டு பாடகர் குழு பாடல்களைப் பாடியது. இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய பிரதித்தூதுவர் கே. நடராஜனும் கடற்படைத்தளபதி சரத் விஜயகுணசேகரவும் பங்குபற்றினர்.

இந்தியாவில் இருந்து 110 படகுகளில் 4003 பக்தர்களும் மற்றும் இருநாட்டு அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் பலரும் இலங்கையின் பல பாகங்களிலிருந்து 2000க்கும் மேற்பட்டோரும் இத்திருவிழாவில் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அன்னை தெரேசா பற்றிய அவதூறுக்கு பாப்பரசர் மறுப்புத் தெரிவிப்பு



இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் ஆர். எஸ். எஸ். தலைவர் மோகன் பகவத் கலந்துகொண்டு பேசியபோது "அன்னை தெரேசாவின் சேவைகள் நன்றாக இருக்கலாம். ஆனால், சேவைசெய்து மதமாற்றம் செய்வதை அவர் நோக்கமாகக் கொண்டிருந்தார்" என்று தெரிவித்தார்.

அன்னை தெரேசா குறித்து ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் பேசிய கருத்துக்கு பாப்பரசர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

புனிதமான கிறிஸ்தவசமயத் துறவியின் சேவையை அரசியலாக்கக்கூடாது. முத்திப்பேறுபெற்ற அன்னை தெரேசா சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட ஏழை, எளிய மக்களின் நம்பிக்கை வழிகாட்டியாகவும், கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்தார். அவரது வாழ்க்கை உலக மக்களுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

அன்னை தெரேசா குறித்த மோகன் பகவத்தின் அந்தக் கருத்து வெளிப்பாடு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. காங்கிரஸ் உட்பட பல அரசியல் கட்சிகளும் கிறிஸ்தவ அமைப்புகளும் அந்தக் கருத்து வெளிப்பாடு குறித்து கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்திய ஆயர் பேரவையும் இந்தக் கருத்துக்கு தனது மறுப்பையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

## கனடா தூதுவர் - மன்னார் ஆயர் சந்திப்பு

இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களை மன்னார் ஆயர் இல்லத்தில் மரியாதையின் நிமித்தம் சந்தித்தார்.


இச்சந்திப்பின்போது தற்போதைய மாவட்ட நிலமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. வருகைதந்த உயர்ஸ்தானிகர் அவர்களுக்கு ஆயர் அவர்கள் மதிய போசனம் அளித்து கௌரவித்தார்.

## இலங்கைவரும் இந்திய பிரதமர் மோடி தலைமன்னார் பியருக்கும் செல்வார்?

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான விஜயத்தின்போது தலைமன்னார் பகுதிக்கும் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன் இதற்கான ஒழுங்குகளையும் அதிகாரிகள் நேரடியாகப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இந்தியப் பிரதமர் மோடி இலங்கை அரசாங்கத்தின் அழைப்பையேற்று மார்ச் மாதம் இலங்கைக்கு வருவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய பிரதமர் இலங்கைக்கு வரும் சமயம் அவர் தலைமன்னார் பியர் பகுதிக்கும் விஜயத்தை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## Happy Feast day



மார்ச் மாதம் 19ஆம் திகதி புனித சூசையப்பர் திருவிழா அன்று தனது பெயர்கொண்ட புனிதரின் திருவிழாவைக் (Feast day) கொண்டாடும் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்டக் குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரினதும் நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்ச்சியடைகின்றது.

**Ad multos annos!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவர்கள் என்பதாலேயே இன்று பலர் துன்புறுத்தப்படுகின்றனர்

# இதுவே இரத்தக் கிறிஸ்தவ ஒன்றிப்பு!

### கிறிஸ்தவ ஒன்றிப்புவார நிறைவுநாள் நிகழ்வில்

## திருத்தந்தை

இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் என்பதற்காகவே எல்லாக் கிறிஸ்தவ சபைகளைச் சார்ந்தவர்களில் பலர் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படுகின்றனர். இதுவே இந்நாளில் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் இரத்தக் கிறிஸ்தவ ஒன்றிப்பு என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

ஜனவரி மாதம் 18ம் திகதி முதல் 25ம் திகதி வரை உலக கிறிஸ்தவசபைகள் கடைப்பிடித்த கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் நிறைவாக, ஜனவரி 25ம் திகதி ஞாயிறு மாலை உரோம் புனித பவுல் பசிலிக்காவில் திருவழிபாட்டைத் தலைமையேற்று நடத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்.

கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது இது குறித்த கலந்துரையாடலில் ஈடுபடும் ஒவ்வொரு குழுவும் தனது கருத்து ஏற்றுக்கொள்ளப்படுதற்கு முயற்சிக்கும் நுட்பமான கொள்கைமுறை உரையாடல்களின் பலன்களால் வருவது அல்ல, மாறாக, நம்மை ஒன்றிணைப்பது எது என்பதை அதிகமாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்வதற்கு வழிகளைத் தேடுவதாகும் என்று திருத்தந்தை கூறினார்.

வானகத்தந்தையாம் கடவுளின் அன்பு, தமது மகன் மூலம் தூய ஆவியார் வழியாக, வெளிப்படுத்தப்பட்டதைப் பகிர்ந்துகொள்வதற்குக் கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதைக் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மிடையே காணப்படும் பிரிவினைகளைக் களைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுத்து உரையாற்றினார்.



இந்த மாலைத் திருவழிபாட்டில், கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தையின் பிரதிநிதி பேராயர் ஜெனாடியோஸ், கான்டர்பரி ஆங்கிலிக்கன் பேராயரின் பிரதிநிதியான உரோமையிலுள்ள ஆயர் டேவிட் மொக்சன் உட்பட பிற கிறிஸ்தவ சபைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில்

# புத்தாக்கப் பயிற்சிப் பட்டறை

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சிப் பட்டறை ஒன்று இடம்பெற்றது. கவிதை, சிறுகதை மற்றும் நாடகம் படைப்பது தொடர்பான இந்த ஒரு நாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை மன்னார் கீரி கிராமத்தில் உள்ள வை. எவ். சி மண்டபத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் 17ஆம் திகதிகளில் இடம்பெற்றது. மன்னார் வேள்ட் விசன் நிறுவனம் இந்தப் பயிற்சிக்கான அநுசரணையை வழங்கியிருந்தது. இதில் 13 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட நாற்பது சிறுவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

16ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகிய இப்பயிற்சிப் பட்டறையை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் ஆரம்பித்துவைத்தார். மன்னார் வேள்ட் விசன் நிறுவனத்தின் அதிகாரி திரு. செல்வா அவர்கள் ஆரம்ப உரையாற்றினார். தொடர்ந்து கவிதை பற்றிய பயிற்சி வகுப்பு இடம்பெற்றது. இதை மன்னார் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் கவிஞர் மன்னார் அமுதன் அவர்கள் நெறிப்படுத்தினார். அடுத்த நாள் காலையில் நாடகம் எழுதுவது மற்றும் நடிப்பது தொடர்பான பயிற்சி வகுப்பை நாடக ஆசிரியரும் நாவலாசிரியருமான திரு. எஸ். ஏ. உதயா அவர்கள் நடாத்தினார். அதனைத் தொடர்ந்து சிறுகதை எழுதுவது தொடர்பான பயிற்சியை மன்னார்த் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் எழுத்தாளருமான திரு. எம். சிவானந்தன் அவர்கள் வழங்கினார். மாலை 5.00 மணியளவில் இந்தப் புத்தாக்கப் பயிற்சிப் பட்டறை நிறைவுபெற்றது.

இதில் கலந்துகொண்ட மாணவர்கள் இப்பயிற்சிப்பட்டறை தமக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது எனக் கருத்துத் தெரிவித்தனர். இதுபோன்ற இன்னும் பல புத்தாக்கப் பயிற்சிப் பட்டறைகளை வேள்ட் விசன் நிறுவனத்தின் உதவியோடு எதிர்காலத்தில் மன்னார் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கவுள்ளது.

# சிறைக்கைதிகளை உடன் விடுதலை செய்யுங்கள்

### யாழ் நீதி, சமாதான ஆணைக்குழு வேண்டுகோள்

யாழ் மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு யாழ் மறைமாவட்டக் குருக்கள் சிலரதும் சில இந்துசமயப் பிரமுகர்களதும் ஆலோசனைகளுக்கமைய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பிரகடனப்படுத்தியுள்ள 100 நாள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய பல முக்கியமான விடயங்களை பரிந்துரைத்துள்ளது.

இப்பரிந்துரைகளில் சிறைகளிலும் தடுப்புமுகாம்களிலும் உள்ளோரை விடுதலை செய்தல், காணாமல்போனோர்பற்றித் தீர்வுகாணல், மீள்குடியேற்றங்களை துரிதப்படுத்தல் மற்றும் மீனவர் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம், போதைவஸ்துப் பாவனைச் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு, நிலத்தடி நீர் மாசடைதல் போன்ற விடையங்களுக்கு முன்னுரிமை கொடுத்து தேவையான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## மன்னாரின் அண்மைக்கால கலை இலக்கிய நிகழ்வுகள்

### தீம்தனனா

கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திகதி 'தீம்தனனா III' என்ற பரத நடன நிகழ்வு மன்னார் நகரமண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். இந்தியத் துணைத் தூதரகமும், யாழ் திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடாத்திய இந்நிகழ்வில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

### குருசேத்திரம்

கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களின் நெறியாள்கையில் வவுனியா மாவட்ட ஆடல் அணியினர் நடாத்திய குருசேத்திரம் என்ற கீழைத்தேய ஆடல் கதை நிகழ்வு கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது. மன்னார் ஆயர் அவர்களும் இதில் கலந்துகொண்டார்.

### பாரதி விழா

மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றம் நடாத்திய பாரதி விழா கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி மன்னார் நகர மண்டபத்தில் மன்றத் தலைவர் பிரம்மஸ்ரீ மஹா தர்மகுமார சர்மா குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

## செபங்களைக் காணிக்கையாக்கி துயர் பகிர்கின்றோம்!

- யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரீக துறைத் தலைவரும் பேராசிரியருமான அருட்பணி ஞா. பிலேந்திரன் மற்றும் கனகராயன் குளம் பங்குத்தந்தையாக புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அருட்பணி. ஞா.வென்சஸ்லோஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையார் திரு. செபஸ்தி ஞானமுத்து அவர்கள் கடந்த 28.12.2014 அன்று காலமானார்.

- இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்பணி. ஜே. ஏ. யேசுதாஸ் அடிகளின் அன்புத் தந்தையார் திரு. யோசப் அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடந்த 01.01.2015அன்று காலமானார்.

- அமெரிக்காவில் உயர்கல்வியை மேற்கொள்ளும் அருட்பணி. எம். டேவிட் அடிகளாரின் பாசமிகு தந்தை திரு. இறப்பியேல்பிள்ளை இவர்கள் கடந்த 22.01.2015 அன்று கனடாவில் காலமானார்.


- செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த அருட்பணி. செ. பிரான்சிஸ் அவர்களின் அன்புமிகு தந்தையார் திரு. தேவசகாயம் செபமாலை அவர்கள் கடந்த 26.12.2014ல் காலமானார்.

**தமது அன்புக்குரிய உறவுகளை இழந்துநிற்கும் அனைத்துக் குருக்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பான ஆழ்ந்த இரங்கலை மன்னா தெரிவித்துக்கொள்கிறது. இறந்த ஆன்மாக்கள் இறைவனின் அமைதியில் இளைப்பாறுவார்களாக!**

## மாந்தை லூர்து அன்னை திருத்தலம்

### சில வரலாற்றுக் குறிப்புகள்!

### - அன்று தொடக்கம் இன்றுவரை -



மன்னார் மறைமாவட்டத்தின் அடம்பன் பங்கு நிர்வாகத்துக்குள் வரும் மாந்தை லூர்து அன்னை திருத்தலம் மன்னார் - யாழ் நகரை இணைக்கும் பூநகரி வீதியில் மன்னாரிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

மன்னாரின் புகழ்பூத்த புராதன துறைமுகமான மாதோட்டப்பகுதியே மாந்தைப் பிரதேசமாகும். இலங்கையின் மன்னராட்சி காலப்பகுதியிலிருந்தே புவியியல் மற்றும் சமய ரீதியான செல்வாக்கினையும் நூற்றாண்டுகள் பழமையான வரலாற்றையும் கொண்டது இவ்விடம்.

**வரலாறு:** கி. பி. 1505இன் பின் போர்த்துக்கேயரிடமிருந்து கத்தோலிக்க விசுவாசத்தை பெற்றுக்கொண்டு 1544ல் மன்னாரில் சங்கிலியன் மன்னனுடைய வேதகலாபனைக்கு தப்பிய மக்களில் சிலர் மாதோட்டப் பகுதியில் குடியேறினர். அரைநூற்றாண்டின்பின் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் கத்தோலிக்கருக்கெதிரான கலாபனையை ஆரம்பித்தபோது மாந்தைப் பகுதிவாழ் மக்கள் அன்னைமரியின் அற்புத சுரூபத்தை தூக்கிக்கொண்டு கண்டி இராட்சியத்திற்குட்பட்ட காட்டிலே தஞ்சம் புகுந்து அன்னையின் திருச்சுரூபத்தை கொலுவேற்றினர். இவ்விடமே தற்போது மருதமடுத் திருத்தலமாக தோற்றமளிக்கின்றது.

**திருவிழா:** மாசி மாதம் 11ம் திகதிக்கு (லூர்து அன்னை திருவிழா) பின்வரும் சனிக்கிழமை கொண்டாடப்படுகின்றது. ஆயத்தநாள் வழிபாடுகள் பள்ளிமுனை, தாழ்வுபாடு, பேராலயம், வங்காலை போன்ற அயல் பங்குகளால் சிறப்பிக்கப்படுகின்றன.

**ஆலயம்:** போர்த்துக்கேயர் காலத்து ஆலயம் கைவிடப்பட்டு தகர்ந்துபோனதற்குரிய ஆதாரமான முருகைக்கல் கட்டடத்தின் சிறு பகுதி இன்றும் பாதுகாக்கப்படுகின்றது. 1956ல் லூர்து அன்னைக்கென கெபி கட்டப்பட்டுள்ளது. 1980ல் ஆலய கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டாலும் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. உள்நாட்டு யுத்தத்தின்போது மன்னார் பேராலயப் பங்கின் தாபரிப்பின்கீழ் இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வந்தன. 2010ம் ஆண்டு திருவிழாவுடன் மாந்தைப்பகுதி மீண்டும் அடம்பன் பங்கிற்கே பொறுப்பளிக்கப்பட்டது. கடந்த 23.02.2013 அன்று இடம்பெற்ற லூர்துபதி திருவிழாவுடன் ஆயர் பேரருட்திரு. இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


கலைப்பணியில் 50 ஆண்டுகள் (1965 - 2015)

## யாழ். திருமறைக் கலாமன்றம்



தயாரித்து வழங்கும்



## தவக்கால ஆற்றுகை

# அன்பில் மலர்ந்த அமரகாவியம்

(திருப்பாடுகளின் காட்சி)

காலம்: மார்ச் 26, 27, 28, 29 - 2015
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு) - நான்கு நாள்களுக்கு -
நேரம்: மாலை 6.45 மணி.
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை
யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்



இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 222 2393


## அடுத்த மன்னா ஈஸ்ரர் சிறப்பிதழ்

உங்கள் ஆக்கங்களை உடனே அனுப்பிவையுங்கள்.
சுவையாக, சுருக்கமாக எழுதுங்கள்.
தரம் கண்டு பிரசுரிப்போம்.

எமது மின்னஞ்சல் முகவரி:
mannanews2000@gmail.com

- மன்னா நிர்வாம் -


# DIPLOMA IN NURSING (2 YEARS)

## HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE

விண்ணப்ப முடிவுதிகதி : 10.04.2015

நான்கு மாதங்களுக்கான ஆங்கிலப் பயிற்சியுடன் தாதியப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படும். க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 'திருச்சிலுவை சுகாதார விஞ்ஞானப் பாடசாலை, இல.767/ 4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

- பணிப்பாளர் - (தொலைபேசி இல: 021 300 1102, 077 115 9391)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# உண்மையை மறைக்கவே உள்ளக விசாரணை!

## சாடுகின்றார் மன்னார் ஆயர்



புதிய அரசு நடத்தும் உள்ளக விசாரணை என்பது உண்மையை கண்டறிவதற்கானது அல்ல. அது உண்மையை மறைப்பதற்கான ஏற்பாடாகும். இதற்காகவே இலங்கை அரசு ஓடி ஓடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை.

உண்மையின், நீதியின் அடிப்படையில் தமிழர் பிரச்சினையை அணுகுவதன் ஊடாகவே நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியும். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹிட்லர் மேற்கொண்டதைப்போல துப்பாக்கியால் சுட்டுக்கொன்று அழிப்பது மாத்திரம் இன அழிப்பல்ல என்று தெரிவித்த ஆயர், பல்வேறு நுட்பமான நடவடிக்கைகள் மூலமும் ஒரு இனத்தை அழிக்கலாம். சிங்கள மக்களிடம் உள்ள அதிஉச்சமான சிங்களத் தேசிய உணர்வின் அச்சத்தால் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன எனவும் ஆயர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தனித்துவமான சுய நிர்ணய உரிமைகொண்ட தேசிய இனம் என்று தெரிவித்த மன்னார் ஆயர், தமிழ் மக்களின் தேசிய உரிமைகளுக்கு இடமளிப்பதன் மூலமே இந்த நாட்டை அமைதிப்படுத்த இயலும். இலங்கை சுதந்திரம் அடைந்தது என்ற விடயத்தில் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் என்பது ஒரு மாயையாகத் திணிக்கப்பட்டது. தமிழ் மக்கள் இன்னமும் சுதந்திரத்தை அடையாத நிலையில் வாழ்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நிறுத்திய இலங்கை அரசு, தமிழ் இனத்திற்கு எதிரான போரை இன்னமும் நிறுத்தவில்லை. தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராகவும் அபிலாஷைகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மொழி மற்றும் நில அபகரிப்பு என்பது உலக சரித்திரத்தில் ஓர் இனம் எவ்வாறு அழிக்கப்பட்டதோ அவ்வாறே நடைபெறுகின்றது. இலங்கையில் நான்கு தடவைகள் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவர நடவடிக்கைகள், இனஅழிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டமைக்கப்பட்ட அந்த இன அழிப்பு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் போரில் கொல்லப்பட்ட பின்னர் தொடர்ந்தும் இந்த நாட்டில் தமிழ் மக்களை வாழவிடாது வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலைமையை உருவாக்கியதுடன், அரசே அவ்வாறு மக்களை அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டது. சர்வதேச விசாரணை அறிக்கையைத் தள்ளிப்போடுவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. எனினும், செப்ரெம்பர் மாதம் கட்டாயம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதனை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத் திருவிழா


மன்னார் மறைமாவட்டத் தவக்காலத் திருத்தலங்களில் ஒன்றான ஆட்காட்டிவெளிப் பங்கில் அமைந்துள்ள பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத் திருவிழாத்திருப்பலி மார்ச் மாதம் 27ஆம் திகதி காலை 7.30 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.


தொடர்ந்து அன்றைய தினம் வருகைதரும் இறைமக்களின் நலன்கருதி காலை 10.00 மணிக்கும், மதியம் 12.00 மணிக்கும், மாலை 4.00 மணிக்கும் திருப்பலிகள் இடம்பெறும். மதியம் 1.00 மணிக்கு பாரம்பரிய ஆசந்தியும், திருப்பாடுகளின் சடங்கும் இடம்பெறும்.

இத்திருவிழாவுக்கு ஆயத்த நாள் வழிபாடுகளாக 24ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை தினமும் மாலை 4.45 மணிக்கு சிலுவைப்பாதையும் தொடர்ந்து திருப்புலியும் இடம்பெறும். இவ்விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை அருட்பணியாளர் டெஸ்மன் அஞ்சலோ தலைமையில் பங்கு மக்களும் ஆலய நிர்வாகத்தினரும் மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்விழாவுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும், திருவிழா நாட்களில் விளையாட்டு வினோதப்பொருட்களின் விற்பனைகள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

# வங்காலை ஆலய வளாகத்தில் சிலுவைப்பாதை திருவுருவங்கள்





வங்காலைப் பங்கில் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன் அடிகளாரின் முன்னெடுப்பில் ஆலய வளாகத்தில் பிரமாண்டமான சிலுவைப்பாதை நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பங்கு மக்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சிலுவைப்பாதை நிலைகள் மக்களின் வழிபாட்டிற்காகக் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அன்றைய தினம் திருச்சிலுவைப்பாதையும் இடம்பெற்றது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கல்வாரிக்காட்சியில் பங்குத்தந்தை ஜெயபாலன் அடிகளாருடன் உதவிப்பங்குத்தந்தை கொட்வின் கமிலஸ் (சணா) அடிகளாரும் இணைந்து தவக்கால மறையுரைகளுடன் சிறப்புத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள். பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வுகளில் பங்குகொண்டனர்.

தகவல்: திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்

# இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து மன்னாரில் ஆர்ப்பாட்டம்

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதைக் கண்டித்து மன்னார் மாவட்ட மீனவ சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மீனவ சம்மேளனத் தலைவர் அல்பிரட் ஜஸ்ரின் சொய்சா தலைமையில் மன்னார் பிரதான பாலத்தடியில் இருந்து காலை 10.00 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

இதில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவக் கிராமங்களையும் சேர்ந்த மீனவர்கள் தொழில்களுக்குச் செல்லாமல் கலந்துகொண்டிருந்தனர்.


# கல்வாரித் திருத்தலம்

பெரிய கோமரசன்குளம், வவுனியா.

## தவக்கால கல்வாரித் திருத்தல வழிபாடுகள்



"மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார், நம் துன்பங்களைச் சுமந்துகொண்டார்" (எசாயா: 53:4)

11.03.2015 பாதயாத்திரை. மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலிருந்து ஆரம்பம் - காலை 5.30 மணி.

13.03.2015 சிலுவைப்பாதை தியானம் காலை 9.00 மணி
திருப்பலி - காலை 11.00 மணி

(அதிவந்தனைக்குரிய கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்)

27.03.2015 தவக்கால 6ம் வெள்ளிக்கிழமை வழிபாடுகள்
திருப்பலி காலை 7.00 மணி, தொடர்ந்து நற்கருணை எழுந்தேற்றமும், ஆராதனையும் நடைபெறும்.

மாலை 3.00 மணிக்கு நற்கருணை ஆசீர்வாதம் இடம்பெறும்.
தொடர்ந்து

**சிலுவைப்பாதைத் தியானமும், திருப்பலியும்** நடைபெறும்.

இரக்கம் நிரம்பும் இறையருட் காலம் இதுவே! வருவீர் அருள்பெறுவீர்!

தவக்காலத்தில் வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாலை 4.00 மணிக்கு சிலுவைப்பாதைத் தியானமும், திருப்பலியும் இடம்பெறும்.

பெரிய கோமரசன்குளம், வவுனியா. பங்குத்தந்தை, பங்கு மக்கள்.


# வங்காலையில் புதிய பங்குமனைக்கான அடிக்கல்



வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்தின் புதிய பங்குமனைக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு கடந்த 01.02.2015 ஞாயிறு அன்று இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து வங்காலைப் பங்குத்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகளும் உதவிப்பங்குத்தந்தை கொட்வின் கமிலஸ் (சணா) அடிகளாரும் அடிக்கற்களை நாட்டினார்கள்.

ஆயர் அவர்களின் செபவழிபாட்டு ஆசீருடன் பங்குமக்களால் ஆனாள் அன்னையின் ஆசீர்நிறைந்த பாடல் பாடப்பட்டு நிகழ்வு இனிது நிறைவேறியது.

வங்காலைப் பங்கில் பல ஆண்டுகளாக புதிய பங்குமனைக்கான தேவை உணரப்பட்டுவந்த நிலையில் இந்த ஆண்டு புதிய பங்குமனையைக் கட்டுவதற்கான முயற்சி பலதரப்பாலும் முன்வைக்கப்பட்டு செயல்வடிவம் பெறவுள்ளது.

# புனித லூசியா மகாவித்தியாலயத்திற்கு அமைச்சர் டெனீஸ்வரன் உதவி

மன்னார் பள்ளிமுனை மன்/புனித லூசியா மகா வித்தியாலயத்தில் இருந்து இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களுக்குள் வருபவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என உறுதி அளித்துள்ளார் வடக்கு மாகாண சபை மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன்.

தனது பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து மடிக் கணனி, பல்லூடகக் கருவி, அதற்கான திரை என்பவற்றையும் அவர் பாடசாலை அதிபர் கலாதரன் பிகிராடோவிடம் கையளித்தார். இந்நிகழ்வில் பள்ளிமுனைப் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஸ்ரீபன்ராஜா அடிகளாரும் கலந்துகொண்டார்.

**மன்னா விநியோகஸ்தர்களே!**
**உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!**
- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lent. a season of spiritual preparation | தவக்காலச் சிறப்பிதழ் | Lent. a season of spiritual preparation

# தவக்கால விழுமியங்கள்

*"கடவுள் வடிவில் விளங்கிய அவர், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பாகி, மனித உருவில் தோன்றி, சாவை அதுவும் சிலுவைச் சாவை ஏற்று கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்... மரித்தார்..."*

*(பிலி 2: 6-8)*

## உலகையே புரட்டிப்போட்ட இயேசுவின் மரணம்!

ஆதிப்பெற்றோர் ஊனுடலின் இச்சையினால் எப்போது பாவத்தில் விழுந்தார்களோ அன்றுதொட்டு, உலகம் உள்ளவரை மனுக்குலம் செய்த பாவத்திற்குப் பலியாக அடிமையின் உருவான மனித உடலை இயேசு ஏற்றார் (பிலி 2:7). தம்மை திருச்சட்டத்திற்கு உட்பட்டவராக்கிக்கொண்டார் (கலா 4:5). சபிக்கப்பட்டவரானார் (கலா 3:13). பாவ உருவானார் (2 கொரி 5:21). இறுதியாக மரணத்திற்குத் தன்னையே கையளித்து இறந்தார்.

அவரது உறுதியான இறுதியான மரணம், பாவ மரணத்திற்குச் சாவுமணி அடித்தது. அவரை வீழ்த்த நினைத்த எதிர்சக்தி மரணத்தைக் கவ்வியது. அவரைச் சிலுவையிலறைந்த சக்திகள், வலிமை இழந்து அடிமைநிலையைக் கவ்வியது. அவர் பாவத்தைத் தண்டித்தார் (உரோ 8:3). சட்டத்தின் சாபத்தை ஆசியாக மாற்றினார் (எபே 2:15). நம்மை அடிமை நிலையிலிருந்து விடுவித்ததோடு தம்முள் ஒன்றிணைத்துக் கொண்டார். அவரது மரணம் உலகையே புரட்டிப்போட்டது. வரலாற்றை மாற்றியமைத்தது, புது வரலாறானது. அம்மாபெரும் சகாப்தத்தைக் கொண்டாடும் வெற்றியின் காலமே தவக்காலம்.

## சாம்பல் பூசுதல் துக்கத்திற்கு அடையாளம்

"மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய். மண்ணுக்கே திரும்புவாய்" அல்லது "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்று தொடங்கும் சாம்பல் புதன் முதல் பெரிய சனி வரை சிறப்பிக்கப்படும் இத்தவக்காலம் கடவுளுக்கு மிக அருகில் நம்மை அழைத்துச்செல்லும் அருளின் காலம் எனலாம். திருவிவிலியம் முழுவதும் சாம்பல் பூசுதல் என்பது துக்கத்திற்கும், மனவருத்திற்கும், மனமாற்றத்திற்கும் அடையாளமாகக் கூறப்படுகிறது.





நினிவே மக்கள் கடவுளின் செய்தியை இறைவாக்கினர் யோனா வாயிலாகக் கேட்டபோது, "சாக்கு உடை உடுத்திக்கொண்டு சாம்பல்மீது உட்கார்ந்தனர்" (யோனா 3:6-8). பாரசீக மன்னர் அர்த்தக்சஸ்தா மன்னரின் ஆட்சியில் மொர்தெக்காய் மாசற்ற தம் யூத இனம் அழியப்போவதை உணர்ந்து, சாக்கு உடை அணிந்துகொண்டு தம்மேல் சாம்பலைத் தூவிக்கொண்டு (எஸ் 4:1) நகரின் தெருக்கள் வழியாக ஓடினார். சாவுக்குரிய துன்பத்தில் துடித்த எஸ்தர் அரசி தம் இனத்தை மீட்க, தம் தலைமீது சாம்பலையும் சாணத்தையும் இட்டுக்கொண்டு ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்து (எஸ் 4:17) மன்றாடினார். அசீரியத் தளபதி ஓலோபெரின் படையெடுப்பும், தம் இனம் பிற இனத்தார் கையில் ஒப்படைக்கப்படப்போவதையும் உணர்ந்து மெராரியின் மகள் யூதித்து குப்புற விழுந்து தலையில் சாம்பலைத் தூவிக்கொண்டு (யூதி 9:1) உரத்த குரலில் மன்றாடினார்.

தாமார் தன் சகோதரன் அம்னோனால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டபின் அரச மகளிரின் பல்வண்ண நீண்ட ஆடையைக் களைந்து, தன்மீது சாம்பல் தூவி (2 சாமு 13:19) தலைமீது கைவைத்து அழுதுகொண்டே சென்றாள்.

இறைவாக்கினர் எரேமியா காலத்தில் சிறியோர், பெரியோர், குருக்கள் இறைவாக்கினர் அனைவரும் தவறான வழிகளை விட்டுவிலகாது சடங்குகளால், வழிபாடுகளால் ஆண்டவரை அமைதிப்படுத்த முயலுகின்றனர்.

தவறான வாழ்வை மாற்றியமைக்காதவரை, தண்டனைத் தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியாது என்பதை உணர்த்தும் எரேமியா இறைவாக்கினர், "சாக்கு உடை உடுத்துங்கள், சாம்பலில் புரளுங்கள். இறந்த ஒரே பிள்ளைக்காகத் துயருற்று அழுவதுபோல் மனமுடைந்து அழுது புலம்புங்கள்" (எரே 6:26) என்று அழைப்புவிடுக்கிறார்.

யூதர்களைப் பொறுத்தவரை ஆலயமே அவர்கள் வாழ்வில் மையமாக இருந்தது. ஆலயம் அழிந்தால் தங்கள் வாழ்வும், மாண்பும், கலாச்சாரமும், இலட்சியப் பிடிப்பும் அழிந்துபோகும் என்பதை உணர்ந்த யூதர்கள், மக்கபேயர் காலத்தில் யூதா தலைமையில் எருசலேமுக்கு எதிரில் இருந்த மிஸ்பாவுக்குச் சென்று, "சாக்கு உடை உடுத்தித் தலைமீது சாம்பலைத் தூவி" (1 மக் 3:47) விண்ணக இறைவனை நோக்கி உரத்த குரல் எழுப்பி மன்றாடினார்.

ஆக, திருவிவிலியம் முழுவதுமே சாம்பல் பூசுவது என்பது துக்கத்தையும், மன வருத்தத்தையும், அதேவேளையில் மனமாற்றத்தின் வெளியடையாளமாகவும் கொள்ளப்படுகிறது. எனவேதான் சோதோமை அழிவிலிருந்து காக்க விரும்பும்



ஆபிரகாம் கடவுளிடம் மன்றாடும்போது, "தூசியும் சாம்பலுமான நான் என் தலைவரோடு பேசத் துணிந்துவிட்டேன்" (தொநூ 18:27) என்று தன்னுடைய வெறுமையை, கடவுளுக்கு முன்னால் தான் ஒன்றுமில்லை என்பதை வெளிப்படுத்துகின்றார். சீராக்கும் தம் நூலில், "புழுதியும் சாம்பலுமான மனிதர்" என்று மனிதர்களின் வெறுமையை வெளிப்படுத்துகின்றார். ஆக, சாம்பலால் நம் நெற்றியில் இடப்படும் சிலுவை அடையாளம், நமக்காக இறைமகன் இயேசு பட்ட பாடுகளை எண்ணித் துக்கப்படவும், மனவருத்தப்படவும், மனம்மாறி புதுவாழ்வு வாழவும் நம்மை அழைக்கும் அடையாளமாகும்.

## மனித வாழ்வு நிலையற்றது

மனித வாழ்க்கை நீர்க்குமிழிக்கும் (திபா 39:5), நிழலுக்கும் (சஉ 6:12, திபா 144:4), வெட்டுக்கிளிக்கும் (திபா 109:23), புல்லுக்கும் (திபா 102:11), வயல்வெளிப் பூவுக்கும் (திபா 103:15), உதிரும் இலைகளுக்கும் (சீஞா 14:18) உவமையாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் மனித வாழ்வு நிலையில்லாதது, வெறுமையானது, ஆதலால்தான் பட்டினத்தார் தம் பாடலில்,

*"நீர்க்குமிழி வாழ்வை நம்பி நிச்சயமென் றேயெண்ணிப்*
*பாக்களவாம் அன்னம் பசித்தோர்க் களியாமல்*
*போர்க்குளெம் தூதன் பிடித்திருக்கும் மப்போது" என்கிறார்.*

## இயேசு காட்டும் தவமுயற்சிகள்

ஆனால் இயேசுக்கிறிஸ்து வெளியடையாளங்களான தூசியையும், புழுதியையும், சாம்பலையும் பூசிக்கொண்டு சாக்கு உடை தரித்து அழுது புலம்பும்படி நம்மைக் கேட்கவில்லை. அல்லது யூதர்களைப் போல, தர்மம் செய்தல், இறைவேண்டல், நோன்பு இருத்தல் என்னும் மூவகையான அறச்செயல்களை மிகுந்த ஆர்வத்துடன் செய்தாலும், தனிப்பெருமைக்காகவும், பலரது நன்மதிப்பைப் பெறுவதற்காகவும் செய்து இறுதியில் அதன் உள்ளார்ந்த தன்மையை இழந்துபோனதுபோலவோ நம்மைச் செய்யத் தூண்டவில்லை. மாறாக ஒவ்வொரு தவ முயற்சிகளையும் நமக்குப் புதுமையாகக் கற்பிக்கின்றார்.

நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல் செய்யாமல், முகவாட்டமாய் இல்லாமல், முகங்களை விகாரப்படுத்திக் கொள்ளாமல், தலையில் எண்ணெய் தேய்த்து, மறைவாய் இருக்கிற தந்தைக்கு மட்டும் தெரியும்படி நோன்பு இருக்கச் சொல்கிறார் (மத் 6:16-18).

இறைவேண்டல் செய்யும்போது, உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள தந்தையை நோக்கி வேண்டும்படி கூறுகிறார் (மத் 6:5-6). மேலும் பிற இனத்தவரைப்போலப் பிதற்றாமல், மிகுந்த சொற்களை அடுக்கிக்கொண்டுபோகாமல் செபிக்கவும் அழைக்கிறார். தர்மம் செய்யும்போது, வலக்கை செய்வதை இடக்கைக்குத் தெரியாமல் மறைவாய் தந்தை இறைவனுக்கு மட்டும் தெரியும்படி செய்யச் செல்கிறார் (மத் 6: 2-4).

## தவக்காலம் - மனமாற்றத்தின் காலம்

இயேசுக் கிறிஸ்துவின் வழிகளைப் பின்பற்றி, தவக்காலம் ஆண்டுதோறும் வந்துபோகும் வாடிக்கையான வேடிக்கைக் காலம் என்று நினைந்துவிடாமல், இது ஒரு மனமாற்றத்தின் காலம், பழைய பாவ வாழ்விலிருந்து, தீய எண்ணங்களிலிருந்து, அசுத்த செயல்களிலிருந்து நம் கட்டுகளை அவிழ்த்துக்கொள்ளும் அற்புதமான காலம் என்பதை உணர்வோம். இறைவாக்கினர் யோவேல், "நீங்கள் உங்கள் உடையைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவே 2:13) என்கிறார்.

ஆம், இது நம் இதயங்களைக் கிழித்துக்கொள்ளும் சரியான காலம். இயேசுக்கிறிஸ்து ஏற்றுக்கொண்ட பாடுகளை, கல்மனமும் கசிந்துருகும் அவரது வேதனையை, உடைக்கப்பட்ட அவரது திருமேனியை, நொறுக்கப்பட்ட அவரது திருஉள்ளத்தை, பிழிந்து எறியப்பட்ட அவரது திருஇரத்தத்தை ஆழ்ந்து சிந்திக்கும் தியானக் காலம் மட்டுமல்ல ... மனம்திரும்பி நற்செய்தியை, இயேசுவின் விழுமியங்களை தன் வசப்படுத்திக்கொள்ளும் காலம்.

"மடிவதற்காகவே மண்ணிற்கு வந்த மன்னவன்
மனுக்குலம் வாழவே வீழவந்த விண்ணவன்
கொல்லப்படத் தன்னை ஈந்த மாபரன்
கொடுமையாய்த் தன்னை உடைத்த மாதவன்"

இயேவின் பெருமையை வாழ்வால் உலகுக்கு உறுதிப்படுத்துவோம்.

நன்றி - தோழன் 2015 - செல்வி தென்றல், சென்னை.

# இலங்கைக்கென்று ஒரு புனிதர் இன்றுள்ளார்!

அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாரை புனிதராக உயர்த்தும் திருத்தந்தையின் திருப்பலியின்போது காலிமுகத்திடலில் கர்தினால் ஆற்றிய நன்றியுரை!



அதிமேதகு திருத்தந்தையே, இலங்கையின் குடிமக்களும், கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினர்களுமான நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும், பிள்ளைக்குரிய பாசத்துடனும் இன்று உங்களை எம்மத்தியில் வரவேற்கின்றோம். திருத்தந்தையே, நீங்கள் இலங்கை மண்ணில் காலடிவைத்த நேரத்திலிருந்து மரியாதையோடும் பணிவன்புடனும் உங்களை சூழ்ந்துள்ள சாதாரணமானதும் உண்மையானதுமான விசுவாசத்தை நீங்கள் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்குமென உறுதியாக நம்புகிறேன். உலகெங்குமுள்ள பல மில்லியன் கணக்கான உங்களுடைய அபிமானிகளுடன் இணைந்து இலங்கைவாழ் அனைத்துச் சமய இன மத மொழிசார் மக்களும் இச்சிறிய அழகான தீவுக்கு நீங்கள் மேற்கொள்ளும் மேய்ப்புப்பணிப் பயணத்தின்போது உங்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

நீங்கள் எம் நாட்டுக்கு வந்திருக்கும் பாக்கியத்தோடு எமக்கென்று ஒரு புனிதரையும் பரிசாக அளித்துள்ளீர்கள். புனித யோசவ்வாஸ் அடிகளார் என்கின்ற இப்பரிசு எமக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தருகின்றது. இலங்கைக்கென்று ஒரு புனிதர் இன்றுள்ளார். கோவா நகரின் பெருமை இலங்கைக்கு கடவுள் அளித்த விலைமதிப்பற்ற மாணிக்கம் ஆனது.

ஆகவே நீங்கள் அளித்துள்ள இவ்விலைமதிப்பற்ற பரிசிற்காக உங்களுக்கு நன்றிநவில்கின்றோம். அவர் தம்முடையதாக்கிக் கொண்ட இந்நாட்டில் கத்தோலிக்கர் மிகவும் துன்புறுத்தப்பட்ட காலத்தில் அவர்களது விசுவாசத்தை காக்க அவர் செய்த பணி கடவுள் எம்மீதுகொண்ட முடிவில்லாத அன்பின் காலத்தால் அழியாத காவியமாகத் திகழ்கின்றது.

மெய்யாகவே கடவுள் இந்தப் புனித மனிதரை தம் தாய்நாட்டையும் மக்களையும் விட்டுவிட்டு ஆபிரகாமைப்போல தெரியாத இடத்திற்கு வந்து, எமது மூதாதையரின் விசுவாசத்தை தன்னந்தனியாக பாடுபட்டுக் காத்து தூண்டியெழுப்பினார் என்றால் மிகையாகாது. விலைமதிப்பற்ற பரிசான தமது மகனை எமக்குத்தந்த கோவைத் திருச்சபைக்கும் எமது நன்றிகள். இன்று தமது முதுபெரும் தந்தையுடன் இணைந்து உயிர்த்துடிப்புள்ள கோவைத் திருச்சபையிலிருந்து வருகைதந்துள்ள அனைவரையும் நன்றியுணர்வுடன் வரவேற்கின்றோம்.

திருத்தந்தையே, உரோமாபுரியின் புனித பேதுருவானவர் பசிலிக்கா திருத்தலத்தில் வைத்து கடந்த ஆண்டு (2014) மாசி மாதம் 8ம் திகதி இலங்கையைப்பற்றி இவ்வாறு சொன்னீர்கள். அதாவது "இயற்கை அழகு மற்றும் அதன் வடிவத்தின் அடிப்படையில் இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுகின்றது. அம்முத்து கண்ணீர்த்துளியின் வடிவத்தையும் பெறும்." மெய்யாகவே முத்துக்கள் சிப்பிக்குள் உள்ள உயிரியால் சிந்தப்படும் கண்ணீரால் உருவாக்கப்படுகின்றது. அதேபோன்று, கடந்த காலத்தில் உள்நாட்டுப் பிரச்சினையின் நிமித்தம் நிறையவே நாம் கண்ணீர் சிந்தினோம். அதனால் பலரும் பாதிக்கப்பட்டதோடு, எமது உடமைகளையும் இழக்க நேரிட்டது. துன்பகரமான கடந்த காலத்திலிருந்து மீளெழுந்து உண்மையான நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் மக்களின் அபிவிருத்தியையும் நோக்கிய பயணத்தில் நாம் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். இப்பயணம் கஷ்டமானது, உங்களது செபமும், ஆசீரும் அத்தோடு தந்தைக்குரிய உங்களது வழிநடத்தலும் எமக்குத் தேவை. எப்போதும் எங்களுக்காக நீங்கள் செபிப்பதாக உறுதியளித்திருக்கிறீர்கள். அதற்காகவும் நாங்கள் நன்றி கூறுகின்றோம். எமது இந்தத் தேடலில் கனிவுடன் உதவுமாறு நாம் உங்களைக் கேட்டுநிற்கின்றோம்.

இதயங்களின் காயங்கள் உண்மையாகவே குணம் பெறவேண்டும். பொருளற்ற வன்முறையை கட்டவிழ்த்து விட்டதற்காக ஒருவர் மற்றவரிடம் மன்னிப்புக் கேட்கத் தேவையான பலமும் தேவை. துன்பகரமான கடந்த காலத்தை மன்னித்து மறந்து கொடுத்து வாங்கும் செயற்பாட்டினூடாக பிரச்சினையால் பாதிக்கப்பட்ட அனைவருக்குமிடையிலும் புரிந்துணர்விற்கான பாலங்கள் உருவாகவும் வேண்டும். நாம் இவ்விலக்கிலிருந்து வெகுதூரமாக இருக்கின்றோம். அவ்வாறான தடைகளைத் தாண்டக்கூடிய திருமறையின் உயர்வழிகளைக் கற்பிக்கும் உங்களது மேதகு பிரசன்னம், நாமும் ஒருவர் மற்றவருடன் உறவுகொள்ள உதவும் என்பதே எமது நம்பிக்கையும் வேண்டுதலுமாகும்.

எமது அன்பிற்குரிய புனிதர் யோசவ்வாஸ் விண்ணகத்தில் எங்களுக்காக பரிந்துரைக்கும்படி வேண்டுதல் செய்வோம். அவருடைய பரிந்துரையால் அமைதி என்னும் புதுமை நமது நாட்டில் இடம்பெறவும், உண்மையான அபிவிருத்தி மற்றும் மகிழ்ச்சியை எமது வேற்றுமைகளுக்கு அப்பால் சென்று நாமெல்லாம் அடைந்திடவும் மன்றாடுவோம்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# திருத்தந்தையின் இலங்கை வருகை! சில உணர்வலைகள்

ஆக்கம் : அருட்சகோதரி சாந்தனா (அ.கா)







இலங்கைவாழ் மக்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பு தைத்திங்கள் 13ம்ஆம் நாள் மலர்ந்தது! அன்றுதான் எம் திருநாடு இறையாசீர்களால் நிறைந்த நன்னாள்! திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகைக்காக முழு நாடுமே உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும், உத்வேகத்துடனும் பரவசத்திலும் ஆழ்ந்திருந்தது.

நீண்டநாள் ஆயத்தங்கள் முடிவிற்கு வந்தது. திருத்தந்தையின் விஜயம் எம் மக்களின் உள்ளத்திற்கு ஆறுதலாகவும் தேறுதலாகவும் அமைந்தது. திருத்தந்தை அவர்கள் காலடிவைத்த முதல் இடத்திலும் முதல் நாளிலும் கேட்டுக்கொண்டது, "காயப்பட்ட எம் உள்ளங்களை ஆற்றுப்படுத்துவோம். உண்மை விடயங்களைக் கண்டறிந்து அதற்குப் பரிகாரம் தேடுவோம்" என்பதாகும். எம் பெருமான் இயேசுவின் பொன்மொழிகள் எம் திருத்தந்தையின் வருகையின்போது உயிர்பெற்றதுபோல் அவ்வார்த்தைகள் அமைந்திருந்தன. "அன்பில் நிலைத்திருங்கள்" என்ற வார்த்தை, பல்வேறுபட்ட பிரச்சினைகளினாலும் சிதைக்கப்பட்டு நொறுக்கப்பட்ட உள்ளங்களுக்கு ஆற்றுப்படுத்தும் ஒன்றாக அமைந்திருந்தது.

இன்றைய எம் மனித வாழ்வு பல்வேறுபட்ட நிலைகளினால் சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. அன்பை, அமைதியை ஏங்கிய எம் நாட்டு மக்களின் உள்ளங்களில் ஓர் நம்பிக்கைக் கீற்றாகவே எம் திருத்தந்தையின் பயணம் அமைந்திருந்தது எனலாம்.

2000ஆம் ஆண்டுகளுக்குமுன் இயேசு கொண்டுவந்த அன்பு, சமாதானம், ஒற்றுமை என்பன இன்றும் மலராத மொட்டாகவே இந்நாட்டில் இருக்கின்றது. சமாதானம் எனும் மொட்டு அரும்புவதற்கு பல தடங்கல்கள் நாளுக்குநாள் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. அடக்குமுறைகளும், ஆணவமும் அக்கிரமங்களும் அடிக்கடி அரங்கேறும் இடமாக இந்நாடு இருக்கின்றது. ஊழல்களும் பதுக்கல்களும் மலிந்து காணப்படுவதுடன் உண்மையைத் திரித்துக்கூறும் மனிதர்கள் வீதியில் வலம்வந்துகொண்டே இருக்கின்றார்கள்.

உண்மைக்குக் குரல் கொடுக்கும் உண்மை உள்ளங்கள் முகவரி இல்லாமல் மறைந்துவிடுகிறார்கள். ஏமாற்றுப் பேர்வழிகள் எப்பக்கம் பார்த்தாலும் தலைதூக்கி நிற்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில்தான் எம் திருத்தந்தையின் வருகையை நாம் எதிர்கொண்டோம். திருத்தந்தையின் தரிசனத்தின் பயனாக எம் நாடு அன்பின், அமைதியின் பாதையில் நடைபோடும் என்ற நம்பிக்கை எம் மத்தியில் மலர்ந்துள்ளது.

திருத்தந்தையின் வருகையை எதிர்பார்த்திருந்த மக்கள் வெள்ளம் வெயிலையும் பொருட்படுத்தாது வீதிகளில் காத்திருந்தது. குழந்தைகள் தொடக்கம் முதியவர் வரையிலும் எம்மதமும் சம்மதமே என்ற உணர்வில், எல்லோரும் ஒருதாய் மக்களாக திருத்தந்தையை வரவேற்க வீதியோரங்களில் காத்திருந்தனர். அதைக் கண்ணுற்றவேளையில் 'அன்பில் நிலைத்திருங்கள்' என்ற வாக்கு நிஜமாக்கிவிட்டதோ என்ற எண்ண அலைகள்தான் எம்முள்ளங்களைத் தொட்டுச்சென்றது.

நல்லாட்சியை வழங்குவதாகக் கூறி அரசாட்சியில் அமர்ந்த புதிய தலைவரும், அரசும் நம்பிக்கையின் ஒளியை விருட்சமாக்கினர்.

திருத்தந்தையவர்களின் வருகையினால் தமிழர் தாயகம் மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தது. ஏனெனில் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் மண்ணில் காலடிபதித்த முதல் திருத்தந்தை என்ற பெயரைப் பெற்றவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். மடுத்திருப்பதிக்கு திருத்தந்தை சென்றபோது தமிழர் பாரம்பரியத்துடன், மங்கள இசைமுழங்க, மிகுந்த ஆர்வத்துடன் அவர் வரவேற்கப்பட்டார். அங்கு திருத்தந்தை வழங்கிய உரையில் அன்னை மரியாமீது அவர் கொண்டிருந்த பக்தி வெளிப்பட்டது. "அன்னை மரியா என்றும் உங்களுடன்இருக்கின்றார். அவள்தான்உங்கள் அனைத்து வீடுகளிலும் அன்னை. வடுக்களோடு, பயங்களோடு வாழும் உங்கள் வாழ்வில் சுகவாழ்வை அளிக்கக் காத்திருக்கும் எம் அன்னை எம்மிடம் எதிர்பார்ப்பது ஒப்புரவும் புரிந்துணர்வும். இதை நிலைநிறுத்தும்போது எம் வாழ்வு ஒளி மயமாகும்" என்ற நற்செய்தியை திருத்தந்தை வழங்கினார்.

திருத்தந்தையவர்கள் அன்பிற்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார். குழந்தைகளை அரவணைப்பதிலும், நோயாளிகளைத் தொட்டு ஆசீர்வதிப்பதிலும், மாற்றுத் திறனாளிகளைக் கட்டித்தழுவி முத்தமிடுவதிலும் அவர் எப்போதும் ஆர்வமாய் இருக்கின்றார். இதன்மூலம் அவர் இறையன்பை வெளிப்படுத்துவதுடன், இறைவனின் இறையிரக்க உடனிருப்பையும் வெளிப்படுத்துகின்றார்.

சென்ற இடங்களிலெல்லாம் எம் திருத்தந்தையின் ஆசீரால் மகிழ்ச்சியடைந்த உள்ளங்கள் ஏராளம். "இயேசுவின் ஆடையைத் தொட்டால் போதும், அவரைக் கண்டால் போதும்" என்று ஏங்கிய இயேசுவின் காலத்து மக்களைப்போல எம்மவர்களும் சனநெருக்கடிகளையும், இடையூறுகளையும் களைப்பையும் பாராது அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தமை வியப்புக்குரியது.

திருத்தந்தையவர்களின் ஏழ்மையான, தாழ்மையான வாழ்க்கை முறையால் கவரப்பட்ட உள்ளங்கள் பல. அந்தத் தந்தையைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தில் அலையாக மோதிய உள்ளங்கள் அவரைக் கண்டதும் பேருவகையடைந்தனர். திருத்தந்தையவர்களின் கரங்களையாவது தொட்டு ஆசீர்பெற வேண்டும்மென்ற எண்ணங்களுடன் இரவிரவாக நித்திரை செய்யாது காலிமுகத்திடலில் காத்திருந்த மக்களின் ஆழமான விசுவாசம் போற்றப்பட வேண்டியது.

ஏழ்மையான நிலையில் எம்மத்தியில் வருகைதந்த திருத்தந்தையவர்கள் எமக்களித்த மிகப்பெரும் கொடைதான் எம் மண்ணின் முதல் புனிதர் யோசேவ்வாஸ் அடிகள். தான் வாழ்ந்த காலகட்டத்தில் இப்படியோர் நிகழ்வு நடைபெறும் என யோசவ்வாஸ் அடிகளார் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்.

இப்புனிதர்பட்ட நிகழ்விற்காக செலவிடப்பட்ட நேரங்கள், பணங்கள், பயணங்கள் ஏன் போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் எம் புனிதர் கண்டிருக்கமாட்டார். கால்நடையாக நற்செய்திப் பணியைப் பறைசாற்றிய புனிதருக்கு இறைவன் அளித்த புகழாரமே புனிதர் என்ற நிலை! விசுவாசத்துடன்கூடிய மக்கள் வெள்ளத்தைக்கண்டு அவர் விண்ணிலிருந்து மகிழ்ந்திருப்பார் என்று நிச்சயமாக நம்பலாம். அவர் நடந்த பாதைகள் அழியவில்லை, அவர் விதைத்த விசுவாச விதைகள் மடியவில்லை.


38 ஆண்டுகள் குருக்கள் இல்லாது வாழ்ந்த இலங்கை கத்தோலிக்க மக்களின் விசுவாச வாழ்விற்கு அவர் உயிர்கொடுத்தார். அடிகளாரின் வியர்வையில் உருப்பெற்றெழுந்த இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை வெற்றியுடன் வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. தடங்கல்களும் தடைகளும் மோதினாலும் விசுவாசம் தளரவில்லை. அந்த வெற்றிக்களிப்பைக் கொண்டாட எம்முடன் ஒருவராக எம்மோடு இணைந்த, எமக்காகச் செபித்த எம் திருத்தந்தையின் விஜயம் இறைவனால் எமக்கு அருளப்பட்ட சிறப்புமிகு ஆசீராகும்.

எம் மக்களைக் காணவேண்டும் என்ற ஆர்வத்துடன் அவர் நம் மண்ணுக்கு வந்தார். புன்னகை ததும்ப எமக்காக இறையாசீர்களைப் பெற்றுத்தந்தார்.

'அன்பில் நிலைத்திருங்கள்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற எம் திருத்தந்தையின் விஜயத்தின் சாத்திப்பாடு ஆரம்பக்கட்டத்தில் அவநம்பிக்கையைத் தந்தாலும், இறுதியில் தந்தையவர்கள் வருகிறார் என்ற செய்தி அனைத்து மதத்தலைவர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இனமத பேதமின்றி இலங்கைவாழ் மக்களாக, ஒரே மந்தைகளாக ஆயனின் ஆசீர்களைப்பெற்ற நாம் அவர் விட்டுச்சென்ற நற்செய்தியை வாழும் மக்களாக மாறுவோம். மற்றவர்களை ஆற்றுப்படுத்தி இறையன்பில் நிலைத்திருக்க முயலுவோம், அன்பில் நிலைத்திருப்போம்.

# ஒரு பொதுவான சின்னத்தின்கீழ் நாட்டுக்காக வாக்களியுங்கள்!

- பதுளை ஆயர் வேண்டுகோள் -



எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக பதுளை ஆயர் மேதகு ஜே. வின்ஸ்ரன் பெர்ணான்டோ ஆண்டகை அவர்கள் அறிக்கை மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு :

பெரும்பாலான அரசியல் கட்சிகள் நாட்டின் நலன்கருதி ஒரே சின்னத்தின்கீழ் ஒரு பொதுவான ஜனாதிபதி வேட்பாளரை ஆதரித்து நின்றன. எமது நாட்டில் கட்சி அரசியல் பிரிவினையையே கொண்டுவந்ததோடு முரண்பாடுகளையும் தோற்றுவித்திருந்தது. இதனால் முழு நாடுமே அநீதிக்குள் தள்ளப்பட்டதோடு இன, மத பாகுபாட்டையும் தோற்றுவித்திருந்தது. அதுமட்டுமல்லாமல் ஊழல் மற்றும் பலாத்காரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தது. அதன் உச்சக்கட்டமாக மனித மற்றும் ஜனநாயக உரிமைகள் நசுக்கப்பட்டன.

ஆனாலும் அதிகளவான மக்கள் குறிப்பாகத் தங்களுடைய அரசியல் எண்ணக்கருக்கள், அபிலாசைகள் மற்றும் தமது கட்சிசார்ந்த நிகழ்வுகளைக் கடந்து, ஒரு நீதியான சமூகத்தினை உருவாக்கும்பொருட்டு இறுதித் தேர்தலில் வாக்களித்தனர்.

எனவே, நாட்டின் நன்மை கருதி ஏற்கனவே புதிய அரசாங்கம் தொடங்கி இருக்கின்ற 100 நாள் வேலைத் திட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும்பொருட்டு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் இணைந்ததான ஒரே சின்னத்தின்கீழ் போட்டியிடுகின்றவர்களுக்கு வாக்களிப்பதற்காக மக்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பதை வழங்குவது அறிவார்ந்த செயலாகும். பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள், ஒவ்வொன்றும், ஒரு குறுகிய மனப்பான்மையில் தங்களுக்கே உரித்தான கட்சிச் சின்னத்தில் போட்டியிடுவார்களேயானால், அன்றேல் தற்போது நாட்டுமக்கள் அனைவராலும் மற்றும் பெரும்பாலான அரசியல் கட்சிகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தை தொடரவிடாமல் பல கோணங்களிலிருந்தும் அதை முடக்குவார்களேயானால், அவ்வாறான செயற்பாடுகள் ஏற்கனவே அடையப்பெற்ற முன்னேற்றங்களை பின்னோக்கித் தள்ளுவதோடு, ஒரு சிக்கல் நிறைந்த நிலையை உண்டுபண்ணுவதும் அல்லாமல், மக்களையும் குழப்பத்திற்கு இட்டுச்செல்லும்.

தற்போது, பிரதான அரசியல் கட்சிகளின் அரசியல்வாதிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் தங்களுக்குள் பிளவுபட்டிருப்பதை அறியக்கூடியதாகவும் அவதானிக்கக்கூடியதாகவும் உள்ளது. ஆகவே, நாட்டினுடைய உயரிய நல்லெண்ணம் கருதி, தற்போதைய ஆட்சியாளர்களின் இயலுமை மற்றும் உறுதிப்பாடு என்பவற்றை வாக்களிப்பவர்கள் தாங்களாகவே அறிந்து, தெரிந்து, தெளிந்து, தீர்மானித்துக்கொள்ள விட்டுவிடுவதோடு, அவர்கள் தங்களுடைய வாக்குகளை எதிர்வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் ஒரே பொதுச் சின்னத்தின்கீழ் போட்டியிடுகின்றவர்களுக்கு அளித்து, ஒரு நிலையான அரசாங்கத்தை உருவாக்கச் செய்வதே சிறந்த செயலாகும்.

# கத்தோலிக்கர் நிர்ப்பந்தித்து மதம் மாற்றம் செய்வதில்லை

## அருட்திரு றொஷான் அடிகள் தெரிவிப்பு

கத்தோலிக்க சமயத்தினர் நிர்ப்பந்த அடிப்படையில் மதமாற்றம் செய்வதில்லை என யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்திரு எஸ். ஏ. றொஷான் அடிகள் தெரிவித்துள்ளார். நிர்ப்பந்த மதமாற்றத்தைத் தடுத்துநிறுத்துமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைப் பயணத்தின்போது கோரவுள்ளதாக சைவத்தமிழ், இந்து சிவில் சமூகம் வெளியிட்ட அறிக்கைபற்றிக் குறிப்பிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: இலங்கைக் கத்தோலிக்க மதத்தினர் நிர்ப்பந்த அடிப்படையில் மதமாற்றத்தில் ஈடுபடுவதில்லை. போர்க்காலத்திலோ போரின் பிற்பட்ட காலத்திலோ கத்தோலிக்க மதத்தினர் இன, மத, சாதி பேதமின்றியே செயற்பட்டு வந்துள்ளனர். கத்தோலிக்க திருச்சபையின் தொண்டுநிறுவனங்களாகிய செடேக், கியூடெக், கரித்தாஸ் என்பன பலர் போற்றும் வகையில் பெரும் அளவில் மக்கள் துயர்துடைப்பில் பங்கேற்றன. இவை ஒருபோதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமது துயர்துடைப்புப் பணிகள், வாழ்வாதார உதவிகளின்போது மதமாற்றச் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என உறுதியாகக் கூறமுடியும். கத்தோலிக்க திருச்சபையினர் இடர்படும் மக்களின் உரிமைக்குரலாக இருந்தனரேதவிர தமது செயற்பாடுகளின் பின்னணியில் மதமாற்ற எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை.

மாறாக, கிறிஸ்தவ அடிப்படைவாதச் சபையினர் சிலர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது வருத்தத்திற்குரியது. இவர்கள் இந்துமத சகோதரர்களை மட்டும் அல்ல, கத்தோலிக்க சமயத்தவரையும் தம் பக்கம் ஈர்த்து இழுக்க முனைகின்றனர். இத்தகையோரின் செயற்பாடுகளைப் பின்புலமாகக்கொண்டு கத்தோலிக்க திருச்சபையின் தலைமை ஆயர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைப் பயணத்தின்போது நிர்ப்பந்த மதமாற்றத்தைத் தடுக்குமாறு ஒரு கோரிக்கையை முன்வைப்பது பொருத்தமற்ற செயற்பாடே – என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வு ஆண்டு

## மாதம் ஒரு துறவற சபையைப் பற்றி அறிந்துகொள்வோம்


மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் ஒவ்வொரு துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை ஒவ்வொரு மாத மன்னாவிலும் இடம்பெறும்.

## எஸ். ஜே. எல். சகோதரிகள் என அறியப்படும்

# லியோன்சின் புனித வளனார் சபை - SJL

# Sisters of St. Joseph of Lyon

எழுத்துரு :
அருட்சகோதரி ஜோசப்பின் (SJL),
நொச்சிக்குளம், மன்னார்



**தோற்றுவித்தவர் :**
**அருட்தந்தை ஜோன் பீட்டர் மெதாய் சே.ச.**

இயேசுசபைக் குருவான அருட்தந்தை ஜான் பீட்டர் மெதாய் (Jean - Pierre Medaille) அவர்கள் 1610ஆம் ஆண்டு ஒக்டோபர் திங்கள் 6ஆம் திகதி பிரான்ஸ் தேசத்தில் கார்க்கா சோன் என்ற இடத்தில் பிறந்தார். இவரது தந்தை பிரான்ஸ் நாட்டு அரச குடும்பத்தின் வழக்கறிஞர். செல்வச் செழிப்பில் மட்டுமின்றி, விசுவாச வாழ்விலும் மேம்பட்ட குடும்பம். மெதாய் சிறுவயதில் இருந்தே பிறர் சேவையில் ஆர்வம்கொண்டவர். பள்ளிப் படிப்பை முடித்ததும் தமது 16வது வயதில் யேசுசபை நவசந்நியாசக் குருமடத்தில் சேர்ந்து 1637ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இளம் குருவாய் இருந்த காலம்தொட்டே தனது பணிவாழ்வின் புனிதத்தில் தணியாத தாகம்கொண்டு செய்த பணிகளைத் திறம்படச் செய்துவந்தார். இவரது நேர்மையையும், உண்மையையும் கண்டு யேசுசபை இவருக்கு முக்கியமான பணிகளையும், கடினமான பணிகளையும் அளித்தது. கத்தோலிக்க சபையில் இருந்து பிரிந்த சகோதரர்களை மீண்டும் திருச்சபைக்குக் கொண்டுவரவும், மனம்மாறி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு திருமுழுக்குக் கொடுக்கவும், தொலைதூர இடங்களுக்குச் சென்று திருப்பலி ஆற்றவும், உலக மாயைகளில் சிக்கிக்கிடந்த ஆன்மாக்களை விடுவித்து அவர்களை ஆன்மீகத்தில் வளரச்செய்யவும் ஓயாது பயணம் செய்த இவர் சென்ற இடங்களில் எல்லாம், சந்தித்த மனிதரில் எல்லாம் விசுவாச விதையைத் தூவிச் சென்றார்.

இப்படிப்பட்ட ஒரு பயணத்தின்போது தந்தை மெதாய் அவர்கள், தங்களையே இறைவனுக்காக அர்பணித்துக்கொள்ள வேட்கைகொண்ட சில இளம்பெண்களையும், விதவைகளையும் சந்தித்தார். கல்வியறிவு இல்லாத, ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த இந்தப் பெண்கள் இறைபணியாற்றும் ஆர்வத்தை மட்டும் பெரிதாய்க் கொண்டிருந்தனர். அந்தக் காலக்கட்டத்தில் பெண் துறவியர்களுக்கு செபத்தை பிரதானமாய்க்கொண்ட மௌன மடங்கள் (Cloister) எனும் அமைப்பு மட்டுமே இருந்தன. செபத்துடன் இணைந்த பணிவாழ்வு என்ற பகிரங்கத் துறவறம் மறுக்கப்பட்டது.

தனது செபத்தின்போது நற்கருணைநாதரிடம் இருந்து பெறப்பட்ட தூண்டுதலின் பெயரில் தந்தை இவ்விளம் பெண்களைக்கொண்டு Little Design என்ற பெயரில் பணியாற்றும் சிறு குழுவை ஏற்படுத்தினார். இந்த விதை பெரிய மரமாகி அப்பகுதியில் கிளைபரப்பத் துவங்கியது. பகிரங்கப் பணிவாழ்வுக்கு எதிர்ப்புகள் தோன்றியபோது, யேசுசபையின் சட்டத்திட்டங்களுக்குப் பணிந்ததாலும், தம் அதிபர்களுக்கு கீழ்ப்படிந்ததாலும் தந்தை தொடர்ந்து சகோதரிகளை வழிநடத்த முடியாமல், தமது நண்பரும், ஆயருமான கென்றி தே மோபாஸ் அவர்களிடம் சபையை ஒப்படைத்தார்.

1650ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லியோன்ஸ் என்னும் இடத்தில் உதயமான எம் சபை Little Design இன்று Sisters of St. Joseph of lyon என்ற பெயரில் 15 நாடுகளில் வேரூன்றி உள்ளது. தற்போது இச்சபையைச் சேர்ந்த ஏறக்குறைய 1000 சகோதரிகள் உலகெங்கும் உள்ள 103 இல்லங்களில் பணிபுரிந்துவருகின்றனர். இச்சபை இன்று 365 ஆண்டுகளைக் கடந்த நிலையில் பணிவாழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

**சபையின் தனிவரம் (CHARISM)**

“மக்களை மக்களோடும், மக்களை இறைவனோடும் இணைப்பது”

**இந்தியாவில் தோற்றம்:-**

மதுரை - 1906. தமிழ்நாடு, கேரளா, கர்னாடகா, சத்திஸ்கார், ஒரிசா, ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம்.

**இலங்கையில் தோற்றம்:-**

நொச்சிக்குளம் (மன்னார் மறைமவாட்டம்) - 2012.

**எம் சபை வேரோடிய நாடுகள்:-**

பிரான்ஸ், அமெரிக்கா, மெக்சிக்கோ, எகிப்து, ஆபிரிக்கா, ஐவரிகோஸ்ட், புர்கினோ பாஸோ, இங்கிலாந்து, இந்தியா, இலங்கை, கிரீஸ், அயர்லாந்து, லெபனான், சுவிஸ்சர்லாந்து, ஐரீஸ், பெல்ஜியம், கானா, செக்ரிப்பலிக்.

**எம் சபையின் பணிகள் :**

கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூகப் பணி, சிறார் நல்வாழ்வுப்பணி, முதியோரைக் கண்காணித்தல், பார்வையற்றோரை வாழ்வில் ஊக்குவிக்கும் பணி, சிறைப்பணி. எய்ட்ஸ் நோயால் பதிக்கப்பட்டவர்களின் வாழ்வுப்பணி, பெண்கள் முன்னேற்றப்பணி, அயல்நாடுகளில் எம் அன்புப் பணி.

**இலங்கையில் எம் சபையின் பணிகள் :**

குடும்பம் சந்தித்தல், மருத்துவப்பணி, மறைக்கல்வி, திருப்பாலர் சபை, அன்பியம், சிறப்பு ஆங்கில வகுப்பு. மரியாயின் சேனை கத்தோலிக்க பெண்கள் பணி, முன்பள்ளி,

**SJL – உடன் உழைப்பாளர்**

அன்பென்னும் கோதுமை மணி மடிந்துவிட்டது.
நுன்மை, தியாகம் இவைகளின் மறு உரு எம் சபை நிறுவுனர்.
புரட்சிகளைக்கண்டு புலம்பெயர்ந்தாலும்
இன்னலான நேரங்களில் சபையை வழிநடத்தி வழிகாட்டியவர்.
இறைவன்மீது இவர் கொண்டிருந்த ஆழமான விசுவாசமே
அனைத்துத் தடைகளையும் தகர்த்தது.
காலத்தின் அறிகுறிகளை அறிந்த அற்புத ஜீவன்.
முன்எண்ணம் முன்னேற்பாடு கொண்டு
பணிவாழ்வினில் சபையை முன்னிலைப்படுத்திய முனைவர்.
ஆலமரமாய் சபை எல்லா நாடுகளிலும் தளிர்க்கவைத்த
ஆண்டவரின் அடியவன் நன்றி... நன்றி....!

# கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவின் பொங்கல் விழா

உடலில் ஆரோக்கியம் பொங்க, உள்ளத்தில் அமைதி பொங்க
உணர்வில் புது எழுச்சி பொங்க, முகத்தில் சிரிப்பு பொங்க
வாழ்வில் மகிழ்ச்சி பொங்க, பொங்கட்டும் தைப்பொங்கல்!
பழைய எண்ணங்களை அவிழ்த்து
புதிய சிந்தனைகளை புகுத்தும் புதுமையான திருநாள்.
தைப் பொங்கல் திருவிழா என்பது ஒரு சமய விழா அல்ல
இது தமிழரின் பண்பாட்டு விழா.


10.02.2015 அன்று மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க பெண்கள் பணிக்குழு உறுப்பினர்களால் பொங்கல் விழா குடும்பநலப் பொதுநிலையினர் பணிமையத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அனைத்துக் கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவிலிருந்தும் பெண்கள் பங்கெடுத்து பொங்கல் செய்து இறைவனுக்கு நன்றிசெலுத்தினர். மகிழ்ச்சியால் இதயங்கள் பொங்கி ஒருமனமாய் உறவுடன் வாழ இவ்விழா வழிசமைத்தது.

கடந்த வருடத்தில் இறைவன் கத்தோலிக்கப் பெண்கள் பணிக்குழு ஊடாகச் செய்த அனைத்து முன்னேற்றகரமான பணிகளுக்காகவும், இறைவனின் உடனிருப்புக்காகவும் விசேட நன்றித் திருப்பலி இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. “பொங்கட்டும் புதுவாழ்வு” என்ற கருப்பொருளில் சிறப்பு மறையுரையும் வழங்கப்பட்டது.

இறுதியில் இவ்வருடத்திற்கான முதல் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. அதில் தலைவி அருட்சகோதரி ஜோசப்பின் அவர்களால் ஆண்டுத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதனைத்தொடந்து 2014ஆம் ஆண்டுத்திட்டத்திற்கான மீளாய்வு இடம்பெற்றது. கடந்த ஆண்டுத் திட்டத்தின் வெற்றிகள், தோல்விகள், சவால்கள் போன்றவை ஆய்வுசெய்யப்பட்டன. இறுதியில் செயலாளர் திருமதி. லீலாவதி அவர்களின் நன்றியுரையுடன் இந்நிகழ்வுகள் அனைத்தும் இனிதாக நிறைவுபெற்றன.

# பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் மன்னாரில் ஐயாயிரம் ஹெக்டயர் நிலம் பறிப்பு!

எழுத்துரு : பேராசிரியர் சூசை ஆனந்தன்




யுத்த காலங்களிலும் அதற்குப் பிற்பட்ட காலப்பகுதிகளிலும் மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா அரசினால் திட்டமிட்ட ரீதியில் பல்வேறு வடிவங்களில் நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்படுவது அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

கடற்படைத் தள விஸ்தரிப்பு என்ற போர்வையில் பாரம்பரிய தமிழ்க் கிராமமான முள்ளிக்குளம் என்ற பகுதியும், மரமுந்திரிகைச் செய்கை என்ற போர்வையில் கொண்டச்சிப் பகுதியும், சிங்களக் குடியேற்றம் என்ற போர்வையில் மடுரோட் மற்றும் நரிக்காடு பகுதியும் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுவிட்டன.

இவை தவிர ‘பறவைகள் சரணாலயம்’ என்ற போர்வையில் தள்ளாடி பெரும்படைத் தளத்தைச் சூழ்ந்துள்ள சுமார் ஐயாயிரம் ஹெக்ரேயர் (4838.95) நிலப்பகுதி வங்காலை பறவைகள் சரணாலயம் (Vankalai Bird Sanctuary) என 2008 செப்ரெம்பரில் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. மடுப்பகுதியில் இறுதிக்காலப் போரின்போது ஒருபுறம் மக்கள் வீடுகளைவிட்டு போக்கிடமின்றி அலறி ஓடிக்கொண்டிருக்க, இன்னொரு புறத்தில் சத்தம் சந்தடியின்றி பறவைகளுக்கு புகலரண் தேடி இந்தச் சரணாலயம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஈரானிலுள்ள ரம்சார் (Ramsar) என்ற இடத்தில் இடம்பெற்ற Wet land of International Importance என்ற பிரகடனத்தின்கீழ் இலங்கையில் Ceylon Bird Club என்ற இலங்கைப் பறவைகள் கழகமானது தாவர, விலங்கு பாதுகாப்பு பிரகடனத்தின்கீழ் (Flora and Fauna Protection Ordinance) இது பிரகடனப்படுத்தப்பட்டு 2008 செப்ரெம்பரில் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

தள்ளாடிப் பெருநிலப்பரப்பையும் மன்னார் தீவையும் இணைக்கின்ற சதுப்புநிலம் சார்ந்து இந்தச் சரணாலயம் இட அமைவு பெற்றுள்ளது. தள்ளாடி பெரும் படைத்தளத்தை மையமாகக் கொண்ட இப்பிரதேசம் பெரும்பாலும் சதுப்பு நிலங்களையும் சதுப்புநிலக் காடுகளையும் வற்றுப்பெருக்கு மேடுகளையும் கொண்டதாக விளங்குகின்றது. வங்காலை, திருக்கேதீஸ்வரம், பள்ளிமுனை, சவுத்பார் ஆகிய நிலையங்களை இணைக்கின்ற ஏறத்தாழ சதுர வடிவிலான இப்பகுதி வங்காலை கிராம சேவையாளர் பிரிவின் 60 சதவீதமான நிலப்பகுதியையும் சிறுநாவற்குளம், முள்ளிக்குளம் ஆகிய இடங்களில் கணிசமான பகுதியையும் விழுங்கி இருக்கின்றது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளதுடன், எதிர்காலக் குடியிருப்பு மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான நடவடிக்கைனளையும் மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிற்றளவு மீன்பிடி, கால்நடை மேய்ச்சல் நடவடிக்கைகள், நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.

**தள்ளாடிப் பிரதேசம் முழுவதும் இராணுவ மயம்**

குறித்த சரணாலயத்தின் மையப்பகுதியிலேயே தள்ளாடி பெரும் படைத்தளம் இடவமைவு பெற்றிருக்கின்றது. இத்தளம் இன்று விஸ்தரிக்கப்பட்டு புதிய இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டுவிட்டன. திருக்கேதீஸ்வர வீதி சார்ந்தும், வங்காலை வீதி சார்ந்தும் புதிய படைமுகாம்கள் இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தள்ளாடிச் சந்தியில் உல்லாச விடுதிகளும், தேநீர்ச்சாலைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தள்ளாடி பெரும் படைத்தளத்தில் பௌத்த தூபி அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் தள்ளாடிச் சந்தியில் உள்ள பெரும் குளம் ஒன்று இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு முகாம் பகுதியினுள் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் தள்ளாடிப் பிரதேசம் முழுவதும் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. தள்ளாடி முகாமினை அண்மித்துள்ள வங்காலை என்ற தமிழ்க் கிராமம் முற்றிலும் இராணுவ முகாம்களால் சூழப்பட்டுள்ளதால் இங்கு வாழும் மக்கள் பெரும் பீதியுடனேயே வாழ்ந்துவருகின்றனர். எதுவித கட்டுமானப் பணிகளும் சரணாலய எல்லைக்குள் மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளபோதிலும் இப்பகுதியில் இராணுவ முகாம்கள் மட்டும் உருவாக்கப்படுவது இப்பகுதியானது பறவைகளுக்காக அல்ல முற்றிலும் இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காக மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# துறவிகள் பணிபுரிவதற்காகத் தங்களையே பணியாளர்களாகத் தாழ்த்திக்கொள்ள வேண்டும்!


### ஆயிரக்கணக்கான ஆண், பெண் துறவிகளுக்குத் திருத்தந்தை அறிவுரை

அர்ப்பண வாழ்வைத் தேர்ந்துகொண்டவர்கள், பணிபுரிவதற்காகத் தங்களையே பணியாளர்களாகத் தாழ்த்திக்கொள்ள வேண்டும், இதுவே அவர்கள் தங்கள் வாழ்வில் முன்னேறுவதன் அடையாளம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழாவன்று மாலை 5.30 மணிக்கு வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் அர்ப்பண வாழ்வு வாழும் ஆயிரக்கணக்கான ஆண், பெண் துறவிகளுக்குத் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

துறவு வாழ்வு ஒரு கேலிக்கூத்தாக மாறிவிடாமல் இருப்பதைத் தவிர்க்கும்விதத்தில் துறவிகள் பணிவாழ்விலும் தாழ்ச்சியிலும் இயேசுவால் வழிநடத்தப்பட தங்களையே கையளிக்க வேண்டும், இதன்மூலம் பிறருக்கு இவர்கள் நல்ல வழிகாட்டிகளாகச் செயல்படமுடியும் என்றும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

குழந்தை இயேசுவைத் தமது கரங்களில் தாங்கிக்கொண்டு அவர் தம் மக்களைச் சந்திக்க அவரை ஆலயத்திற்குக் கொண்டுசெல்லும் அன்னை மரியாவை நம் கண்முன் கொண்டுவருவோம். அன்னை மரியா நடந்துசென்றாலும் அந்தத் தெய்வக்குழந்தையே அன்னைக்குமுன் சென்று கடவுளின் பாதையை அன்னைக்குக் காட்டுகிறார் என்று கூறிய திருத்தந்தை, அர்ப்பண வாழ்வு வாழும் நமக்கு இயேசு பாதையை திறந்துவிட்டுள்ளார் என்றும் கூறினார்.



இறைமகன் நம்மைப்போல் ஒருவராக இறங்கிவந்த கடவுளின் அருள்பொழியும் ஏணியாக அன்னை மரியாவின் கரங்கள் உள்ளன என்று கூறிய திருத்தந்தை, அர்ப்பண வாழ்வைத் தேர்ந்துகொண்டவர்களுக்கு நற்செய்தி கூறும் பணி வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இயேசு தம் விருப்பத்தை அல்ல, மாறாகத் தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவே இவ்வுலகுக்கு வந்தார். அதேபோல் இயேசுவைப் பின்பற்றும் அனைவரும் பணியின் பாதையில் செல்ல வேண்டும் என்றும், ஒரு துறவி பணிபுரிவதற்காகத் தன்னையே பணியாளராக ஆக்கி, தன்னையே தாழ்த்தி வாழ்வில் முன்னேறுகிறார் என்பதை நிரூபிக்க முடியும் என்றும் திருத்தந்தை கூறினார்.

## வீடுவாசல் அற்றவர்களுக்கு பாப்பரசரால் இலவச சலூன் திறந்துவைப்பு

வீடுவாசல் அற்றவர்களுக்கு இலவசமாக சிகையலங்கார சேவைகளை வழங்கும்பொருட்டு நிலையமொன்றை (சலூன் ஒன்றை) வத்திக்கானில் சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில் பாப்பரசர் பிரான்சிஸ் திறந்துவைத்துள்ளார்.

பாப்பரசரின் தலைமை நன்கொடை வழங்குனரான மொன்ஸிக்னர் கொன்ராட் கிரஜெவ்ஸ்கியினால் இந்த சிகையலங்கார நிலையத்தை அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த சிகையலங்கார நிலையம் நன்கொடைகள் மூலம் செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முதலாவது நாளில் மட்டும் 40க்கும் மேற்பட்டவர்கள் இலவச சிகையலங்கார சேவைகளைப் பெற்றுக்கொண்டனர். இந்தச் சிகையலங்கார நிலையம் வீடுவாசலற்றவர்களுக்கு சிகையலங்கார சேவையை மட்டுமல்லாது குளியல் வசதிகளையும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வீடுவாசலற்ற யாத்திரிகர்களுக்கும் துவாய், உள்ளாடை, சவர்க்காரம், பற்பசை, சவரக்கத்தி, சவரக் களிப்பு என்பவற்றை உள்ளடக்கிய பொதி வழங்கப்படுகிறது.




*போலந்து நாட்டைச் சேர்ந்த கிறகோறியா என்ற வீடுவாசலற்ற நபர் சிகையலங்காரம் செய்தபின்னர் மகிழ்ச்சி மிகுதியினால் பாப்பரசரின் படத்தை முத்தமிடுவதைக் காணலாம்.*

## கடவுளின் பெயரால் வன்முறையில் ஈடுபடக் கூடாது

வன்முறை, அடக்குமுறை, அழிவு ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு சமய உணர்வுகள் ஒருபோதும் இட்டுச்செல்லக்கூடாது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்தார்.

கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதி புதன் கிழமை அன்று நைஜர் நாட்டில் அண்மை நாள்களில் நடந்த வன்முறைகளில் பலியானவர்களுக்காகச் செபித்த திருத்தந்தை பிரான்சிஸ், நைஜர் நாட்டில் அனைத்து மக்களின் நலன்கருதி ஒருவர் ஒருவரை மதிக்கும் மற்றும் அமைதியான ஒன்றிணைந்த வாழ்வுச்சூழல் விரைவில் உருவாக்கப்படும் என்ற தனது நம்பிக்கையையும் வெளியிட்டார்.

சார்லி ஹெப்டோ (Charlie Hebdo) என்ற பிரான்ஸ் நாட்டு வார இதழ், இறைவாக்கினர் முகமது அவர்களைக் கேலியாக சித்திரிக்கும் நையாண்டிப் படங்களை வெளியிட்டது தொடர்பாக, நைஜர் நாட்டின் தலைநகர் Niamey மற்றும் Zinder நகரங்களில் நடைபெற்ற வன்முறைகளில் 45 கிறிஸ்தவ ஆலயங்களுக்குத் தீ வைக்கப்பட்டன. இவ்வன்முறையில் குறைந்தது 15 பேர் இறந்துள்ளனர். மேலும், இவ்வன்முறையில், பயணியர் விடுதிகளும், கடைகளும், ஒரு பள்ளியும், ஒரு கருணை இல்லமும் தீயினால் அழிந்துள்ளன. இந்நிலையிலேயே திருத்தந்தை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரைகளிலிருந்து

- தாங்கள் அன்புகூரப்பட்டுள்ளோம் என்பதை அறிந்திருக்கும் சீடர்களின் மகிழ்ச்சி வழியாகக் கிறிஸ்தவம் பரவுகிறது.
- சுரண்டல் எனும் சமூகத் தீமை மனிதர்களிடையே உறவுகளைத் தாழ்மைப்படுத்துவதுடன் ஒன்றிப்பு வாழ்வையும் தடைசெய்கின்றது.
- மனிதர்கள் எப்போதும் ஒளியைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தாலும் இருள் தரும் ஏமாற்று அமைதியையே விரும்புகின்றனர்.
- அமைதியை ஏற்படுத்தும் பாதை இல்லையெனில் அங்கு வருங்காலத்திற்கு வாய்ப்பில்லை. அமைதிபற்றி பேசிக்கொண்டிருக்கும் நாம் பலவேளைகளில் போரைத் தேர்தெடுக்கின்றோம்.
- தீமையைச் செய்கின்றவர்கள் ஒளியை வெறுக்கிறார்கள். ஏனெனில் அவர்களின் தீயசெயல்களை ஒளி வெளிச்சம்போட்டுக் காட்டிவிடும் என்ற பயத்தினாலே அவ்வாறு செய்கிறார்கள்.
- இவ்வுலகின் வல்லமையில் கடவுள் தம்மை வெளிப்படுத்த மாட்டார். மாறாகத் தமது அன்பின் தாழ்மையில் அவர் நம்மிடம் பேசுகிறார்.
- இயேசு நம்மை மீட்பதற்காக இவ்வுலகுக்கு வந்தார். இந்த வியப்புக்குரிய கொடையை நாம் புறக்கணியாதிருப்போம்!
- மனித உயிரை மதிக்க மறுக்கும் அனைத்து முயற்சிகளையும் முறியடிப்பதற்கு நல்மனம் கொண்டோர் இணைந்து வரவேண்டும்.
- கிறிஸ்தவ அன்பு, வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டால் மட்டும் போதாது, மாறாக அவ்வன்பு செயல்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.
- இதயம் கல்லாக மாறும்போது அது சுதந்திரமாக இருக்காது. அப்போது அதனால் அன்புகூர முடியாது. நிறைவான அன்பு அச்சத்தை அகற்றுகின்றது.
- தாத்தா பாட்டிகளை வேராகவும், பெற்றோரை அடிமரமாகவும் கொண்டு விளங்கும் குடும்பங்கள், ஒருமைப்பாடு, ஒன்றிப்பு, நம்பிக்கை, ஆதரவு, பாதுகாப்பு, மகிழ்ச்சி மற்றும் நட்புணர்வில் திளைத்து, குழந்தைகளின் வளர்ச்சியில் பங்குகொள்கின்றன.
- நோயாளிகளுடன் செலவழிக்கும் நேரம் பணிவிடை பெற அல்ல, பணிபுரியவே வந்த தம் மகனின் சாயலில் தம்மை வெளிப்படுத்திய இறைவனைப் புகழுவதாக இருக்கின்றது.
- இயேசு நம் வாழ்வின் மையமாக மாறவேண்டுமெனில், திருநற்கருணைப் பேழையின் முன்பாக, அவரின் பிரசன்னத்தில் நாம் நேரத்தைச் செலவழிக்க வேண்டும்.
- அக்கறையற்ற நிலை எனும் மலையை நம்பிக்கை நகர்த்தும்.
- உங்கள் குடும்பங்களில் பெற்றோர், உடன்பிறந்தோர் ஆகியோரில் துவங்கி, உங்கள் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் அமைதியின் திருத்தூதர்களாக வாழுங்கள்.
- மனம் தளராமல் செயலாற்றுதல் வறியோர் துன்புறுவோர்மீது அக்கறை காட்டுதல், திருஅவைமீது அன்புகொள்ளுதல், அமைதியின் தூதர்களாகச் செயலாற்றுதல், இயேசுவிடம் பேசுதல் ஆகிய ஐந்து செயல்களை வாழ்வில் கடைப்பிடியுங்கள்.
- வரலாற்றில் நாம் தவறுகள் செய்யும்போது அவற்றை இறைவன் சரியாக்குகிறார்.
- மிகுந்த இருள் சூழ்ந்த நேரங்களிலும் இறைவனின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள இயலாத நேரங்களிலும் இறைவனை நம்பவேண்டும்.
- மனம் வருந்தும் இதயத்தை இறைவன் மீட்கிறார், அதேவேளை, இறைவனில் நம்பிக்கை வைக்காதவர், தன்னையே கண்டனத்துக்கு உரியவராக ஆக்கிக்கொள்கிறார்.
- தாழ்மைப் பண்பு, இறைவனின் கண்களில் மனிதரைக் காக்கின்றது. அதேநேரம் பெருமையுடையோர் வீழ்ச்சியடைகின்றார்.
- ஒன்றிப்பையும் இணக்க வாழ்வையும் கட்டியெழுப்புவது அனைத்து ஊடக நிகழ்ச்சிகளின் அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்.
- பயன்தராத சட்டங்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நிற்பது பலவீனமான இதயத்தின் அடையாளம்.
- இறைவனின் கருணைக்குச் சான்றுபகர வேண்டியது இன்றைய உலகுக்குத் தேவை.
- பரிசேயர்கள், மதத்தலைவர்களைப்போல, சுயநலத்தால் கடவுளின் அன்பை நாம் கணக்கெடுக்கும்போதெல்லாம், அந்த அன்பிற்கு நாம் எல்லைகள் வகுத்து, கடவுளையே சிறைப்படுத்துகிறோம்.

# புனிதர்களின் பாதையில்

## உரோமை நகர் புனித பிரான்செஸ்

(கி.பி. 1440) திருவிழா மார்ச் 9




மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் உரோமை நகரில், செல்வாக்கு நிறைந்த குடும்பத்தில் தோன்றியவர். இளநங்கையாயிருக்கும்போது துறவறத்தின்மீது மிகுந்த ஆர்வம் காட்டினார். ஆனால் இவர் பெற்றோர் இவருக்கு மணம் முடித்துவைத்தனர். 40 ஆண்டு குடும்ப வாழ்க்கையில் லொரேன்சோ போன்சியானோ என்ற இவர்தம் கணவருக்கும் இவருக்குமிடையே இறை அமைதி குடிகொண்டிருந்தது.

இறைவனின்மீது வேட்கைகொண்ட இப்புனிதவதி இறைவன் பெயரால் ஏழை எளியோருக்குப் பணிவிடைபுரிவதில் தம் நாட்களைச் செலவளித்தார். கடுமையான பஞ்சம் நிலவிய நாட்களில் தம் பொன்நகைகளையும் விற்று ஏழைகளுக்குப் பணியாற்றத் தயங்கவில்லை. பஞ்சம் நிலவிய நாட்களில் 'பிளேக்' என்ற கொடிய தொற்றுநோய் பலரின் உயிரைக் குடித்தது. இறந்த பலரில் புனிதவதியின் இரண்டாம் மகனும் ஒருவராவார்.


இந்த இக்கட்டான வேளையிலும், தமது உறவினரான வனோஜாவையும் அழைத்துக்கொண்டு வீடு வீடாகச்சென்று, ஏழைகளுக்காகத் தருமம்பெற்று, அவர்களைப் பேணினார். அப்போது இன்னுமோர் அம்பு அவரைக் குத்தியது. அவரது ஒரே மகளும் கொள்ளைநோய்க்குப் பலியானார். இந்தத் தாக்குதலுக்குப்பின், தம் வீட்டின் ஒரு பகுதியையே ஏழைகளுக்கான மருத்துவ விடுதியாக மாற்றினார். அத்தகைய தொண்டுதான் அன்றைய உலகுக்கு இன்றியமையாதது என்று மேலும் மேலும் உணர்ந்தார். அதனால் அவரது மனப்பான்மையை ஏற்று நடக்க விருப்பம்கொண்ட பல பெண்களை ஒன்றாய்க்கூட்டித் துறவற வார்த்தைப்பாடில்லாத ஒரு சபையை உருவாக்கினார். இவர்கள் மனப்பூர்வமாகத் தங்களையே இறைவனுக்குக் கையளித்தனர். இறைவன் பெயரால் ஏழைகளுக்குத் தொண்டுசெய்தனர்.

இத்தகைய சபையை நிறுவி அது நடைபெறுவதை, மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு தம் குடும்பத்தில் வந்து சேர்ந்து, கணவன் இறக்கும்வரை கணவனுடன் வாழ்ந்தார். கணவன் இறந்தபின், மீண்டும் இந்தச் சபையினரோடு சேர்ந்து பணியாற்றிவந்தார்.

**சிந்தனைக்கு**

"சில நேரங்களில் குடும்பத் தலைவி, பீடத்தில் வீற்றிருக்கும் இறைவனை விட்டுவிட்டு, அதே இறைவனைக் குடும்பப் பொறுப்பான செயல்களில் கண்டு மகிழவேண்டும்" என்று பிரான்செஸ் சொல்லியிருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 40.



## உளமாற்றம் - காலத்தின் கட்டாயம்

### வேண்டாம் எண்டாலும் விடுகுதில்ல!

கம்பளி மூட்டை ஒன்று ஆற்று வெள்ளத்தில் மிதந்து போய்க்கொண்டிருந்தது. அதனை எடுக்கவேண்டும் என்று ஆற்றங்கரையில் நின்ற ஒருவன் ஆசைப்பட்டான். ஆற்றில் பாய்ந்து அம்மூட்டையைக் கரைசேர்க்கப் பாடுபட்டுக்கொண்டிருந்தான். நீண்டநேரப் போராட்டத்தின் பின்னரும் அவனின் முயற்சி கைகூடாமல்போகவே வெள்ளத்தில் அவன் அடித்துச் செல்லப்பட்டுக்கொண்டிருந்தான். இதனை அவதானித்துக்கொண்டு கரையில் நின்ற சிலர், "மூட்டையைக் கரைசேர்க்க முடியவில்லை என்றால், அதனை விட்டுவிட்டு வெளியேறு! வெள்ளம் அதிகமாகிறது! அது உனக்கு ஆபத்து! எனச் சத்தமிட்டார்கள். அவனோ, "மூட்டையை நான் எப்போதோ விட்டுவிட்டேன்! அதுதான் என்னை விடுதில்ல! அது கம்பளி மூட்டையல்ல, கரடி"! என்று கத்தினான்.

விட்டுவிட விரும்பினாலும் ஒட்டிக்கொண்டது – பற்றிக்கொண்டது – தொற்றிக்கொண்டது - விடுவதில்லை என்ற நிலையில்தான் இன்று பலர் காணப்படுகின்றார்கள். "குடிப்பழக்கத்தில் இருந்து விடுபடவேண்டும் என்பதை உணர்ந்தேன்! அதனால், அதை எப்போவோ விட்டுட்டன். ஆனால், அதுதான் என்னை விட்டபாடில்லை"! என்பதாகத்தான் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்ட அனேகமானவர்களின் அனுபவம் இருக்கின்றது.

ஒரு காலத்தில் மதுவை அவன் குடித்தான், இப்போது மது அவனைக் குடிக்கிறது. இதுவே அவனின் முன்னைய நிலைக்கும் பின்னைய நிலைக்கும் இடையேயுள்ள வித்தியாசமாகும். மேற்சொன்ன சம்பவத்தைப்போல கரடியைக் கைவிட்டாலும், கரடி, தான் பிடித்திருப்பவனை விடுவதாக இல்லை. "ஐயோ! வேண்டாம் இந்தச் சனியன் என்றாலும் அது விடுவதாயில்லை"! மேற்சொன்ன 'அது' ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கலாம்!

இவ்வாறான அனுபவங்களில் இருந்துதான் கிராமிய வழக்கில் "பிச்சை வேண்டாம் தாயே, நாயப் பிடி!" என்று கூறுகின்றார்கள் போலும்! இதே அர்த்தத்தில்தான், "வேலியில்போன ஓணானை மடியில் பிடிச்சிவிட்டது மாதிரி" எனக் கிராமிய வழக்கில் மேலும் ஆழமாக சொல்லுகிறார்கள்போல.

மாற்றம் எத்தகைய கடினமானதாக இருப்பினும் மாற்ற வேண்டிய தீமைகளை – அர்த்தமில்லாத பழக்கவழக்கங்களை– பொருளில்லாத சட்டதிட்டங்களை - மாற்றித்தான் ஆகவேண்டும் என்பது சொல்லாமலே புரிந்துகொள்ளப்படவேண்டியது.

### மாற்றம், தவிர்க்கமுடியாத யதார்த்தம்

இன்று உலகில் அனைத்தும் மாற்றத்திற்கு உள்ளாகி வருவது தவிர்க்கமுடியாத யதார்த்தமாக மாறிவிட்டது. கடையில் அல்லது சுப்பர்மாக்கற்றில் வாங்கும் அனேகமான பொருட்களின் உள்ளீடு அல்லது அவற்றின் வெளித்தோற்றம் அடிக்கடி ஏதோ ஒரு மாற்றத்திற்கு உள்ளாகிவருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அம்மாற்றம் குறிப்பிட்ட பொருட்களின் நுகர்வோரை வாடிக்கையாகத் தொடர்ந்து வைத்திருப்பதற்கும் அப்பொருட்களின்பால் புதியவர்களைக் கவர்ந்திழுப்பதற்கும் ஏற்றாற்போல அமைந்திருப்பதைக் காணலாம். பொருட்களுக்கான விளம்பரங்களைக்கூட காலத்திற்குக் காலம் மாற்றத்திற்கு உள்ளாக்குகின்றார்கள். புதிய விளம்பரங்களை ஆக்குகின்றார்கள்.

இவ்வாறு, வாழ்க்கையோடுகூடிய அம்சங்களை நோக்கினால் அவை எல்லாமே மாற்றத்திற்கு உள்ளாகி வருவது தவிர்க்கமுடியாத ஒன்றாக ஆகிவருகின்றது. வங்கிகள், தனியார் வைத்தியசாலைகள், கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் என்று எதை எடுத்துக்கொண்டாலென்ன அவை அடிக்கடி பல்வேறுபட்ட மாற்றங்களுக்கு உள்ளாகிவருவதைப் பார்க்கலாம்.

### மாற்றம் மனிதத்தை வளர்த்திருக்கின்றதா?

மனிதனுக்கு வெளியே இத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அவனு(ளு)க்குள்/ அவனி(ளி)ல் எத்தகைய ஆக்கபூர்வமான மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பது மிகுந்த விவாதத்திற்குரியது. இல்லையென்றால் அடிப்படை வசதிவாய்ப்புக்கள்கூட இல்லாமல் வாழ்ந்த காலத்தில் இருந்த மனிதாபிமானத்தை அதிசொகுசுகள் பெருகிப்போன இந்நவீனயுகத்தில் மனிதன் இழந்து நிற்கின்றான் என்றால் அவனில் ஆக்கபூர்வமான மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது என்று எப்படிச் சொல்லமுடியும்?


மாற்றம் என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஒரு கவிதை மேற்குறிப்பிட்ட விவாதத்திற்கு அணிசேர்க்கின்றது. "பூசையில், கனியாகிறது இலுமிச்சை; தீர்த்தமாகிறது தண்ணீர்; பிரசாதமாகிறது திருநீறு; மாறாமல் அப்படியே வருகிறான் பக்தன்"! என அக்கவிதை அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்றது. இதே பாணியில், "ஆலயத்திற்கு வெளியே செருப்புக்கள் கழற்றப்படுகின்றன. ஆனால் அழுக்குகள் உள்ளே போகின்றன"! என்று இன்னொருவன் குமுறுகின்றான். "எங்கள் ஊரில் ஒருவன் உள்ளுராட்சிமன்றத் தலைவரானார், பாராளுமன்ற உறுப்பினரானார், அமைச்சரானார், அயல்நாட்டுத் தூதுவரானார், இறுதிவரை மனிதனாகமலேயே மரணமானார்"! என மனிதனில் நடக்கும் மாற்றமடையாத மாற்றத்தை அவதானிக்கின்றான் வேறொருவன்.

ஒட்டுமொத்த மனுக்குலமும் இந்நிலைக்குப் பொறுப்புக் கூறவேண்டுமாயினும்; தனிமனிதர்கள், தனிமனிதர்களை ஒன்றிணைத்த சமூகங்கள் இந்த அதிநவீன யுகத்தில் மனிதத்தை வாழவைக்க மிகுந்த பிரயத்தனம் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதையும் கட்டாயமாக கோடிட்டுக் காட்டித்தான் ஆகவேண்டும். இக்குறிப்பு இல்லையாயின் மனிதநேயமும் மனிதாபிமானமும் இன்றைய உலகில் நின்று நிலைப்பதற்கு பாடுபடுகின்றவர்களின் உழைப்பைக் கொச்சைப்படுத்துவதாய் ஆகிவிடும்.

### தன்னுணர்வு இல்லாதவர்கள்!

விவசாயி ஒருவன் வந்து, என் மனைவி நாள்முழுவதும் ஆடு, மாடு, கோழி வளர்க்கிறாள். அதனால் வீடு முழுவதும் மூச்சுத்திணறும் அளவுக்கு நாற்றம் அடிக்கின்றது. இதிலிருந்து தப்பிக்க உடனடியாக ஒரு வழிசொல்ல வேண்டும்"! என மதப்பெரியார் முன்னால் வந்துநின்றான். அப்பெரியவர், உடனடியாக என்ன செய்வது? என யோசித்துவிட்டு, "உன் வீட்டின் யன்னல்களைத் திறந்துவிடு, நாற்றம் வெளியே போய்விடும்" என்றார். உடனே அவன், "வீட்டு யன்னல்களைத் திறப்பதா? சரிதான்! அப்புறம் என் புறாக்கள் பறந்துவிடுமே"! என்றானாம்.

தம்மில் திருத்தப்படவேண்டிய தவறுகளை வைத்துக்கொண்டு அவற்றைத் திருத்துவதற்கான எவ்விதமான எண்ணமோ, விருப்பமோ இல்லாமல் இருப்பவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். தாம் திருந்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாது தங்களில் காணும் அதேதவறுகளை அடுத்தவரில் காணுகின்றபோது அடுத்தவர் அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும் என எதிர்பார்ப்பவர்களாகவும் சிலவேளைகளில் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒருவகையில் தன்னுணர்வு இல்லாதவர்கள் என்றுதான் கூறவேண்டும். தன்னுணர்வு இல்லாதவர்கள் மாற்றம் காண்பது மிகக்கடினமானது. ஏனெனில் தங்களின் தவறுகள் அவர்களுக்குத் தவறுகளாகத் தெரிவதில்லை, அவ்வாறு தெரிந்தாலும் தங்களின் தவறுகளுக்குத் தாங்களே நியாயம் கற்பித்து அடுத்தவர் தவறுகளை ஊதிப் பெருப்பித்து பூதாகரமாக்கிவிடுவார்கள்.



### சாண் ஏற முளம் சறுக்குதல்

ஒருதடவை நான்கு நண்பர்கள் சேர்ந்து மது அருந்தியதில் நள்ளிரவு கடந்ததைக்கூடக் கவனிக்கவில்லை. அவர்களின் கிராமத்துக்கு ஆற்றைக் கடந்து சென்றாக வேண்டும். ஆற்றைக் கடக்க வள்ளத்தில் பயணிக்க வேண்டும். அந்த இரவுப் பொழுதில் வள்ளத்தைச் செலுத்துபவன் இல்லாததால் தாமே வள்ளத்தை வலித்துச் செல்லலாம் எனத் துணிந்தார்கள். அவ்வாறே ஒருவன் தண்டுகளால் வலிக்க ஏனைய மூவரும் அமர்ந்துகொண்டார்கள். ஒரு மணித்தியாலயத்தில் கரைசேர வேண்டிய வள்ளம், இரண்டு மூன்று, நான்கு மணித்தியாலங்களாகியும் கரைசேரவே இல்லை! அதற்குள் பொழுதும் மெல்லப் புலர்ந்தது, அவர்களுக்குப் போதையும் மெல்லத் தெளிந்தது. அப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது; கரையில் இருக்கும் மரத்துடன் வள்ளம் கட்டப்பட்டிருப்பது!

பொதுவாக, மாற்றத்தைப்பற்றி அனேகமானவர்கள் பேசுவார்கள், ஆனால், அவர்கள் மாற்றத்தை விரும்பாதவர்களாக இருப்பதை நடைமுறையில் பார்க்கலாம். உதாரணமாக மாற்றலாகி தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து வேறோர் இடத்திற்குப் போகப் பெரும்பாடுபடுவார்கள்! அவர்களை அசைப்பது மிகக்கடினமான காரியமாகிவிடும். தாங்கள் இருக்கும் இடமே உலகம் என எண்ணுபவர்கள் இவர்கள். கிணற்றுத் தவளைகளாக வாழ்பவர்கள். ஏனெனில் கிணற்றுக்குள் கிடக்கும் தவளை கிணறுதான் உலகம் என எண்ணிக்கொள்கின்றது. கிணற்றைவிட்டு வெளியே வருகின்றபோதுதான் உலகம் எத்தகையது என்பது அதற்குப் புரிகின்றது. அதுபோலவே மாற்றத்தை விரும்பாதவர்களின் நிலையும் இருந்துவிடுகின்றது.

### தனிமனித மாற்றம் இன்றியமையாதது

இங்கிலாந்து வெஸ்ற்மினிஸ்ரர் மறைமாவட்டத்தில் பணியாற்றி இறந்துபோன ஓர் ஆயரின் கல்லறையில், "எனக்கு இளவயதாகவும் சுதந்திரமாகவும் இருந்தபோது எனது எண்ணங்களுக்கு எல்லையே இல்லை. இந்த உலகத்தையே மாற்றிவிடவேண்டும் என்று கனவுகண்டேன். நான் வளரவளர, அறிவு கூடக்கூட இந்த உலகத்தை மாற்றமுடியாது என அறிந்துகொண்டேன். எனவே, எனது கனவுகளை சுருக்கிக்கொண்ட நான் எனது நாட்டை மட்டுமாவது மாற்றுவது என்று முடிவெடுத்தேன். ஆனால், அதுவும் அசைக்க முடியாததாகத் தெரிந்தது. ஆக, நான் வயதாகி தளர்ந்த நிலையில் எனக்கு நெருக்கமான எனது குடும்பத்தினரை மட்டுமாவது மாற்றலாம் என நினைத்தேன். ஆனால், அந்தோ அதுவும் என்னால் முடியவில்லை. அப்புறம் இதோ இங்கே மரணப்படுக்கையில் படுத்திருக்கும்போது நான் சட்டென்று உணர்ந்தேன். நான் என்னை மாற்றிக்கொண்டிருந்தால் அந்த உதாரணத்தைக்கொண்டு எனது குடும்பத்தை மாற்றியிருக்க முடியும். அவர்கள் அளிக்கும் ஊட்டம் மற்றும் உந்துதலைக் கொண்டு நான் எனது நாட்டைச் சீர்படுத்தியிருக்கலாம். அப்புறம் யார் கண்டார், நான் இந்த உலகத்தைக்கூட மாற்றியிருக்கு முடியும்"! என எழுதப்பட்டிருக்கின்றது.

மாற்றத்தை தனிமனித மாற்றம், சமூக மாற்றம் என அடிப்படையில் இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம்போல் தெரிகிறது. சமூக மாற்றத்தினால் தனிமனித மாற்றம் ஏற்படுவதுண்டு. ஆனால், பொதுவாக தனிமனித மாற்றம் எளிதான அதேவேளை மிகச்சாத்தியமான ஒன்றாகவும் அமைந்துவிடுகின்றது. அவ்வாறு தனிமனித மாற்றம் ஏற்படுகின்ற பட்சத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது சாத்தியமானதாக மாறிவிடும்.

இக்கருதுகோளை மேற்சொன்ன ஆயரின் அனுபவமும் உறுதிப்படுத்துவது புலனாகின்றது. ஊருக்கு உபதேசம் சொல்லிவிட்டு தனிமனிதனில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் சமூகமாற்றம் இடம்பெறும் என எதிர்பார்க்கமுடியாது!

### ஒன்றுகூட உலகத்தை மாற்றும்!

ஆகவேதான், ஒவ்வொரு மனிதனின் சொல்லிலும் செயலிலும், நோக்கிலும் போக்கிலும், நடத்தையிலும் நாளாந்த வாழ்க்கையிலும் ஆக்கபூர்வமான மாற்றம் ஏற்படுவது அவசியமாகின்றது. "ஒரு குழந்தை, ஓர் ஆசிரியர், ஒரு பேனா, ஒரு புத்தகம் உலகத்தை மாற்றும்"! என 2014ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசுபெற்ற 15 வயதான பாக்கிஸ்தானியச் சிறுமி மலாலா குறிப்பிடுகின்றாள். பாக்கிஸ்தானில் தீவிரவாதிகளால் சுடப்பட்டு உயிராபத்தில் இருந்து தப்பி, இப்போது பெண்களுக்கான கல்வி உரிமைக்காகப் போராடிவரும் இச்சிறுமி உண்மையில் பாராட்டுக்கும் வியப்புக்கும் உரியவளே!

காரணம், சமூக மாற்றம் அவசியமானது என்பதை உணர்கின்ற இச்சிறுமி, அம்மாற்றத்தை ஒவ்வொருவரும் அவரவர் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டே ஆரம்பிக்கலாம் என்பதை மிக யதார்த்தபூர்வமாகக் கூறுவது மனுக்குலத்திற்கு அர்த்தம் சேர்க்கின்றது.

நாம் வாழும் உலகம் (சமூகம்) மாற, நான் மாற்றம் காண்பேனா? (கருத்துக்களையும் விமர்சனங்களையும் எழுதவதோடு, தொடர்ந்து இத்தொடர் வேண்டுமா? என்பதைக்கூட அன்புராசாவுக்கு anpuomi1970@gmail.comக்கு எழுதலாம்)!


## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னர பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம் .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருநிலைப்படுத்தப்படவுள்ள
# புதிய குருக்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்



## மன்னார் மறைமாவட்டத்திற்கு அறுவர்

### யே. அமலராஜன் குருஸ் (டாலி)

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், தலைமன்னார்ப் பங்கு, தலைமன்னார்க் கிராமம் புனித லோரன்சியார் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி ச. யேசுதாசன் குரூஸ், யே. மரிய றோஸ் தம்பதிகளின் புதல்வனாக 16.11.1982இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை தலைமன்னார் மன்/ லோரன்சியார் றோ. க. த. க. பாடசாலையிலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் வின்சென்ட் பற்றிக் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவுசெய்தார்.

30.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர், வங்காலை, காத்தான்குளம் ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 09.04.2015 அன்று மாலை 4.30 மணிக்கு தலைமன்னார் புனித லோரன்சியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### பா. றொசான்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், அடம்பன் பங்கு, இத்திக்கண்டல் கிராமம் புனித அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி பெஞ்சமின் பாலசுந்தரம், அந்தோனிப்பிள்ளை மதலேனாப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாக 09.01.1986இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மன்/ பாலைக்குழி றோ. க. த. க. பாடசாலையிலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் எல். ஞானாதிக்கம் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

30.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர், மன்னார் பேராலயம், தலைமன்னார் ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 11.04.2015 அன்று காலை 9.00 மணிக்கு இத்திக்கண்டல் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### இ. நீக்கிலஸ் (நிசாந்தன்)

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், பறப்பாங்கண்டல் பங்கு, உயிர்த்தராசன்குளம் கிராமம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி சந்தியோகு இராசானந்தம், திருச்செல்வம் கிறிஸ்மேரி தம்பதிகளின் புதல்வனாக 22.03.1986இல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை மன்/ உயிர்த்தராசன்குளம் றோ. க. த. க. பாடசாலையிலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் இம்மானுவேல் (அமதி) அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

30.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர், தலைமன்னார், பேசாலை ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 13.04.2015 அன்று காலை 9.30 மணிக்கு உயிர்த்தராசன்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### நி. மேரி பெய்லன் குரூஸ் (லொயிஸ்ரன்)

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், வங்காலைப் பங்கு, வங்காலைக் கிராமம் புனித ஆனாள் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி பிரான்சிஸ் நித்தியானந்தன் குரூஸ், பிலேந்திரன் செபமாலை மரியம்மா பீரிஸ் தம்பதிகளின் புதல்வனாக 24.07.1986இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர்களான வி. அவிதப்பர், பி. யேசுராஜா ஆகியோரினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

30.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் நானாட்டான், மன்னார் பேராலயம் ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை 12. 04. 2015 அன்று காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.



பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய குருக்களை மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்தி வரவேற்கின்றது, இறையாசீர் கூறுகின்றது.



### பே. சார்லஸ் தயாளன் கூஞ்ஞ

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், வங்காலைப் பங்கு, வங்காலைக் கிராமம் புனித ஆனாள் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி ஆரோக்கியம் பேதுருப்பிள்ளை கூஞ்ஞ, அந்தோனி பத்திமா சோசை தம்பதிகளின் புதல்வனாக 25.08.1986இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் பி. யேசுராஜா அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

30.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் தோட்டவெளி, பள்ளிமுனை ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 12.04.2015 அன்று காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### ப. யோண் ஸ்ரனின் சோசை (சாந்தன்)

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இவர், வங்காலைப் பங்கு, வங்காலைக் கிராமம் புனித ஆனாள் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி ஆரோக்கியம் பங்கிராஸ் சோசை, யோண் மாசில்லா லெம்பேட் தம்பதிகளின் புதல்வனாக 13.11.1986இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் பி. யேசுராஜா அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

30.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர், பள்ளிமுனை, வேப்பங்குளம் ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 12.04.2015 அன்று காலை 6.00 மணிக்கு வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

## அமதிகள் சபைக்கு இருவர்

### ம. பற்றிக் பிரசாந் (அமதி)

அமலமரித்தியாகிகள் துறவற சபையைச் சேர்ந்த இவர், பறப்பாங்கண்டல் பங்கு, பறப்பாங்கண்டல் கிராமம் புனித கார்மேல் மாதா ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி சந்தியாப்பிள்ளை மனுவேற்பிள்ளை, மனுவேற்பிள்ளை றீற்றம்மா தம்பதிகளின் புதல்வனாக 10.06.1981இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/ பறப்பாங்கண்டல் றோ.க.த.க. பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை மன்/ முருங்கன் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் ச. எமிலியானுஸ்பிள்ளை அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

13.11.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் பதுளை மறைமாவட்டம், லுணுகலைப் பங்கு, புனித லூர்து அன்னை ஆலயத்தில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 09.04.2015 அன்று காலை 9.00 மணிக்கு பறப்பாங்கண்டல் புனித கார்மேல் மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### சீ. அல்ஸ்ரன் றோச் (அமதி)

அமலமரித்தியாகிகள் துறவற சபையைச் சேர்ந்த இவர், விடத்தல்தீவுப் பங்கு, விடத்தல்தீவு கிராமம் புனித மரியன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி நீக்கிலாப்பிள்ளை சீமான்பிள்ளை, அடைக்கலம் மேரி கிறேஸ் தம்பதிகளின் புதல்வனாக 10.06.1982இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/ தூய யோசவாஸ் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் அற்புதராஜ் (அமதி) அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

13.11.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் பருத்தித்துறை, முழங்காவில் ஆகிய பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 15.04.2015 அன்று காலை 9.30 மணிக்கு விடத்தல்தீவு புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

## கிளறீசியன் சபைக்கு இருவர்

### ம. லியோன் றொகான் பீரிஸ் (றொகான்)

கிளறீசியன் துறவற சபையைச் சேர்ந்த இவர், பேசாலைப் பங்கு, பேசாலைக் கிராமம் புனித வெற்றிநாயகி ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி பிலிப்பு மத்தேஸ் பீரிஸ், அருளானந்தம் மரியநாயகி தம்பதிகளின் புதல்வனாக 26.03.1984இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/ பத்திமா மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை நீர்கொழும்பு நீர்/ தோப்பு மகா வித்தியாலயத்திலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் வின்சன் பற்றிக் அமதி அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், நீர்கொழும்பு புனித கிளாரட் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

19.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் புனித சவேரியார் ஆலயம், அளிகம்பை, மட்டக்களப்பில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 09.04.2015 அன்று காலை 9.00 மணிக்கு பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### ச. யேசுதாசன் (டின்சன்)

கிளறீசியன் துறவற சபையைச் சேர்ந்த இவர், வஞ்சியன்குளப் பங்கு, வஞ்சியன்குளம் கிராமம் புனித இராயப்பர் ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி செபமாலை சவிரி, யக்கோபு ஞானப்பு தம்பதிகளின் புதல்வனாக 08.08.1985இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/ வஞ்சியன்குளம் றோ.க.த.க. பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை மன்/ இலகிடிப்பிட்டி றோ.க.த.க. பாடசாலையிலும் உயர் கல்வியை நீர்கொழும்பு நீர்/ தோப்பு மகா வித்தியாலயத்திலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் அருட்பிரகாசம் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்ற இவர், நீர்கொழும்பு புனித கிளாரட் சிறிய குருமடத்தில் பாதம் பதித்து தன் ஆரம்ப உருவாக்கலை அங்கு பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியையும், இறையியல் கல்வியையும் நிறைவுசெய்தார்.

19.10.2014 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர், கிளிறீசியன் வெளியீட்டகம், புனித பிலிப்பு நேரியார் ஆலயம், கொழும்பு ஆகிய இடங்களில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை 10.04.2015 அன்று காலை 9.30 மணிக்கு வஞ்சியன்குளம் புனித இராயப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவக்காலச் சிறப்பிதழ்



## தவக்காலத்தில் கடைப்பிடிக்கப்படவேண்டிய மனமாற்றம் நோக்கிய செயற்பாடுகள்

# செபம், தபம், தர்மம்

தவக்காலம் அருளின் காலம், மீட்பின் காலம், நம்மை நிறைவாழ்வுக்கு இட்டுச்செல்லும் காலம். இறைவனின் நிபந்தனையற்ற அன்பினை நினைத்து உள்ளம் உருகி மனம் திரும்பும் காலம். நம் வாழ்கைப் பயணத்தைத் திருப்பிப் பார்க்க அழைக்கும் காலம். நம் தாய்த்திருஅவை, திருநீற்றுப் புதன் அன்று மனிதர் மண்ணிலிருந்து உருவானார் மீண்டும் மண்ணுக்கே திரும்புவார் என்பதை நினைவூட்டவே குருவானவர் நமது நெற்றியில் சாம்பலைப் பூசுகிறார். "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" (மத் 3:2) எனத் திருவிவிலியம் நமக்கு அறைகூவல் விடுக்கின்றது.



### மனம்மாற்றம்

"ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்கிறார் இறைவாக்கினர் யோவேல். மனிதர்கள் பலவீனத்தால், பாவச்சார்பால், பாவநாட்டங்களால், தீயச்செயல்களால், உணர்வுகளால் கடவுளைவிட்டுப் பிரிகின்றனர். உறவுகளை முறித்துக் கொள்கின்றனர். தன்னோடும், பிறரோடும், இயற்கையோடும், இறைவனோடும் இணைக்கப்பெற்ற உறவுநிலைகளை உடைக்கும்போதும் முறிக்கும்போதும் பாவம் செய்கின்றனர்.

எனவே மனிதன் தனது தீச்செயல்களை உணர்ந்து, அவற்றிற்காக மனம் வருந்தி, கடவுள் பக்கம் திரும்பி வரவேண்டும். உண்மையான மனமாற்றம் பெற இது செயலில் வெளிப்பட வேண்டும். "நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்" (மத் 3:8) என இறைவார்த்தை கூறுகின்றது.

பாவத்தில் வீழ்ந்த மனிதன் மனமாற்றம் பெற்று வாழவேண்டுமென விரும்பிய கடவுள் யோவேல் இறைவாக்கினர் வழியாக அழைக்கிறார். யோவேல் 2ஆம் அதிகாரத்தில், "நீங்கள் உண்மையான நோன்பிலிருந்து உங்கள் முழு இதயத்தோடு ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்கிறார். ஆம், நமது உள்ளத்தையும் இதயத்தையும் கடவுளுக்குக் கொடுக்கும்போது தானாக மனமாற்றம் வரும். குடும்பத்தில் அமைதி நிலவும். நினிவே நகரத்து மக்கள் நெறிகெட்டவர்களாய் பாவத்தில் வீழ்ந்ததனால் இறைவாக்கினர் யோனா அம்மக்களிடம் சென்று மனம்திரும்ப அழைக்கின்றார். நினிவே மன்னன்கூட சாக்கு உடை உடுத்தி, கடவுளிடம் மன்றாடி பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்டு, ஒரு இலட்சத்து இருபதாயிரம் மக்கள் மன்னிப்புப் பெற்றனர் என யோனா திருநூல் தெளிவாக்குகிறது.

### திருமுழுக்கு யோவான்

மனமாற்றத்திற்கு மக்களை அழைத்த திருமுழுக்கு யோவான், "மனம்திரும்பி நற்செய்தியை நம்புங்கள். விண்ணரசு நெருங்கி விட்டது. ஏற்கெனவே மரங்களின் வேரருகே கோடாரி வைத்தாயிற்று. நீங்கள் மனம் திரும்பியவர்கள் என்பதை உங்கள் செயலால் காட்டுங்கள்" என்று இறைவாக்குரைத்தார். மனமாற்றம் பெற மூன்று பண்புகளை வலியுறுத்துகிறார்.

### செபம், தபம் (நோன்பு), தானதர்மம்

### செபம்

செபம் என்பது இறைவனில் நாம் ஒன்றிப்பது, அவரோடு சங்கமிப்பது. கடவுளுக்கும் நமக்கும் உறவுப்பாலமாக இருப்பது செபமாகும். எனவே நமது வாழ்வை மேம்படுத்த, நெறிப்படுத்த செபம் நமக்குத் தேவை. முறிந்த உறவைச் சரிசெய்து திரும்ப ஒன்றுசேர செபம் அவசியம்.

### தபம் (நோன்பு)

நாம் கடவுளை நோக்கி மன்றாடும்போது நமது தீய எண்ணங்களை மாற்றி, உணவையும், ஆடம்பரத்தையும் குறைத்து, உடலையும் உள்ளத்தையும் அடக்கி, ஒரே எண்ணத்துடன் கடவுளோடு ஒன்றிப்பதாகும். ஒரு மேலான நோக்கத்திற்காக உடல் உள்ளத் தேவைகளைக் கட்டுப்படுத்தி வாழ்வதையே நோன்பு எனக் கொள்கிறோம். நோன்பு எல்லா மதங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு சிறந்த பக்தி முயற்சியாகும்.

### நாம் மனம்மாறுவதற்குரிய தவமுயற்சிகள்

பழைய ஏற்பாட்டில் மோசே நாற்பது நாள்கள் சீனாய் மலையில் தங்கிச் செபித்தார். உண்ணா நோன்பிருந்தார் (விப 24:18).

இறைவாக்கினர் எலிசா நாற்பது இரவும் பகலும் உண்ணாமலேயே நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார் (1 அர 19:8).

யோனாவின் போதனையைக் கேட்டு மனந்திரும்பிய நினிவே மக்கள் கடும் தவம் மேற்கொண்டனர் (யோனா அதி 3).

நம் ஆண்டவர் இயேசு பாலைநிலத்தில் நாற்பது நாள்கள் உண்ணா நோன்பிருந்து தவம் செய்தார் (மத் 4:2).

### அர்த்தமுள்ள நோன்பு

இப்பின்னணியில்தான் நாற்பது நாள் தவமுயற்சிகள் மேற்கொள்ளும் மரபு திருஅவையில் தோன்றியது. இன்றைய சூழலில், நாம் வாழும் இன்றைய நுகர்வுக் கலாச்சார சமுதாயத்தில் நோன்பு அதன் அர்த்தத்தை இழந்துவருகிறது. எனவே இன்றைய தேவை வெறும் உடல் சார்ந்த நோன்பு அல்ல. உள்ளத்தளவில் நோன்பு மனப்பான்மையை உருவாக்கக்கொள்வது இன்றியமையாதது. (எ.கா.) இத்தவக்காலத்தில் அன்றாட வாழ்கையில் தேவையற்ற ஆடம்பரங்களையும் பொழுதுபோக்கு அம்சங்களையும் குறைத்துக்கொள்ள வேண்டும்.

ஒப்புரவு செய்தல் தவக்காலத்தின் மற்றொரு அம்சமாகும். இறைவனோடும் பிறரோடும் ஒப்புரவு தேவை. பிறருக்கு மன்னிப்பு வழங்கி, ஒப்புரவு அருளடையாளம் வழியாக இறைவனிடமிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொள்ள இத்தவக்காலம் சிறந்த வாய்ப்பாக நமக்கு அமைகின்றது.

### விவிலியத்தில் மனமாற்றம்

### பழைய ஏற்பாட்டில்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தாமே மோசே வழியாக மீட்டுக்கொணர்ந்த இஸ்ரயேல் மக்களோடு யாவே இறைவன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அந்த உடன்படிக்கைக்கு பிரமாணிக்கம் இல்லாமல் இஸ்ரயேல் மக்கள் அதைமீறி நடந்தனர், பாவம் செய்தனர். ஆனால் மாறாத அன்புகொண்ட கடவுள் இறைவாக்கினர் வழியாக மனம்திரும்ப அழைப்புவிடுக்கிறார். குறிப்பாக ஆமோஸ், ஓசேயா, எசாயா, ஏரேமியா, எசேக்கியேல் இவர்கள் மூலம் மனமாற்றத்திக்காகக் கடவுளின் அழைப்பும் மனம்மாறாவிட்டால் வரும் விளைவுகள் பற்றிய எச்சரிக்கையும் மிகுந்து காணப்படுகின்றன.

### மனமாற்றத்தின் மாதிரி

சக்கேயு – லூக் 19:1-10
சமாரியப் பெண் - யோவான் 4:1-42
ஊதாரி மகன் - லூக்கா 15:11-32
ஆகியவை சில எடுத்துக்காட்டுகள்.

### நாமும் மனமாற்றமும்

எங்கும் மாற்றம், எதிலும் மாற்றம் என்ற நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் உலகில் மனிதன் ஏனோ, தனது ஆன்ம வாழ்வில் இறைமனித உறவுகளை மேம்படுத்தவும் மாற்றங்களை வரவேற்கவும் தயங்குகிறான். கிறிஸ்தவர்களாகிய நமக்கு தவக்காலம் மனமாற்றத்திற்கான அரியதொரு வாய்ப்பு. இதுவே தகுந்த காலம். இன்றே மீட்பு நாள் (2 கொரி 6:2).

### தானதர்மம்

நாம் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறோம் என்பதைவிட, எப்படி வாழ்கிறோம் என்பதை உணரும்போதுதான் வாழ்வின் அர்த்தம் புரியும். தனக்குப் போகத்தான் தானம் என்பது அல்ல, தனக்கு உரியதைப் பிறருக்குக் கொடுத்து மகிழ்வதே தர்மம். இதையே இயேசு, "சின்னஞ்சிறிய சகோதரனுக்கு இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" எனக் கூறுகிறார். நாம் செய்வது என்ன? பிறருக்கு உதவிசெய்தல், நாம் தவறு செய்யாதிருத்தல், பிறர் செய்த தவறுகளைப் பொறுத்தல், ஆலயம் சென்று செபித்தல், சினம் கொள்ளாமை, பகைவரை ஏற்றுக்கொள்ளுதல், பகிர்ந்து வாழ்தல் ஆகிய பண்புகளை நாம் கண்டறிந்து வாழவும் அவற்றில் வளரவும் முன்வருவோம்.

"உனக்காகக் கசையடிபட்டு, முள்முடி சூட்டப்பட்டு, சிலுவையைச் சுமந்து சென்று, சிலுவையில் அறையப்பட்டு உயிர் துறந்தேனே, எனக்காக நீ இத்தவக்காலத்தில் என்ன செய்யப்போகிறாய்?" என இயேசு நம் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்கிறார்.

கீழே உள்ள தவக்காலச் செயல்பாட்டை அர்த்தமுள்ளதாய் ஆக்குவோம்.

### தவக்காலத்தில் நாம் கடைப்பிடிக்கக்கூடிய வழிமுறைகள்

(1) தவக்காலத்தில் நாற்பது நாள்களும் தவ உடை அணிதல்.
(2) ஒவ்வொரு நாளும் திருப்பலியில் பங்குபெறுதல்.
(3) குடும்பத்தில் நாள்தோறும் செபித்தல், தவத்திருப்பாடல்களைப் பாடுதல். இறைவார்த்தையை வாசித்து வாழ்வாக்குதல்.
(4) தனிமையில் (அ) குழுவாக தினமும் திருச்சிலுவைப் பாதை செய்து பாவிகள் மனம்மாற ஒப்புக்கொடுத்தல்.
(5) ஒவ்வொரு அன்பியப் பகுதிகளிலும் திருச்சிலுவைப் பாதை செய்தல்.
(6) அன்பியக் கூட்டங்களில் தவக்காலத்திற்கு ஏற்றாற்போல் நல்ல செயல்திட்டம் தீட்டுதல்.
(7) ஒப்புரவு அருளடையாளத்தில் பங்குபெறுதல்.
(8) குடும்பங்களைச் சந்தித்து, செபமாலை செபிக்கத் தூண்டுதல்.
(9) அடிக்கடி நற்கருணை சந்தித்தல், உண்ணா நோன்பு கடைப்பிடித்தல், புலால் உணவைத் தவிர்த்தல்.
(10) பீடி, சிகரெட், புகைப்பதை தவிர்த்தல், மது அருந்துவதை நிறுத்துதல்.
(11) தொலைக்காட்சி, சினிமா பார்ப்பதைக் குறைத்தல்.
(12) குடும்பத்திலோ, ஊரிலோ யாருடனாவது சண்டையிட்டும், பேசாமலும் இருந்தால் சமாதானம் செய்துகொள்ளுதல்.
(13) அருகிலுள்ள திருத்தலத்திற்கு பாதையாத்திரையாகச் செல்லுதல்.
(14) நோயால் துன்புறுவோர், வயோதிபர் போன்றோரைச் சந்தித்து ஆறுதல்கூறிச் செபித்தல்.
(15) சிக்கனம் செய்த பணத்தை, நாற்பது நாள்கள் பிடியரிசித் திட்டம் வழியாகச் சேமித்துவைத்த அரிசியை ஏழைகளுக்கு வழங்குதல்.
(16) தவமுயற்சிகளால் கிடைக்கும் பொருள்களைச் சேர்த்து பங்கில் பக்திச்சபைகள் மூலம் சமூக நலப்பணிகளைச் செய்தல்.
(17) மற்ற அன்பிய மக்களையும் தவவாழ்விற்குத் தூண்டுதல்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னா விளம்பரப் பலகை

"போராடித் தோற்றுப்பார். ஜெயித்தவனும் உன்னை மறக்கமாட்டான்".

கடவுளிடம் நம்பிக்கை இல்லாத பிள்ளை இருக்கலாம். ஆனால் பிள்ளைக்காக கடவுளிடம் வேண்டாத தாய் இருக்க முடியாது.

........................................

கடவுள் உன்னைச் சோதிக்கிறார் என்றால் கவலைப்படாதே. சிரித்துக்கொண்டு ஏற்றுக்கொள், ஏனென்றால் சோதிக்கத் தகுதியானவனாக உன்னை தேர்ந்தெடுத்துள்ளார் என்று.

"நம்மை வெறுப்பவர்கள் பகைவர்கள் அல்ல, நாம் வெறுப்பவர்கள்தான் பகைவர்கள் ஆகிறார்கள்"

........................................

துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே.

"வெற்றிக்கும் தேல்விக்கும் இடையில் இருக்கும் இடைவெளி தகுதிக் குறைவல்ல... ஆர்வக் குறைவுதான்....."

........................................

எதுவரை சென்றேன் என்பது முக்கியம் இல்லை. எதைநோக்கி எதற்காகச் சென்றேன் என்பதே முக்கியம்.

- இன்பங்கள் சேர்ந்துவருவதில்லை. துன்பங்கள் தனியே வருவதில்லை.
- அதிகம் பேசுபவர்கள் செயல் வீரர்களாக இருப்பதில்லை.
- பழிவாங்குதல் வீரம் அன்று, பொறுப்பதே வீரம்.
- மனிதர்களை அன்பினால் அரவணைத்துக்கொள்வதன் மூலமே இலகுவில் வசப்படுத்த முடியும்.

## தலிபான்களினால் கடத்தப்பட்ட தமிழகக் குருவானவர் விடுதலை

தலிபான்களினால் கடத்தப்பட்ட தமிழக கத்தோலிக்க அருட்தந்தை அலெக்சிஸ் பிரேம்குமார் கடந்த 23.02.2015 அன்று விடுதலைசெய்யப்பட்டார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தமிழகத்தின், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையைச் சேர்ந்த இவர் (47 வயது). அரசசார்பற்ற தொண்டுநிறுவனத்தின் சார்பில், கல்விப் பணிக்காக, ஆப்கான் அனுப்பப்பட்டிருந்தார். கடந்த வருடம் யூன் மாதம் பயங்கரவாதிகள் இவரைக் கடத்திச் சென்றனர்.


இவரை மீட்பது தொடர்பில், இரு நாட்டு வெளியுறவு அதிகாரிகளும், தீவிர ஆலோசனை நடத்தியதோடு இவரை மீட்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் நம்பிக்கை தெரிவித்திருந்தனர். இதேவேளை, ஆப்கான் பொலிஸார் நடத்திய தீவிர விசாரணையில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர். இதன்மூலம் இவரை தலிபான்கள் கடத்தியது உறுதிசெய்யப்பட்டது.

இந்நிலையில், கடத்தப்பட்ட எட்டு மாதங்களுக்குப்பின் தலிபான்கள், அருட்தந்தை அலெக்சிஸை 23.02.2015 அன்று விடுவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 10 மாணவர்களுக்கான வினா உ விடைத் தொகுப்பு - 2015 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மு/வற்றாப்பளை ம. வி, வற்றாப்பளை.



1. சிரியப் பேரரசை கி.மு. 167 - 164 க்கிடைப்பட்ட காலத்தில் ஆட்சிசெய்த அரசன் யார்? 4ம் அந்தியோக்கஸ்
2. பழைய ஏற்பாட்டில் 'ஞானம்' என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் என்ன? 'ஹொக்மா'.
3. 'ஹொக்மா' என்பதன் பொருள் என்ன?
வெற்றிகரமாகவும் ஆண்டவர்மீது கொள்ளும் அச்சத்தாலும் திருச்சட்டப்படி வாழ்க்கை நடத்தக் கிடைக்கும் ஆற்றலாகும்.
4. எபிரேய ஞானத்தின் பிரிவுகள் எவை?
குடும்ப மற்றும் கோத்திர ஞானம், அரசசபை ஞானம், ஆன்மீக ஞானம், அன்றாட வாழ்க்கைக்குரிய ஞானம்.
5. ஆன்மீக ஞானத்தில் எவை உள்ளடக்கப்பட்டுள்ளன?
வாழ்க்கையின் அர்த்தம், அதன் சிக்கல்கள், தீர்வுகள் பற்றிய கருத்தியலை உள்ளடக்கிய விளக்கங்கள் (யோபு, சபை உரையாளர்).
6. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் எவை?
1. யோபு 2. திருப்பாடல்கள் 3. நீதிமொழிகள் 4. சபை உரையாளர் 5. இனிமைமிகு பாடல்கள் 6. சாலமோனின் ஞானம் 7. சீராக்கின் ஞானம்.
7. "முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு. உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே, நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனதில் வைத்துச் செய்." என்ற திருவிவிலியப்பகுதி அமைந்துள்ள நூல் எது? நீதிமொழிகள் 3: 5-6.
8. ஞான இலக்கியத்தின் பிரதான குறிக்கோள் யாது?
அறிவுசார்ந்த முயற்சிகளைவிட, நீதி நேர்மையாகவும், சரியான முறையிலும் மக்களை ஊக்குவித்து, இறைவனுக்குப் பிரியமான வாழ்க்கை நடத்த வழிகாட்டுவதாகும்.
9. ஞானமுள்ள முறையில் செயற்படுவதென்பது யாது?
நாளாந்த வாழ்வில் நல்லவற்றை மட்டும் தெரிந்தெடுத்து வாழுகின்ற வாழ்க்கையாகும்.
10. ஞானமுள்ள பிள்ளையாகச் செயற்படுவதற்கு அவசியமானது என்ன? இறை வல்லமையைப் பெறுவதற்கு தினந்தோறும் இறைவேண்டலில் நிலைத்திருக்க வேண்டும்.
11. இயேசுவின் திருப்பாடுகள் லூக்கா நற்செய்தியில் எந்த அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது? லூக்கா 2: 54 - 23: 25
12. காட்டிக்கொடுக்கப்பட்ட இயேசு யாரால் கைதுசெய்யப்பட்டு தலைமைக்குருவின் வீட்டிற்கு அழைத்துச்செல்லப்பட்டார்?
யூதர்களால்
13. யூதர்கள் பயத்தினால் தப்பியோடினாலும் இயேசுவைப் பின்தொடர்ந்து தலைமைக்குருவின் வீடுவரை சென்றவர் யார்?
பேதுரு
14. ஆளுநர் பிலாத்துவின் முன்னிலையில் இயேசுவைப்பற்றிக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எவை?
"இவன் நம் மக்கள் அழியக்காரணமாக இருக்கின்றான், சீசருக்கு கப்பம் கட்டக்கூடாது என்கிறான், தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக்கொள்கிறான்" போன்றன.
15. ஏன் பிலாத்து இயேசுவை ஏரோதிடம் அனுப்பிவைத்தான்?
இயேசு ஏரோது அந்திப்பாசின் ஆட்சிக்குட்பட்ட கலிலேயா பகுதியைச் சேர்ந்தவர் என அறிந்துகொண்டதாலும், ஏரோது அந்த நாட்களில் எருசலேமில் இருந்தபடியாலும் இயேசுவை அவனிடம் அனுப்பிவைத்தான்.
16. இயேசுவுக்குப் பதிலாக விடுதலைசெய்யப்பட்ட சிறைக்கைதி யார்? பரபாஸ்
17. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் எது?
மண்டையோடு
18. "இயேசுவே நீர் ஆட்சியுரிமைபெற்று வரும்போது என்னையும் நினைவிற்கொள்ளும்" என்று கூறிய நல்ல கள்வனுக்கு இயேசு கூறிய பதில் என்ன?
"இன்று நீ என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பாய் என உறுதியா உனக்குச் சொல்கிறேன்"
19. இயேசு சிலுவையில் தொங்கியபோது இறுதியாகக் கூறிய வார்த்தை எது?
"தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்."
20. இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம்செய்ய முன்வந்தவர் யார்? அரிமத்தியா ஊர் யோசேப்பு
21. இயேசுவின் உயிர்ப்புப்பற்றி யோவான் நற்செய்தியில் எத்தனையாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது?
யோவான் 20: 1 - 8
22. "என் ஆண்டவரே என் தேவனே" என விசுவாச அறிக்கையிட்டவர் யார்? தோமா
23. "அகரமும், னகரமும், முதலும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே" என திருவிவிலியத்தில் எந்தப்பகுதியில் கூறப்பட்டுள்ளது? திருவெளிப்பாடு 22: 13.
24. இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சி யார்?
மகதலா மரியா
25. விண்ணக வாழ்வின் முன்னடையாளமாக இருப்பது என்ன?
இயேசுவின் உயிர்ப்பு.
26. உயிர்த்த ஆண்டவர் இயேசுவைக் காண்பதற்கு நாம் எவ்வாறு எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்?
பாவச் செயல்களைத் தவிர்த்து, செப, தவ, தியாக வாழ்க்கை வாழ்ந்து, அருளடையாளங்களைப்பெற்று எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.
27. இயேசு தமது சீடர்கள், திருத்தூதர்கள்மீது தூய ஆவியை அனுப்புவதாக எப்போது வாக்களித்தார்?
விண்ணேற்றம் அடைய முன்னர்.
28. பெந்தக்கோஸ்தே தினத்தில் தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட சீடர்களில் காணப்பட்ட மாபெரும் மாற்றம் என்ன?
வெவ்வேறான மொழிகளில பேசினர், திடம் கொண்டவர்களாக இறைவார்த்தைக்குச் சான்றுபகர்ந்தனர்.
29. தொடக்கத் திருச்சபையில் காணப்பட்ட சிறப்புப் பண்புகள் எவை? திருத்தூதர்களின் போதனைகளில் நிலைத்திருத்தல், நட்புறவு, அப்பம் பிட்குதல், இறைவேண்டல்.
30. திருமுழுக்குப்பெற்று திருச்சபையில் சேர்ந்த முதல் புறவினக் கிறிஸ்தவன் யார்? இத்தாலியா எனப்பட்ட படைப்பிரிவின் நூற்றுவத் தலைவன் கொர்னேலியு
31. திருத்தொண்டர்களாக நியமிக்கப்படுபவர்களுக்கு இருக்கவேண்டிய பண்புகள் எவை?
நற்சான்று பெற்றிருத்தல், தூய ஆவி அருளும் வல்லமையை பெற்றிருத்தல், ஞானம் நிறைந்தவர்களாய் இருத்தல்.
32. திருச்சபையின் முதல் மறைசாட்சி யார்?
இவர் எவ்வாறு கொல்லப்பட்டார்?
தூய ஸ்தேவான் (முடியப்பர்). கல்லால் எறிந்து கொல்லப்பட்டார்.
33. பன்னிரெண்டு திருத்தூதர்கள் மத்தியில் முதல் மறைசாட்சி யார்? தூய யாக்கோபு (இவர் தூய சந்தியாகு எனவும் அழைக்கப்படுகிறார்)
34. பிற இனத்தாரின் திருத்தூதர் என அழைக்கப்படுபவர் யார்?
புனித பவுல்
35. புனித பவுல் ஏன் திருமடல்களை எழுதினார்?
தூய பவுல் நிறுவிய சபைகளில் எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், கிறிஸ்தவ நம்பிக்கையோடு கூடவே கிறிஸ்தவக் கடமைகளை கற்றுக்கொடுப்பதற்கும், கிறிஸ்துவில் புதுவாழ்வை ஏற்படுத்துவதற்கும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி எழுந்த வினாக்களுக்கு விடையளிக்கவும் எழுதினார்.

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 139

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் தானியேல் நூல் அதி: 01ல் இருந்து அதி: 05 வரையிலான பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றது. இந்நூல் 12 அதிகாரங்களை மட்டுமே கொண்ட ஒரு சிறிய நூல். ஆயினும் கடவுளின் பல அற்புதச்செயல்கள் இதில் விபரிக்கப்படுகின்றன. எசேக்கியேல் இறைவாக்கினர் காலத்தின் தொடர் வரலாறாக இது காணப்படுகின்றது.

பபிலோனியாவில் வாழ்ந்த கல்தேயரின் அரசனான நெபுக்கத்னேசர் இறைவனுக்கு உகந்தவனாக வாழ்ந்ததால் அவனுக்கு இஸ்ராயலேரை அடிமைகளாக்கினார். இது மட்டுமல்ல எகிப்து உட்பட பல நாடுகளை வென்று அரசோச்சினான். இதை எசேக்கியேலின் நூல்கள் தெளிவாகச் சொல்கின்றன.

தானியேனின் காலத்தில் இந்நிலை முற்றாக மாறுவதை நாம் காண்கின்றோம். நெபுக்கத்னேசர் ஒரு தடுமாற்றமுள்ள மனிதனாகக் காணப்படுகின்றார். தானியேல் அவரோடு இணைந்த மூன்று இறைத்தூதர் மூலமாக இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரின் வல்லமையைக் காண்கின்றார். அவரை ஏற்றுக்கொண்டு வணங்குகின்றான். மீண்டும் தடுமாற்றம்! கடவுளிடமிருந்து விலகிப்போகின்றான். அதனால் தண்டிக்கப்படுகின்றான். மாடுகளோடு திரிந்து மாடுகளைப்போல் புல்லைத் தின்கின்றான். பனியிலும், மழையிலும், வெயிலிலும், குளிரிலும் அல்லலுற்று ஏழு ஆண்டுகளின்பின் கடவுளின் அருளால் நிரப்பப்பட்டு அரசனாகின்றான். இஸ்ரயேலின் ஆண்டவரை அறிக்கை இடுகின்றான்.

தொடர்ந்துவரும் அதிகாரங்களில் நெபுக்கத்னேசரின் மகனின் ஆட்சி எவ்வாறு அவனிடம் இருந்து பறிக்கப்பட்டது என்பதுபற்றிக் கூறப்படுகின்றது. இவ்வரசு தாரியுவுக்கும், சைரசுக்கும் வழங்கப்படுகிறது.

இக்காலத்தில் கல்தேயர் பபிலோனியர் தானியேலின் கடவுளான - இஸ்ராயரேலின் கடவுளை ஏற்றுக்கொண்டு வழிபட்டனர். இவற்றைத் தொடர்ந்து அரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் ஒன்றன்பின் ஒன்றாக இந்நூலில் விளக்கப்படுகின்றன. இந்நிகழ்வுகளோடு எகிப்து பாரசீகம் ஆகிய நாடுகளும் தொடர்புபடுகின்றன.

தானியேலின் நூலைப் படிக்கும்போது எதிர்பாராத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாடகத்தைப் பார்ப்பதான உணர்வு நம்மில் ஏற்படுகின்றது.

### தொடர்ந்து நமது வினாக்களுக்கு வருவோம் :

01. நெபுக்கத்னேசர் மன்னன் தான் அடிமைப்படுத்திக்கொண்டு வந்த யூதரிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுத்து மூன்று ஆண்டுகள் பயிற்சி அளித்து, தம் முன்னே கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அக்கட்டளைப்படி பயிற்சிக்காத் தெரியப்பட்ட நால்வர் யார்?
02. பபிலோனிய ஞானிகளை அழிப்பதற்கு அரசனால் நியமிக்கப்பட்ட அதிகாரி யார்?
03. "கடவுளின் திருப்பெயர் என்றென்றும் வாழ்த்தப்படுவதாக. ஏனெனில் ஞானமும் வல்லமையும் அவருக்கே உரியன. காலங்களையும் பருவங்களையும் மாற்றுபவர் அவரே. அரசர்களை விலக்கி மாற்று அரசர்களை நிலைநிறுத்துபவர் அவரே. ஞானிகளுக்கு ஞானத்தை வழங்குபவர் அவரே. அறிவாளிகளுக்கு அறிவை வழங்குபவர் அவரே" யாரால்? எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
04. பெல்தசாச்சர் என்பவர் யார்?
05. மன்னன் நெபுக்கத்னேசர் ஏன் தானியேலை பபிலோன் முழுவதற்கும் ஆழுனராக நியமித்தான்?
06. நெபுக்கத்னேசர் அரசன் சரத்தராக்கு மேசாக்கு, ஆபேத், நெகோ எனப்பெயரிடப்பட்டிருந்த யூதர்களைக்கட்டி நெருப்புச் சூளையில் போடும்படி கட்டளையிட்டது ஏன்?
07. நெபுக்கத்னேசர் மன்னனுக்கு நடக்கப்போவது என்ன என்று கடவுள் கனவின் வழியாய் கூறுகின்றார்?
08. "அவரது ஆட்சியுரிமை என்றுமே அழியாது. அவரது அரசு வழி வழி நிலைக்கும். உலகின் உயிர்கள் அனைத்தும் அவர் திருமுன் ஒன்றுமேயில்லை. வான்படைகள் நடுவிலும் அவர் விரும்பியதையே செய்கின்றார்" என்ற புகழ்சிப் பாடல் நெபுக்கத்னேசர் மன்னனால் எப்போது பாடப்பட்டது?
09. பெல்சாட்சர் என்ற மன்னன் யாருடைய வாரிசு?
10. பெல்சாட்சரின் 1000 பேருக்கான விருந்தின்போது கை ஒன்று வந்து எழுதிய சொற்கள் எவை? அவற்றின் பொருள் என்ன?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 137 இற்கான கேள்விகளுக்கு 20 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.**

### பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
2. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
3. எம். தேவி, 3ம் வீதி, எமில்நகர், மன்னார்.
4. செ. இன்வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
5. ஏ. அஸ்வின், எமில்நகர், மன்னார்.
6. சி. சிவோனிதா, பாலைக்குழி, நானாட்டான்.
7. ஜே. றஞ்சனா பெணான்டோ, 3ம் வட்டாரம், வங்காலை.
8. ற. மெலோஷா குரூஸ், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
9. கி. டிப்னிக்கா சில்வா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
10. வி. அல்ஸ்ரன் குரூஸ், யூட்ஸ் வீதி, பேசாலை.

## பறவைகள் .... 8ஆம் பக்கத் தொடர்ச்சி

சரணாலயத்தின் பொருத்தப்பாடு

இக்குறித்த பகுதி சதுப்புநில நீர்த்தாவரங்களைக் கொண்டுள்ள பகுதியாகக் காணப்படுகின்றபோதிலும் குறித்த சில பகுதிகளில் மட்டுமே மாரி காலங்களில் இடம்பெயர்ந்துவரும் நீர்ப்பறவைகள் தங்குவது வழக்கம். தள்ளாடி - மன்னார் வீதியில் இரு மருங்கிலும் உள்ள வற்றுப்பெருக்கு மேடுகளிலும், தள்ளாடி முகாமை அண்டிய ஏரிப்பகுதிகளிலும் மாரி காலங்களில் மட்டுமே அத்தகைய நீர்ப்பறவைகளைக் காணலாம். பெரும்பாலான பகுதிகளில் அவற்றைக் காணமுடியாது. வரண்ட பிரதேசமான மன்னாரில் பெரும்பாலான காலப்பகுதி வரட்சியாக இருப்பதனால் அக்காலப்பகுதிகளில் இத்தகைய வெளியிட நீர்ப்பறவைகளைக் காணமுடியாது. உள்ளூருக்குரிய கொக்குகள், கோட்டான் எனப்படும் பறவையினங்கள், ஆட்காட்டிகள் இவைகளுடன் கழுதைகள், காட்டெருமைகள் போன்றவற்றையுமே அவதானிக்கலாம்.

இப்பிரதேசத்தில் பறவைகள் சரணாலயத்திற்குரிய சிறப்பம்சங்கள் சிறிய நிலப்பரப்பிலேயே காணப்படுவதனால் அக்குறித்த பகுதியை மட்டும் அதற்காக ஒதுக்கி ஏனைய பகுதிகள், அயற்கிராமங்களில் எதிர்கால அபிவிருத்தி கருதி விடுவிக்கப்படுவது அவசியம். மேலும் கட்டுமானப்பணிகள் பறவைகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எனக் கருதி இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்படுவது தவிர்க்கப்படுதல் அல்லது முகாம்களை மூடிவிடுதல் அவசியமாகும்.

## இலங்கைக்கென்று ... 6ஆம் பக்கத் தொடர்

திருத்தந்தையே, எமது நாடு மாபெரும் உலக மறைகளான பௌத்தம், இந்து. இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவற்றை ஒரு சேரப்பெற்ற பேறுபெற்ற நாடாகும். இதனால் அமைதியைக் கொணரக்கூடிய அற மற்றும் ஆன்மீக சக்தி எங்களுக்கு இருக்கிறது. இதனால் உண்மையான நல்லிணக்கத்தையும் நம்பிக்கையும் கொடுத்து என்றும் எப்போதும் நன்மையை நோக்கி உந்திச்செல்ல எம்மால் முடியும்.

திருத்தந்தையே, எமது இந்தத் தீர்மானத்தில் நிலைத்துநிற்கும்படி எம்மை ஆசீர்வதியுங்கள். நீங்கள் எம்மத்தியில் பிரசன்னமாயிருப்பதற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றோம். எமது அன்பிற்குரிய அழகான இல்லிடமான இலங்கைமீதும் அதன் அனைத்து மக்கள்மீதும் உங்களது தந்தைக்குரிய அப்போஸ்தலிக்க ஆசீர்களை வழங்குமாறும் இரந்து நிற்கின்றோம். நன்றி!

**மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்**

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : SA No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.152
## சீராக்கின் ஞானம் 1முதல் 30அதிகாரங்கள்

உங்கள் விடைகளை ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 03 | ❖ | | 04 | | 05 |
| | | | 06 | | | 07 | | 08 | |
| | | | | ❖ | ❖ | | | | 09 |
| | | 10 | 11 | | | | 12 | | |
| ❖ | | 13 | | | 14 | | | | 15 |
| | | | | ❖ | | | | | 16 |
| | | | | | | 17 | | 18 | 19 |
| | | | | | ❖ | | | | |
| | 20 | 21 | 22 | | | | 23 | | |
| 24 | | | ❖ | 25 | | | | | |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. உங்கள் தந்தையாகிய எனக்குச் .................. சாயுங்கள்.
4. நான் அழகு அளித்திடும்___செல்வத்தினுடைய ..........கள், என் மலர்கள்.
6. சமவெளியெங்கும் வளமான வயலைத்..................
10. உன் வழிகளைச் சீர்படுத்து, ........... நம்பிக்கைகொள்.
12. தாகம் கொண்___போன்று ............. தன் வாயைத் திறப்பாள்.
13. .............. கணவரை___அவருக்கு___ உருவாக்கும்.
22. கன்னிப் ............... உற்றுநோக்காதே.
24. நீ............. நிலையில்___ நண்பர்களாய் இருப்பார்கள்.
25. அவர்களுக்குப் பதிலாக.............. அமர்த்துகிறார்.

### வலமிருந்து இடம்
5. என் .................. வயிராற உண்ணுங்கள்.
8. அறிவுக்கூர்மை கொண்டோரின் பேச்சு............ தருகின்றது .
9. பொய் பேசுதல் மனிதருக்கு அருவருக்கத்தக்க.............. ஆகும்.
15. ............. நிலவுபோல மாறுபடுவர்.
16. அறிவிலார் சிந்திக்குமுன் .................. .
18. கண்ணியினின்று தப்பி ஓடும்........... போல் ஓடிவிட்டார்.

### மேலிருந்து கீழ்
1. அன்னையரை மேன்மைப்படுத்துவோர்............ திரட்டி___ ஒப்பாவர்.
2. ஆண்டவர் உன்னைத் தண்டியாமல் ............
3. ............... பனிபோன்று மண்ணுலகை மூடிக்கொண்டேன்.
5. மனிதரின் ................ கண்டுவிடுமோ___ அஞ்சுகிறார்கள்.
7. அப்போது உன் வீட்டாரின் ............. ச் சொற்களை நீ கேட்கமாட்டாய்.
8. .................. ப் பற்றுள்ளோர்மீது அதற்கு ஆற்றலில்லை.
10. .................. ப் பணிசெய்வோர் ___ புரிகின்றனர்.
14. மூடரின் உள்ளம் ஓட்டைக் .................... போன்றது.
17. உன்னத இறைவன்___ நினைத்துப் ...................
18. அவரது படைத்திரள்___தமது ...................... யை எடுத்துரைக்கின்றது.
19. தங்களுக்கு எதிராகவே குற்றம் ................ நீதிமான்களென யூரே கணிப்பர்.

### கீழிருந்து மேல்
8. ஒருகால் அதைச் செய்திருந்தாலும் ......... மேலாவது செய்யாதிருப்பார்கள்.
10. ஆண்டவரிடம் கொள்ளும் ......... மாட்சியும் பெருமையுமாகும்.
11. வானங்களில் நான் வாழ்ந்து ................
12. அதன் முகம் இரும்பு நுகம் .............. சங்கிலிகள் வெண்கலச் சங்கிலிகள்.
17. தக்க நேரம் .................... .
18 புறங்கூறுவோர் தங்களையே .................. படுத்திக்கொள்வர்.
20. ___ முன் உன்னையே .................. கொள்ளாதே.
21. உன் தகுதிக்கு ஏற்ப உன்னையே நீ ................
22. ................ அழகால் ___பிறழ்ந்துள்ளனர்.
23. அடுத்திருப்பவருக்கு ___தேவைகளில் ........................ கொடு.
24. உன் செல்வங்களில் ................ வைக்காதே .
25. உண்மையான___ ஒபீர் நாட்டுப் பொன்னுக்காகவும் ............... மாற்றாதே.

## தவக்காலத்தில்.... 12ஆம் பக். தொடர்.

(18) பங்குப் பேரவை, திருவழிபாட்டுக்குழு, அன்பியங்களின் வழியாக தவக்காலத்தைச் சிறப்பிக்க முன்வருதல்.
(19) பல ஆலயங்களுக்குச் சென்று சிறந்த திருச்சிலுவைப்பாதை செய்து செபித்தல்.
(20) தவக்காலத்தில் தியானங்களில் பங்குபெறச்செய்தல்.
(21) வீதிகளில் சிலுவைப்பாதை செய்தல்.
(22) வாரம் ஒரு பங்குக்குச் சென்று மறைமாவட்டக் குருக்கள் அனைவரும் சேர்ந்து தங்கள் மறைமாவட்டத்தில் ஒப்புரவு வழிபாட்டையும் அருளடையாளத்தையும் வழங்குதல்.
(23) பொதுநிலையினர் தவக்கால வெள்ளிக்கிழமைகளில் பங்குகளின் கிளையூர்களுக்குச் சென்று சிலுவைப் பாதை நடத்துதல்.

**நன்றி: தோழன் 2015.**
**எழுத்துரு : வேதியர் எஸ். பிரான்சிஸ்**

## மடு அன்னையின்... 1ஆம் பக். தொடர்

முதலாம் நாள் வழிபாட்டை தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின் புஸ்பராஜா தலைமையில் தாழ்வுபாடு பங்குமக்களும, இரண்டாம் நாள் வழிபாட்டை பள்ளிமுனைப் பங்குத்தந்தை எஸ். ஸ்ரீபன்ராஜா தலைமையில் பள்ளிமுனைப் பங்குமக்களும், மூன்றாம் நாள் வேஸ்பர் வழிபாட்டை குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் வங்காலைப் பங்குத்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகளாரின் பிரசன்னத்தில் வங்கலைப் பங்கு மக்களும் சிறப்பித்தனர்.

அடம்பன் பங்குத்தந்தை அருட்பணி. மில்ரன் தேவராஜ் (நியூட்டன்) தலைமையில் திருவிழாவுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## இலங்கை வரும் இந்திய ....
3ஆம் பக்கத் தொடர்ச்சி

இதற்கமைய 24.02.2015 செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகளும், பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் மற்றும் மன்னார் மாவட்ட செயலக அதிகாரிகளும் தலைமன்னார் பியர் பகுதிக்குச் சென்று இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் தலைமன்னார். பியர் துறைமுகத்தையும் பார்வையிட்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற போருக்குமுன் நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் இந்தியப் பிரதமரின் இலங்கைக்கான விஜயத்தின்பின் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இந்திய பிரதமர் மோடி தலைமன்னார் பியருக்கு தனது விஜயத்தை மேற்கொள்ளும்போது தற்பொழுது மதவாச்சியிருந்து திருக்கேதீஸ்வரம்வரை வருகின்ற புகையிரத சேவையை தலைமன்னார் பியர் வரைக்கும் நீடிக்கும் சேவையாக ஆரம்பித்து வைப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## விசாரணை ...... 1ஆம் பக்கத் தொடர்ச்சி

"இந்தப் பேரணி நீதி கேட்கும் வைபவமாகும். பிற்போடப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகச் சட்ட இயலிலே அடிப்படைத் தத்துவமாக உள்ளது. உள்ளக விசாரணை அறிக்கையில் நம்பிக்கை இல்லை என்பதனால்தான் நாங்கள் ஐ. நா. வை நாடுகிறோம். அவர்கள் எம்மைக் கைவிட்டுவிட்டதாகவும் ஏமாற்றிவிட்டதாகவுமே நாம் உணர்கிறோம். உள்ளக விசாரணை செய்வதாக அரசு கூறியிருக்கிறது. அதற்கு ஆறு மாதங்கள் போதாது. இரண்டு வருடங்கள்வரை நீடிக்கலாம். அது முழுமையாகச் செய்யும் விசாரணையாக இருக்காது. ஆகவே மீண்டும் பிற்போட்டு சில வேளைகளில் அடுத்த வருடம் மார்ச் மாதம் சமர்ப்பிக்குமாறும் அரசு கோரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதுதான் தத்துவமாகவும் நீதி மறுக்கப்படும் நீதியாகும்" என்று அவர் தெரிவித்தார்.

"இந்நாட்டில் உள்ளவர்கள்தான் குற்றம் செய்தவர்கள். குற்றம் செய்தவனை நீதிவானாக்குவது எப்படி? குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபரும் நீதிவானும் ஒருவராக இருக்க முடியாது. அதுவும் தத்துவம். பாரபட்சமற்ற தூய்மையான உள்ளம் கொண்ட, உலக சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அமைப்பு இதனைச் செய்ய வேண்டும்.

அரச ஆவணங்களின் அடிப்படையில் முன்னர் கூறப்பட்ட அறிக்கையின்படி ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் எட்டு மாதங்களில் அழிக்கப்பட்டுள்ளனர். போர் இறுதிக்கட்டத்தில் ஒக்ரோபர் மாதத்திலிருந்து மே மாதம் 19ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இவ்வளவு மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் உட்பட பலவகையினரும் கொல்லப்பட்டவர்களில் உள்ளடங்குவர்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"திட்டம் வகுத்து அந்த உள்நோக்கிலேயே அரசு போரை நடத்தியுள்ளது. அத்தகைய தீய நோக்கம் கொண்டவர்கள், இதுவரை எந்த விசாரணையும் நடத்தாதவர்கள் எதிர்காலத்தில் நடத்தவுள்ளதாகக் கூறுவதை நாம் நம்பமுடியாது.

இந்தப் பேரணி பயனுடையதாக இருக்கும். என்னிடம் மனு கையளிக்கப்பட்டுள்ளது. நான் நேரடியாக ஐ.நா. அலுவலகத்திற்குச் சென்று ஐ. நா. பிரதிநிதியிடம் மனுவைக் கையளிப்பேன் என்றும் அவர் கூறினார்.

## குருத்துவ வாழ்வில்.... 15ஆம் பக். தொடர்

தற்போது அமலமரித்தியாகிகளின் யாழ். மாகாண முதல்வரின் இல்லத்தில் பணியாற்றுகின்ற அடிகளார், பிரசித்திபெற்ற இசைமேதையும் விவிலியப் பேராசிரியருமான அருள்பணி. அதிரியான் யோசப் அ.ம.தி., அவர்களின் இளைய சகோதரர் ஆவார். 'பாதர் தியோ' என அனேகரால் அழைக்கப்படும் அருள்பணி. தியோஜினஸ் அவர்களும் ஒருசிறந்த இசைக் கலைஞன் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இவர் சமையல் கலையில் கைதேர்ந்தவர் என்பதுடன் நவீன தொழில்நுட்பக் கருவிகளை, குறிப்பாக கணனியைத் தானாகவே கற்று அதில் மிகச்சிறந்த பாண்டித்தியமும் ஆற்றலும் வாய்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தகவல் : செ. அன்புராசா அ.ம.தி.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 150ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
திருமதி. எ. பத்மராணி
மாஹாறம்பைக்குளம்,
வவுனியா.

**இரண்டாம் பரிசு:**
அ. டிலோஜனா
சூரியகட்டைக்காடு,
நானாட்டான்.

**மூன்றாம் பரிசு:**
ஞா. வினோதர்ஷி.
முதலைகுத்தி,
உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 80 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 75 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 150ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
02. லோ. தர்ஷினி வாஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
03. திருமதி. பிளண்ரீனா, சின்னக்கடை, மன்னார்.
04. ஞா. செலஸ்ரீன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
05. நி. மேரி சுஜாத்தா, தாமரைக்குளம், அடம்பன்.
06. திருமதி ம. றோ. அ. குருஸ், பி.சு.சே.ப.பணிமனை, மன்னார்.
07. திருமதி ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
08. ஆர். மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
09. அ. ஞானப்பிரகாசம், முதலைகுத்தி, உயிலங்குளம்.
10. நி. நி. நிஜித், அடம்பன்.
11. டி. யோசேப்பின், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
12. திருமதி சூ. குணசீலி, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
13. கு. நிர்மலா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
14. ஞா. கொலன்றீசா, முதலைக்குத்தி, உயிலங்குளம்.
15. பி. றோஸ் மெறின் றோச், பள்ளிமுனை மேற்கு, மன்னார்.
16. சி. கிளின்ரன் மொறாய்ஸ், முத்தரிபுத்துறை.
17. எஸ். அந்தோனியம்மா, கள்ளிக்கட்டைக்காடு, உயிலங்குளம்.
18. பி. பிறொய்ரன் லியோன், முத்தரிப்புத்துறை.
19. ஞா. வினோசர்மி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
20. ஏ. யூட்லின் அன்ரனிற்றா பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
21. எஸ். நிலோ, புதுக்கமம், உயிலங்குளம்.
22. ஞா. ஜெருஷன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
23. இ. நிதுசியா, திருக்குடும்ப கன்னியர் மடம், மிருசுவில்.
24. ம. மேரிகில்டா, திருக்குடும்ப கன்னியர் மடம், மிருசுவில்.
25. ஏ. ஜோகராணி, எழுத்தூர், மன்னார்.
26. மா. கிறின்சன் பெலிக்ஸ், வட்டுப்பித்தான் மடு, உயிலங்குளம்.
27. ஜெ. கனிஸ்ரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
28. ஆ. தபிஷன் குரூஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
29. எம். திரேசா, எமில்நகர், மன்னார்.
30. டீ. ஜோர்ச் கெனடி, சிறுத்தோப்பு, பேசாலை.
31. அ. டிறோன், பாப்பாமோட்டை, திருக்கேதிஸ்வரம்.
32. ரி. டக்ஷாஜினி, சின்னக்கடை, மன்னார்.
33. திருமதி ரி. ஜீவா, சின்னக்கடை, மன்னார்.
34. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
35. வி. சுமதி, முதலியார்குளம், செட்டிகுளம்.
36. ஜெகன் ரதி, கட்டுக்காரன்குடியிருப்பு, தலைமன்னார்.
37. வி. சாளினி, முதலியார்குளம், செட்டிகுளம்.
38. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
39. எஸ். கிருஷாந், சிறுத்தோப்பு, பேசாலை.
40. ச. மியூலின், காத்தான்குளம், நானாட்டான்.
41. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
42. இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
43. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
44. சூசை அனிஸ்ரன், அச்சங்குளம், நானாட்டான்.
45. ச. ஜாண்சன், நறுவிலிக்குளம், வங்காலை.
46. பி. சுமீத்தா பானு, நறுவிலிக்குளம், வங்காலை.
47. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
48. த. சௌமியா, எமில்நகர், மன்னார்.
49. பொ. அருசியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
50. லி. டிறோன்ஷன், 7ம் வட்டாரம், வங்காலை.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு - படுத்துகின்றோம்.

**கட்டணம்** : கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம் - பதிப்பாசிரியர்

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கைக்கு வருகைதந்தபோது

# விமான நிலையத்தில் ஆற்றிய உரை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 13ஆம் திகதி இலங்கை விஜயத்தை மேற்கொண்டு காலை 9.30 மணியளவில் இலங்கை சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். அவ்வேளையில் இலங்கை ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களும், கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் ஏனைய ஆயர்களும், அரச பிரமுகர்களும் திருத்தந்தையை வரவேற்றனர். அந்நிகழ்வில் திருத்தந்தை ஆற்றிய உரை:

மேதகு ஜனாதிபதி அவர்களே, அரச பிரமுகர்களே, அதிவணக்கத்திற்குரிய கர்தினால்களே, வெளிநாட்டுத் தூதுவர்களே, அன்புக்குரிய நண்பர்களே,

நீங்கள் எனக்களித்த உன்னத வரவேற்பையிட்டு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கையில் மேற்கொண்ட இவ்விஜயத்தின்மூலம் நாம் ஒன்றுசேர்ந்து செலவிடவிருக்கும் இந்நாட்களுக்காக நான் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

எழில்மிகு இயற்கைச் சூழல் காரணமாக இலங்கையானது 'இந்து சமுத்திரத்தின் முத்து' என அழைக்கப்படுகின்றது. அதையும் தாண்டி முக்கியமான விடயம் என்னவெனில் இலங்கையானது மக்களின் விருந்தோம்பல்தன்மை மற்றும் பலதரப்பட்ட கலாச்சார சமூக சமய சம்பிரதாயங்களை கொண்டிருப்பதன் மூலம் பிரபல்யம் அடைந்திருக்கின்றது.

மேதகு ஜனாதிபதி அவர்களே, உங்களுடைய புதிய கடமைகள் தொடர்பாக எனது நல்லாசிகளை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். எம்மை வரவேற்க இங்கு வருகைதந்திருக்கும் அரச பிரமுகர்கள் மற்றும் பணியாளர் அனைவருக்கும் எனது நன்றிகளைக் கூறிநிற்கின்றேன். இந்நாட்டு மக்களின் சமூக வாழ்வை முன்னிட்டு அளப்பரிய சேவைகளை ஆற்றுகின்றவர்களாக இங்கு வருகைதந்திருக்கும் வணக்கத்திற்குரிய சர்வமதத் தலைவர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும். அதேபோன்று இவ்விஜயத்தை இலகுபடுத்திய விசுவாசிகளுக்கும், பாடல்குழுவினர்களுக்கும் ஏனைய பணிகளை மேற்கொண்ட அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைக் கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன். உங்கள் நல்லெண்ணம், கருணை மற்றும் விருந்தோம்பல் தொடர்பில் நான் உங்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது இலங்கை அப்போஸ்தலிக்க பயணம் உண்மையிலேயே மேய்ப்புப்பணிசார் பயணமாக அமைந்திருக்கின்றது. கத்தோலிக்க திருச்சபையின் உலகளாவிய ஆயர் என்ற ரீதியில் இத்திருநாட்டின் கத்தோலிக்க மக்களைச் சந்திப்பதற்கும், அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும், அவர்களோடு இணைந்து செபிக்கவும் நான் இங்கு வந்திருக்கின்றேன்.

இவ்விஜயத்தின் உச்சக்கட்ட நிகழ்வாக முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளை புனிதர்நிலைக்கு உயர்த்தும் நிகழ்வு அமைகின்றது. இன, மத, வேற்றுமைகளை அகற்றி, கிறிஸ்தவக் கருணை மற்றும் அன்பை அனைவரோடும் பகிர்ந்து, மனித மாண்பை மதிக்கும் வழிமுறை தொடர்பாக அவர் எமக்களித்த வழிகாட்டல் அன்றுபோல் இன்றும் எமக்கு வழிகாட்டுகின்றது. அத்துடன் இலங்கையர் அனைவருக்கும் திருச்சபையின் அன்பு மற்றும் கரிசனையினை வெளிப்படுத்தவும், இச்சமூகத்தில் மக்களுடைய இயல்பு வாழ்வில் கத்தோலிக்க சமூகம் பங்குபெற அவர்களுக்கு இருக்கும் விருப்பத்தினை உறுதிப்படுத்தவும் எனது இவ்விஜயத்தின்போது எதிர்பார்க்கின்றேன்.

உலகில் சமூகங்கள் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் போர்புரிவது உண்மையிலேயே கவலைக்கிடமாக அமைந்துள்ளது. பழமையானதாகவோ அல்லது புதிதாகவோ ஏற்பட்டிருக்கும் வேற்றுமைகளை நிவர்த்திசெய்ய முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதன் மூலம் இன மற்றும் மத ரீதியான வன்முறைகள் உருவாகி இருக்கின்றது. பல ஆண்டு காலமாக இலங்கை உள்நாட்டுப் போரின் கொடூரத்தை அனுபவித்துள்ளது. சமாதானத்தைக் கட்டியெழுப்ப முயலும் இக்காலகட்டத்தில் பல்லாண்டு காலமாக ஏற்பட்ட வடுக்களை ஆற்றுப்படுத்தும் பணியிலே ஈடுபட்டு வருகின்றது. முரண்பாடுகளின் மூலம் ஏற்படும் அநீதிகள், அவநம்பிக்கை மற்றும் எதிர்ப்புக்களை அகற்றுவதோ அல்லது அதன் கசப்பான தன்மையை அகற்றுவதோ அவ்வளவு சுலபமான விடயமல்ல. இதற்கென நாம் நல்லதையே நினைக்க வேண்டும், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். தீமையை நன்மையால் மேற்கொள்வதன் மூலமும் (காண்க. உரோ 12:21), சமூக ஒற்றுமை, ஒப்புரவு மற்றும் சமாதானம் ஏற்படக்கூடிய நற்பண்புகளையும் விழுமியங்களையும் விதைப்பதன் மூலமுமே இதைச் செயல்வடிவம் ஆக்கலாம்.

காயங்களை ஆற்றும் செயற்பாட்டின்போது உண்மையை நோக்கிய பயணத்தில் ஈடுபடவேண்டும். இது பழைய காயங்களை திரும்பவும் திறப்பதற்காக அல்ல மாறாக நீதியை, ஆற்றுப்படுத்தலை, ஒற்றுமையை வளர்த்தெடுக்க இது மிகவும் முக்கியமாகின்றது.

அன்பார்ந்த நண்பர்களே, இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒப்புரவு செயல்பாடு மற்றும் மீள்கட்டுமானப் பணிகளில் பலதரப்பட்ட சமய சம்பிரதாயங்கள் பங்களிப்புச் செய்யவேண்டிய தேவையை நான் உறுதியாக நம்புகிறேன். இம்முயற்சிகள் வெற்றியளிக்கவேண்டுமாயின் சமூகத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஒருமித்துச் செயற்பட வேண்டும், அனைவரும் தமது குரலை வெளிப்படுத்த வேண்டும். தமது அபிலாசைகளை, தேவைகளை, எதிர்பார்ப்புக்களை, பயங்களை வெளிப்படுத்துவதற்கு அனைவருக்கும் சுதந்திரம் இருக்கவேண்டும். மிகவும் முக்கியம் வாய்ந்தது என்னவெனில் மக்கள் ஒருவரை ஒருவர் நேசித்து ஏற்றுக்கொள்ளவும்,

> "காயங்களை ஆற்றும் செயற்பாட்டின்போது உண்மையை நோக்கிய பயணத்தில் ஈடுபடவேண்டும். இது பழைய காயங்களை திரும்பவும் திறப்பதற்காக அல்ல மாறாக நீதியை, ஆற்றுப்படுத்தலை, ஒற்றுமையை வளர்த்தெடுக்க இது மிகவும் முக்கியமாகின்றது"





*விமான நிலைய வரவேற்பின்போது திருத்தந்தை இலங்கை ஜனாதிபதி மைத்திபால சிறிசேனாவுடன் அமர்ந்திருப்பதையும், விமானநிலைய வரவேற்பின்போது திருத்தந்தை உரையாற்றுவதையும் மேலே உள்ள படங்களில் காணலாம். திருத்தந்தை உரையாற்றியபோது கடும் காற்றுக் காரணமாக அவருடைய மேலாடை காற்றில் பறப்பதையும் காணலாம்.*

சட்டபூர்வமான வேறுபாடுகளை மதிக்கவும், ஒரே குடும்பமாக வாழ்வதற்குக் கற்றுக்கொள்ளவும் தயார்நிலையில் இருக்கவேண்டும். மக்கள் தாழ்ச்சியுடன், திறந்த மனதுடன் மற்றவர்களுக்கு செவிமடுக்கும்போது பொதுவாக மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளக்கூடிய விழுமியங்கள் வெளிப்படும். வேற்றுமைகளை அச்சுறுத்தலாகப் பார்க்காமல் அவற்றைச் சமூக அபிவிருத்தியின் வழிமுறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதி, ஒப்புரவு மற்றும் ஒற்றுமை நோக்கிய பாதை தெளிவாகத் தெரியவேண்டும்.

ஆகையால் மீள்கட்டுமானம் என்னும் முக்கிய பணியின்போது பௌதீக வளங்களை அதிகரிப்பதும், அடிப்படை வசதிகளைப் பூர்த்திசெய்வதும் மாத்திரமல்ல, மனித மாண்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தி அனைவரது அபிலாசைகளும் பூர்த்தியாகும் வகையில் செயல்படுவதும் அவசியமாகும். இலங்கையின் அரசியல், கலாச்சார மற்றும் சமயத் தலைவர்கள் தமது அனைத்து முக்கியமான வார்த்தைகளையும், செயல்களையும் உற்றுநோக்குவதன் மூலம் பெறப்படும் நன்மை மற்றும் ஆற்றுப்படுத்தலின் ஊடாக இலங்கைவாழ் மக்களின் உலக மற்றும் ஆன்மீக வாழ்வு மட்டில் வளர்ச்சி நோக்கிய திடமான பங்களிப்பைப் பெற்றுக்கொடுப்பார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

மேதகு ஜனாதிபதி அவர்களே, அன்புமிக்க நண்பர்களே, நீங்கள் எனக்களித்த வரவேற்புக்காக மீண்டும் ஒரு தடவை உங்களுக்கு நன்றிகூறுகின்றேன். நாம் இணைந்து செலவிடவிருக்கும் இந்நாட்கள் சகோதரத்துவம், கலந்துரையாடல், ஒப்புரவு, பகிர்தல் ஆகியவற்றின் நாட்களாக இருப்பதாக! இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் இந்நாட்டிற்காக இறைவனுடைய ஆசியை வேண்டிநிற்கின்றேன். மேலும் அனைவரும் அமைதியும் சுபீட்சமும் பெறுவதின் ஊடாக இந்நாட்டின் ஒளி எங்கும் பரவிட நான் செபித்து நிற்கின்றேன்.

## நீங்காத நினைவுகள்

### 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 06 1958



உதிர்வு 08 03 2012

### திருமதி.சந்தானாள் (மலர்)

(பொன்தீவுகண்டல், முருங்கன்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திபா 115:6)

பாசம் கொண்ட தாயாய்த் திகழ்ந்தீர்கள்
பார்போற்றும் சேயாய் நாம் வாழ வழிகாட்டினீர்கள்
பாராட்டி சீராட்டி எமை வளர்த்தீர்கள்
வருடங்கள் மூன்றாகிவிட்டதம்மா!
மீண்டும் எப்போ நீங்கள் எம் இல்லம் வருவீர்கள்?
எப்போது எமக்கு அமைதி பிறக்கும்? என்ற
ஏக்கப் பெருமூச்சோடும், தவிப்போடும் வாழ்கின்றோம்.
நீங்கள் விட்டுச்சென்ற நற்பண்புகளை நாம் வாழ
இறைவன் அருள்புரிவாராக!
உங்கள் ஆன்மா பேரின்ப இறையரசில் உவகைகொள்ள
எந்நாளும் நாங்கள் வேண்டுகின்றோம்.

*நீங்கா நினைவுகளுடன்:*
*குடும்பத்தினர். (கணவன், பிள்ளைகள்)*

## குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும்

# அருள்பணி. தியோஜினஸ் அ.ம.தி.

(அமரர் அருட்திரு அதிரியான் ஜோசப் (அமதி) அடிகளாரின் இளைய சகோதரர்)



அருட்பணி. தியோஜினஸ் (அ.ம.தி.) அவர்கள் யாழ்ப்பாணம் அச்சுவேலியைத் தம் சொந்தக் கிராமமாகக் கொண்டவர். அளவெட்டியைச் சேர்ந்த பெனடிக் வஸ்தியாம்பிள்ளை யோசப், அச்சுவேலியைச் சேர்ந்த மாக்கிறட் இராக்கினி நேசரட்ணம் ஆகியோருக்கு 1939ஆம் ஆண்டு தைத்திங்கள் 26ஆம் நாள் மானிப்பாயில் பிறந்தவர். 1956இல் அமலமரித்தியாகிகளின் துறவற சபையில் இணைந்து 1964ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 21ஆம் நாள் அச்சுவேலியின் 19ஆவது குருமணியாக அருள்பொழிவு செய்யப்பட்டார்.

1965 தொடக்கம் 1972ஆம் ஆண்டுவரை மறையுரைஞராகவும்; ஊர்காவற்துறை புனித மரியாள் பங்கு, மன்னார் புனித செபஸ்தியார் பங்கு, இளவாலை புனித ஆனாள் பங்கு ஆகிய பங்குகளின் உதவிப் பங்குத்தந்தையாகவும்; பின்னர் 1969 தொடக்கம் 1971ஆம் ஆண்டுவரை சுமார் 03 ஆண்டுகள் மன்னார் உயிலங்குளம் பங்கின் பங்குத்தந்தையாகவும் பணியாற்றி இருக்கின்றார்.

1972ஆம் ஆண்டில் பாக்கிஸ்தான் நாட்டில் மறைப்பணியாற்றச் சென்ற முதல் அமலமரித் தியாகிகளில் அருள்பணி. தியோஜினஸ் அடிகளாரும் ஒருவர். அந்நாட்டு மொழியைச் சரளமாகக் கற்று 30 ஆண்டுகள் அந்நாட்டில் நற்செய்தி அறிவிப்புப்பணியில் தம்மை அர்ப்பணித்திருக்கின்றார். பங்குத்தளப் பணிகள், பாடசாலைப் பணிகள், மிகப்பெரும்பான்மையான முகமதியரிடையே அடிப்படைக் கிறிஸ்தவக் குழுமங்களை உருவாக்குதல் போன்றவற்றில் மிகவும் ஈடுபட்டு இறையரசுக்காக உழைத்திருக்கின்றார்.

2001ஆம் ஆண்டிலிருந்து உரோமாபுரியிலுள்ள அமலமரித்தியாகிகளின் உயர் தலைமையகத்தில் 07 ஆண்டுகள் பணியாற்றியபின், 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டுவரை பிலிப்பைன்சில் 05ஆண்டுகள் பணியாற்றினார். பின் 2013ஆம் ஆண்டில் தம் தாயகமாம் யாழ். மாகாணத்திற்கு 43 ஆண்டுகால தூரதேச மறைபோதகப் பணியின்பின் சொந்த நாடு திரும்பி இருக்கின்றார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

## கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஐ.எஸ். தீவிரவாதிகள் வெறியாட்டம்!

# 21 எகிப்தியக் கிறிஸ்தவர்கள் தலைவெட்டிப் படுகொலை!

### கிறிஸ்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகக் கொலைசெய்யப்பட்டுள்ளனர்!




இஸ்லாமிய தேசத்தை - Islamic State) உருவாக்கப் போராடிவரும் ஐ.எஸ். என்ற தீவிரவாதிகள் லிபியாவில் 21 எகிப்திய கிறிஸ்தவர்களின் தலைகளை வெட்டி அதன் வீடியோவை இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். சிரியா, ஈராக்கில் பல்வேறு பகுதிகளைத் தமது வசம் கொண்டுவந்துள்ள ஐ. எஸ். தீவிரவாதிகள் கடந்த மூன்றாம் திகதி ஜோர்தான் விமானியொருவரைத் தாம் உயிருடன் எரித்தமை தொடர்பான வீடியோவை வெளியிட்டிருந்தனர். அந்தச்சம்பவம் உலகையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது.

இந்நிலையில் ஐ. எஸ். தீவிரவாதிகள் தற்போது லிபியாவில் 21 எகிப்திய கிறிஸ்தவர்களின் தலைகளை வெட்டிக்கொலை செய்துள்ளனர். அந்த எகிப்தியர்கள் 21 பேரும் விபியாவில் பிடிக்கப்பட்டவர்கள் என்று இந்தத் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். "கிறிஸ்தவ மதத்தை பின்பற்றும் நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி" என்று இரத்தத்தால் எழுதப்பட்ட தகவலுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த வீடியோவில், பிடிபட்டவர்களை அழைத்துச்சென்று லிபியாவின் தலைநகர் திரிபோலியில் உள்ள கடற்கரைப்பகுதியில் வைத்து தலையை வெட்டிக் கொலைசெய்வது பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தற்போது சிரியா, ஈராக்கை அடுத்து லிபியாவிலும் ஐ. எஸ். தீவிரவாதிகள் கால்பதித்துள்ளமை பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எகிப்திய அதிபர் அப்தெல் பட்டா அல்-சிசி, எகிப்தியக் கிறிஸ்தவர்கள் கொலைசெய்யப்பட்ட நிலையில் தீவிரவாதிகளுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அதன்படி விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றிருந்தன. மேலும், எகிப்தில் 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட 21 பேரும் தமது விசுவாசத்திற்காக உயிரைக் கொடுத்ததால் அவர்களை 'மறைசாட்சிகள்' என எகிப்திய (கொப்ரிக்) திருச்சபை அறிவித்துள்ளது.

## பாப்பரசர் கடும் கண்டனம்



21 எகிப்தியக் கிறிஸ்தவர்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் தலைதுண்டித்துக் கொலைசெய்தமைக்கு பாப்பரசர் பிரான்சிஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வத்திக்கானில் உள்ள ஸ்கொட்லாண்ட் தேவாலயத்தில் உரையாற்றிய பாப்பரசர் பிரான்சிஸ் இது குறித்துத் தெரிவிக்கையில், ஐ.எஸ். தீவிரவாதிகளால் 21 கொப்ரிக் கிறிஸ்தவர்கள் கொலைசெய்யப்பட்டமை கண்டிக்கத்தக்கது. மேலும், கத்தோலிக்க, ஆர்த்தோடக்ஸ், கொப்ரிக் அல்லது லூதரன்ஸ் என எந்தக் கிறிஸ்தவ பிரிவைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களின் நம்பிக்கைகள் கிறிஸ்துவைச் சார்ந்துள்ளதால் அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தின் கொள்கைகளையே பின்பற்றுகிறார்கள்.

எனவே கொல்லப்பட்டவர்கள் எந்தக்குற்றமும் செய்யாத நிலையில் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகத்தான் கொல்லப்பட்டிருப்பதாகவும், அவர்கள் இறப்பதற்கு முன்பு "இயேசுவே எங்களைக் காப்பாற்றும்" என்பதுதான் அவர்களின் இறுதி வார்த்தைகளாக இருந்ததாகவும் பாப்பரசர் தெரிவித்துள்ளார்.



படுகொலைச் செய்தியை அறிந்த கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழும் காட்சி!

## யார் இந்த எகிப்தியக் கிறிஸ்தவர்கள்?

கொப்ரிக் கிறிஸ்தவர்கள் (Coptic Christians) என்று அழைக்கப்படுகின்ற இவர்கள் எகிப்து நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாவர். இவர்கள் றோமன் கத்தோலிக்கர் அல்லாத ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர்கள்.

அப்போஸ்தலர் காலத்தில் இருந்த அலெக்சாந்திரியத் திருச்சபையினரான இவர்கள் நற்செய்தியாளரான புனித மாற்கு அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்பகாலக் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.

# நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 04 1941

உதிர்வு 20 03 2014

**Dr. செ. றொபேட் குரூஸ்**

(பேசாலை, மன்னார்.)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அவனியில் நின்று நீங்கள் ஆண்டவன் அடியில் சேர்ந்த
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஐயா உங்கள்
நினைவலைகள் நின்று நிழலாடுகின்றது நிஜமாய்!
அன்று நீங்கள் எம் அருகே இருந்து அறிவூட்டி
அரவணைத்து அமுதம் தந்து மருந்து தந்து
பாசம் தந்து பக்குவமாய் வளர்த்து
எமக்கு முன்மாதிரி காட்டினீர்கள் ஐயா!
இன்றும் உம் அன்பிற்காய் ஏங்குகின்றோம்.
ஆண்டவர் அன்பினில் உங்கள் ஆன்மா இளைப்பாறிட
இந்நாளில் வேண்டுகின்றோம்.

என்றும் உம் நினைவுகளில் வாழும்:
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

### 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 05 1937

உதிர்வு 21 03 2013

**திருமதி. பேணடேத் ஞானப்பிரகாசம்**

(ஜோசவ்வாஸ் வீதி, இறம்பைக்குளம்.)

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" (தி.பா 115:6)

ஐயிரண்டு திங்கள் எம்மைச் சுமந்து
அன்போடு ஈன்றெம்மை வளர்த்து
எம் உயர்வுகளில் மனம் குளிர்ந்த அம்மா!
ஆண்டவன் சமூகம் சென்று நீங்கள்
ஆண்டுகள் இரண்டு ஓடினாலும்
உங்கள் நினைவுகள் அழியாது ஒருநாளும்.....!

உங்கள் நினைவோடு வாழும்:
[illegible] - ஜேர்மன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25 05 1956

உதிர்வு 04 03 2012

**திரு. அதிரியாம்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை (நல்லதம்பி)**

(விவசாயத் திணைக்கள ஊழியர், ஆத்திக்குளி.)

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம், அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (திபா 115:6)

அன்பும் அமைதியும் உள்ளவராய் அகிலமீதில் திகழ்ந்தவரே
ஆயிரமாண்டு சென்றாலும் உமது அன்பை நாம் மறவோம்!
அல்லும் பகலும் உழைத்தெம்மை அறிவுபுகட்டி வளர்த்தீரே!
ஆண்டவர் பாதை நாம் நடக்க அழகாய் அறிவுரை பகர்ந்தீரே

கடவுள் பக்தி உள்ளவராய் கடமைதன்னைச் செய்தீரே
கள்ளம் கபடம் இல்லாமல் கடவுள் பயத்துடன் வாழ்ந்தீரே
குடும்பம் என்னும் கோயிலிலே குன்றாத் தீபம் ஆனீரே!

இறைவன் விரும்பி உமை அழைத்தார்
அவரே அமைதி அளித்திடுவார்.
இறைவனில் என்றும் இளைப்பாற
இனிதாய் நாமும் இறைஞ்சுகின்றோம்

நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.